R. GUNARATNA RAJAH
PARIS

THAYAGAM

28 . 1 . 94

75¢

உள்ளம்: 5
தேடல்: 30

# தாயகம்

## மாத்தயாவை விடுவிக்கும்படி சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

தெரிவுக்குழுவுக்கு ஆலோசனை சமர்ப்பிக்கும்படி

## பிரதமர் விடுத்த கோரிக்கையை புலிகள் நிராகரித்தனர்

**புலிகளின் பாதுகாப்பில் உள்ள பணயக்கைதிகளை செஞ்சிலுவைச் சங்கம் பார்வையிட்டது**

**பூனகரித் தோல்விக்கு பொறுப்பான இராணுவ அதிகாரிக்கு பதவிஉயர்வு**

**விசாரணை செய்தவருக்கும் பதவி உயர்வு**

## விடுவிக்கப்பட்ட பிரதேசம்: வதந்திகளில் வாழும் சமூகம்

**யாழ்.சென்ற லண்டன் பத்திரிகையாளர் தகவல்**

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

Second class mail Registration No:8435

# தாயகம்
'உண்மையைத் தேடி'

## மாத்தயாவை விடுவிக்கும்படி மன்னிப்புச் சபை கோரிக்கை

மாத்தயாவிற்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் மரண தண்டனை வழங்க வேண்டாம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. மரண தண்டனை குரூரமான, மனிதத் தன்மையற்ற தண்டனை என்பதால் எந்தக் கட்டத்திலும் மரண தண்டனை வழங்குவதை தாம் எதிர்ப்பதாகவும் இதனுல் அவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டாம் என்றும் மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

அத்துடன் அவர்களை செஞ்சிலுவைச் சங்கம் ஒழுங்காகப் பார்வையிட அனுமதிக்கும்படியும் கோரியுள்ளது.

3ம் பக்கம் பார்க்க..

## காமினி மீண்டும் ஐ.தே.கவில்

காமினி ஐ.தே. கட்சியில் சேர்ந்துள்ளார். நீண்ட எதிர்பார்ப்புகள், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள் மத்தியில் இந்த இணைவு நிகழ்ந்துள்ளது. எதிர்க்கட்சிகளை பலமிழக்கச் செய்து அடுத்த தேர்தலில் தனது வெற்றியை உறுதி செய்துகொள்ளும் விஜேதுங்கவின் தந்திரமாகவே இது கருதப்படுகிறது. இவருக்கு முக்கிய அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

ரெனி டி மெல், அனுரா போன்ருேரின் வரிசையில் தற்போது இவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிருர். ஐ.தே. கட்சியில் சேர்வதற்கான விண்ணப்பத்தை ஜனுதிபதியிடம் கையளித்து அங்கத்துவ அட்டையை அவர் பெற்றுக் கொண்டார். மத்திய மாகாண சபையில் காமினி உறுப்பினராவர். தனது பதவியை ராஜினுமா செய்த பின்னர் இவர் பாராளுமன்றத்தில் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த தேர்தலில் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவது, தொண்டமானின் உதவியுடன் மத்திய மாகாண முதல்வராவது போன்ற முயற்சிகளில் இருந்த காமினியின் கட்சி தற்போது சிக்கலான நிலையில் உள்ளது. லலித் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் கட்சியை நடத்திச் செல்வதாக கூறியுள்ளனர்.

## பணயக் கைதிகளை செஞ்சிலுவைச் சங்கம் பார்வையிட்டது

புலிகளின் பிடியில் இருக்கும் ஐம்பதுக்கு மேற்பட்ட படையினரையும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர். முன்பு பிடிக்கப்பட்ட 31 பேர், ஜானகபுரவில் பிடிக்கப்பட்ட நால்வர், பூனகரியில் பிடிக்கப்பட்ட பதினுறு பேர், தவருக வந்து சேர்ந்த நான்கு மீனவர்கள் என சகலரையும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பார்வையிட்டனர். பூனகரி முகாமில் பலர் பிடிபட்டிருக்கலாம் என்று கருதி முழுப் பேரினரும் அட்டவணையை கோரியிருப்பதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். ஒவ்வொரு முறையும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பார்வையிட்ட போதும் வெவ்வேறிடங்களிலேயே கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். இது பாதுகாப்பு காரணங்களுக்காக என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் பற்றி கூறிய டொமினிக் டுபோர் என்ற அதிகாரி 'இலங்கையின் மூன்ரும் உலகம் அது. மற்ற பகுதிகளை விட பத்தாண்டுகள் பின்தள்ளிய நிலையில் உள்ளது. யாரும் முதலீடு செய்ய விரும்பவில்லை' என்று கூறினுர்.

செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் வைத்திருப்பதால் புலிகளுக்கு ஆதரவானது என்ற தவருன கருத்து நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார். தங்களது செயற்பாடு தீர்வு காண்பதல்ல, சேதத்தைக் குறைப்பதே என்றும் மனித கௌரவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதே கடமை என்றும் கூறிய அவர் அரசாங்கம் பொருட்களை கொண்டு செல்வதற்கும் தபால்களை வினியோகிக்கவும் வங்கி பத்திரங்கள், பரீட்சை விஞத்தாள்களைக் கொண்டு செல்லவும் தாங்கள் செயற்படுவதாக கூறினுர்.

## பிரதமர் கோரிக்கையை புலிகள் நிராகரிப்பு

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும்படி பிரதமர் விடுத்த கோரிக்கையை புலிகள் நிராகரித்துள்ளனர். புலிகளின் அரசியல் செயலாளர் கரிகாலன் விடுத்த அறிக்கையில் அரசாங்கத்திற்கு எதுவித யோசனைகளையும் சமர்ப்பிக்கப் போவதில்லை என்றும் இவ்வாண்டு யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அடுத்த தேர்தலுக்காக தமிழர்களை ஏமாற்றி வெற்றி பெற அரசு முயல்கிறது என்றும் அவர் கூறினுர்.

# விடுவிக்கப்பட்ட பிரதேசம்;

## வதந்திகளில் வாழும் சமூகம்

**இங்கிலாந்து பத்திரிகையான இண்டிப்பெண்டன்ட் நிருபரான ரிம் மக்கிர்க் சமீபத்தில் யாழ்ப்பாபணம் சென்று வந்திருக்கிறார். இவர் அங்குள்ள நிலைமை பற்றி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**

யாழ்ப்பாணத்தில் ஒரு அரசியல் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை இரண்டு முரண்பட்ட சக்திகள் இழுக்கின்றன. ஒன்று ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்படுவதற்கு சாட்சியமாகக் கூடிய ஆர்வம், மற்றது எந்த நேரத்திலும் இலங்கை விமானப்படை விமானம் வந்து குண்டுகளைப் போடலாம்.

தமிழ் ஈழம் எனப்படும் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் குண்டுவீச்சுக்களும் மரண தண்டனைகளும் வழமையாகி விட்டன. வதந்திகள், இரகசியங்கள், தியாகம் போன்றவற்றால் உருவான சமூகமாகி விட்டது அது. சிறார்களான போர்வீரர்கள் தங்கள் கழுத்தில் சயனைட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பிரபாகரன் தலைமையிலான இந்த ஆட்சியில் பிடிக்கப்படுவதை விட தற்கொலை செய்வது மேலானது, சாதாரண சுயசிந்தனையை விட பைத்தியக்காரத்தனம் மேலானது. ஒரே நாளில் ஹீரோக்கள் துரோகிகளாகவும் முடியும்.

எதிரியின் குண்டுகள் வீழும் போதும் மரண தண்டனைகள் இரகசியமாக நிகழ்ந்து விட்டன, அல்லது புலிகளின் தலைமை குற்றங்களை மேலும் சுமத்துகிறது என்று வதந்திகள் வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டம் கிட்டுவின் மரணத்தின் நினைவாக நடத்தப்பட்டது. புலிகளின் முகாம்களுக்கு தோளில் ஒரு குரங்குடன் சென்று வந்த கிட்டு ஒரு பிரகாசமானவர் என்பதுடன் மனம் விட்டு சிரிப்பவரும் கூட. இவர் பிரபாகரனின் நெருக்கமான நண்பரும் நம்பிக்கைக்குரிய ஆலோசகரும் ஆவர். கடந்த யூலை மாதம் பிரபாகரன் மாத்தயாவையும் யோகியையும் கைது செய்தார்.

மாத்தயாவும் யோகியும் மரண தண்டனை பெறக் கூடும் என்பதால் தான் இத்தனை பேரும் அந்த கோவிலில் திரண்டிருந்தார்கள். தமிழர்கள் ஆர்வத்துடனும் பயங்கரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் மிதவாதப் போக்குடையவர்கள் என்று கருதப்பட்டதுடன் பிரபல்யமானவர்கள். அத்துடன் இலங்கை அரசுடன் சமாதானம் செய்யக் கூடியவர்கள்.

மாத்தயாவுக்கும் யோகிக்கும் பதிலாக தற்போது அனுபவமில்லாதவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இருபது வயதுகளில் உள்ளவர்கள் என்பதுடன் இவர்களது தகுதி பிரபாகரனுக்கான விசுவாசமும் யுத்த திறமையும் தான். எண்ணாயிரத்துக்கும் குறைந்த புலிகள் 90 ஆயிரம் இராணுவத்தினரை தடுத்து வைத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் விடுதலையில் நம்பிக்கை வைத்திருந்த பலர் தற்போது புலிகள் தங்களை அழிக்க ஆரம்பித்து விட்டார்களா என்று பயப்படுகிறார்கள். கடந்த வாரங்களில் ஒன்பது துரோகிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கிட்டுவின் மரணம் சம்பந்தமான விசாரணைகளில் நூறு போராளிகள் வரை மாற்றப்பட்டிருக்கிறார்கள். இயக்கத்தின் தத்துவார்த்தியான பாலசிங்கம் மீதும் சந்தேகம் எழுந்துள்ளது.

எட்டு லட்சம் தமிழர்கள் பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் முற்றுகையிடப்பட்டிருப்பதுடன் அடிக்கடி குண்டுகளும் ஷெல்களும் விழுகின்றன. தங்கள் தலைவர் பிரபாகரனுக்காக இறக்க விரும்பும் சிறுவர்களும் சிறுமிகளும் கொண்ட படையினை உருவாக்குவதற்கு இது மிகவும் தகுந்த சூழ்நிலை. பிரபாகரன் தனது மோசமான நடவடிக்கைகளுக்காக ஹ்மர் ரூஷின் தலைவர் பொல் பொட்டுடன் ஒப்பிடப்படுபவர். ஆனால் இவர் தனது படையினரை ஒரு பைத்தியக்காரத்தனம் மிகுந்த மதத்தினர் போல நடத்துகிறார்கள். இவரது சிறுவர்களான போராளிகள் குடிப்பதும் பாலியல் தொடர்புகளை வைத்திருப்பதும் புரட்சிகரமற்ற பாடல்களை பாடுவதும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

பாடசாலைகளில் கரும்புலிகளுக்கான ஆட்சேர்ப்பு வீடியோ காண்பிக்கப்படுகிறது. தாக்குதல் ஒன்றுக்கு தனது பெயர் தெரிவு செய்யப்பட்டதும் துள்ளிக்குதிக்கும் சிறுவனின் படம் காட்டப்படுகிறது. குண்டுகள் நிறைந்த வாகனத்தில் ஏறி சிதறி மரணமாகும் முன்னர் முகாமில் கடமையுணர்வுடன் குப்பை கூட்டுவதும் காட்டப்படுகிறது. கொலையாளிகளுக்கு கிடைக்கின்ற ஒரே சலுகை தங்கள் தாக்குதலுக்கு முன்னர் பிரபாகரனுடன் உணவு அருந்துவது தான்.

பூனகரித் தாக்குதலில் காயமடைந்த புலிகள் இருந்த வைத்தியசாலைக்கு சென்றேன். காயமடைந்த எவரும் 17 வயதுக்கு மேற்படவில்லை. பெரும்பாலானவர்கள் 14 வயதினர். தங்கள் ஆயுதங்களை வைத்த நிலையில் இவர்கள் குழந்தைத் தனம் கொண்டவர்களாக மாறியிருந்தனர். எறியப்பட்ட மருத்துவ டியூப்புகளை மீன்களாக மாற்றியிருந்தனர். அவர்களின் கழுத்தில் சயனைட் இல்லாத நிலையில் இவர்களைப் பார்த்தால் யாரும் இவர்களை போராளிகள் என்று யாரும் சொல்ல முடியாது.

# இந்தியா ஆட்சேபம்

இரண்டு படகுகள் மீது இலங்கைக் கடற்படை சுட்டதற்கு இந்தியா ஆட்சேபம் தெரிவித்துள்ளது. மீன்பிடிப்படகுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு மீனவர்கள் காயமடைந்ததுடன் மூவர் காணமல் போயுள்ளனர். காயமடைந்தவர்கள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு இந்தியா வுக்கு அனுப்பப்பட உள்ளனர். யாழ்ப்பாணத்திற்கு அருகில் இலங்கைக் கடற்பிராந்தியத்தில் இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்ததாகவும் துப்பாக்கிச் சூடு தற்செயலானது என்றும் இலங்கை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ராஜீவைத் தாக்கியவர் தேர்தலில்

ராஜீவ் இலங்கைக்கு வந்த போது துப்பாக்கியால் தாக்கிய கடற்படை வீரரான விஜித ரோகண என்பவர் கலைக்கப்பட்ட தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறுர். 228 பேர் இந்த தேர்தலில் போட்டியிட நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்துள் ளனர். ஐ.தே.க, சு.க மற்றும் இரு சிறிய கட்சிகள் தேர்தலில்போட்டியிடுகின்றன. இந்த மாகாண சபையில் 53 ஆசனங்கள் உள்ளன. சிறிய கட்சி ஒன்றின் சார்பிலேயே இவர்போட்டியிடுகிறுர்.

# கிரிக்கட் பயிற்சியில் யோகி

புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டயோகி தற்போது கிரிக்கட் பயிற்சியாளராக கடமையாற்றுவதாக அரசசார்புப் பத்திரிகையான சண்டே ஒப்சேர்வர் தெரிவித்திருக்கிறது. யாழ் இந்துக் கல்லூரியின் முன்னுள் மாணவரான யோகி தனது பழைய கல்லூரியிலேயே பயிற்சியாளராகக் கடமையாற்றுவதாக அச்செய்தி கூறுகிறது.

மாத்தயாவுடன் பிடிக்கப்பட்ட யோகி தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் அவர் ஐந்து வருடங்களுக்கு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் இராணுவ அதிகாரி தலைமறைவு

அமெரிக்காவில் இராணுவப் பயிற்சிக்கு என வந்து கடையொன்றில் திருடிய குற்றத்திற்காக வெளியேற்றப்பட்ட இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் குடும்பத்துடன் தலைமறைவாகியுள்ளார். இராணுவ கடை ஒன்றில் பொருட்களைத் திருடிய லெப்டினனட் கேணல் ஜயந்தா கொத்தலாவெல ஜோர்ஜியாவில் போட் பெனிங் என்ற இடத்தில் எட்டு மாதப் பயிற்சி ஒன்றை மேற்கொண்டு அமெரிக்காவின் சர்வதேச இராணுவ பயிற்சித்திட்டத்தின் கீழ் வந்திருந்தார். நூறு டொலர்கள் பெறுமதியான பொருட்களைத் திருடியதற்காக பயிற்சியிலிருந்து இவர் இடைநிறுத்தப்பட்டார். பின்னர் இரண்டாம் தடவையாக ஒரு கிழமைக்குள் திருடும் போது பிடிக்கப்பட்டார். நாட்டை விட்டு வெளியேறும்படி பணிக்கப்பட்ட போது விமானத்தில் செல்லாமல் நண்பர் ஒருவரின் காரில் குடும்பத்தினருடன் தலைமறைவாகி விட்டார்.

இந்த சம்பவத்தின் பின்னர் இராணுவ அதிகாரிகள் இந்த பயிற்சித் திட்டத்தின் கீழ் குடும்பத்தினருடன் அமெரிக்கா வருவதை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரகம் தடை செய்திருக்கிறது. அமெரிக்க அரசு சுமார் பத்தாயிரம் டொலர் வரை இவர்களுக்கு செலவிடுகிறது. பெப்ரவரி மாதம் இவரது பயிற்சி முடிந்து நாடு திரும்ப வேண்டியிருந்தது.

# மாத்தயா...

மனித உரிமைகளுக்கான வழக்கறிஞர் சங்கமும் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பிரபாகரனிடம் மாத்தயாவைக் கொல்ல வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறது. 'அடிப்படை மனித உரிமைகள், நீதி என்பவற்றை மீறுகின்ற இந்த முடிவினுல் இச்சங்கம் அக்கறை கொள்கிறது. குற்றம் சாட்டப்படும் ஒருவர் நியாயமான விசாரணைகளுக்குள்ளாக வேண்டும் என்பது சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இவ்வாருன சர்வாதிகாரமும் மனிதாபிமானமும் அற்ற தீர்மானங்கள் மனிதர்களின் வாழ்வதற்கான உரிமையை பறிக்கும். எந்த ஒரு சூழ்நிலையிலும் எந்த அரசாலுமோ தனிநபராலுமோ மீற முடியாத உரிமையாகும். சகல நாகரிகமடைந்தநாடுகளாலும்அங்கீகரிக்கப் பட்டு மதிக்கப்படுகின்ற இந்தக் கோட்பாடுகளை மதிக்கும்படி' பிரபாகரனிம் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

# செய்திக்கு மறுப்பு

பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்தியாவிலிருந்து விசேட இராணுவப் படை ஒன்று தாக்க வேண்டும் என்று இலங்கை கோரியது என்று வந்த செய்திக்கு இந்திய வெளிவிவகார அமைச்சு மறுப்புத் தெரிவித்திருக்கிறது. இச்செய்திகளுக்கு ஆதாரம் இல்லை என்றும்தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தலை ஒட்டி செல்வாக்குப் பெறும் நோக்குடன் இலங்கை விடுத்த கோரிக்கையை இந்தியா நிராகரித்திருந்தது என்று செய்தி வெளிவந்திருந்தது.


## ஓவியக் கண்காட்சி
(தை 26 - மாசி 26)

# ஜீவன்

மாசி 12 சனி
மாலை 4 மணிக்கு
ஓவியரைச் சந்திக்கலாம்
1869 ஜெரார்ட் வீதியில்
தொடர்புகளுக்கு
466 0576

## மௌலானா எம்.பியானூர்

சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியலில் தெரிவான தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான ரி. டபிள்யூ.ராஜரத்தினம் காலமாகியதை அடுத்து அவரது இடத்திற்கு தற்போது அலவி மௌலானா நியமிக்கப் பட்டிருக்கிறார். தேசியப் பட்டியலில் 89ம் ஆண்டு ராஜரத்தினம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அலவி மௌலானா சுதந்திரக்கட்சியில நாற்பதாண்டு காலமாக பணியாற்றி வருகிறார். ராஜரத்தினத்தின் இடத்திற்கு ஒரு சிறுபான்மையினரே நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் பின்னரே இவர் நியமிக்கப்பட்டிருந்தார். முன்பு சந்திரிகாவை இந்த இடத்திற்கு நியமித்து அவரை பாராளுமன்றத திற்குள் கொண்டு வர சிலர் முயற்சித்திருந்தனர்.

## பொலிசார் இடைநிறுத்தம்

றம்பாவையில் குண்டு வெடிப்புக்குள்ளான பஸ்ஸை சோதனையிடாத காரணத்திற்காக ஒன்பது பொலிசார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கிறது. இவர்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் ஏழு பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. கெப்பட்டிகொல்லா வையிலும் போகாயாயாவிலும் வைத்து இந்த பஸ் சோதனையிடப் பட்டிருக்க வேண்டும். ஆனால் சாரதி இவர்களுக்கு தெரிந்தவரா கையினால் பஸ் சோதிக்கப்படவில்லை. ஜெயந்த புஷ்ப குமார என்ற சாரதி சாட்சியமளிக் கையில் குண்டு கசட் பிளேயர் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டி ருக்கலாம் என்று தெரிவித்தார்.

பன்னிருவர் இந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டனர். ஒரு இராணுவத்தினரும் வேறிருவரும் கால்களை இழந்தனர்.


பூச்சி தொல்லையா?

ஒரு வருட உத்தரவாதம்

அன்ரன்

751 7827-321 2739


## பூனகரித் தோல்விக்கு பொறுப்பானருக்கு பதவி உயர்வு

இராணுவம் தற்போது கட்டமைப்பில் புதிய மாற்றங்களைச் செய்து வருகிறது. வடக்கில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த ரூகான் தலுவத்தை தற்போது புதிதாக அமைக்கப்பட்ட பதவியான தாக்குதல் உபாயங்களுக்கான இயக்குனராக நியமிக்கப் பட்டி ருக்கிறார். பிரிகேடியர் ஏ.எம். யூ.செனிவிரத்தின மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு பெற்று தலுவத்தையின் இடத்தில் நியமனமாகிறார்.

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பிரதம அதிகாரியாக பதவியேற்கிறார். இவர் கிழக்கில் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பார். தெற்கில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக வஜிரா விஜயரத்தின நியமிக்கப் படுகிறார். இவரும் மேஜர் ஜெனரலாகிறார்.

இராணுவ தொண்டர் படைக்கு பொறுப்பாக பிரிகேடியர் நந்தா டி சில்வா நியமிக்கப பட்டிருக்கிறார். இவர் தான் பூனகரித் தாக்குதல் பற்றி விசாரணை செய்து ரூகான் தலுவத்தை உட்பட பலர் தோல்விக்கு காரணம் என்று முடிவு செய்தவர் ஆவர்.

பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரான நளின் அங்கம்மன தற்போது பிரதம தளபதியின் இராணுவ செயலாளராகிறார். பேச்சாளராக பிரிகேடியர் கெமுனு குலதுங்க நியமனமாகிறார். இவர் யாழ்ப்பாண கமாண்டராக இருந்தவர். புதிய பிரிகேடியர்களான சரத் முனசிங்க முல்லைத்தீவிற்கும் சுல செனிவிரத்தினர் வாழைச்சேனைக்கும் நியமனமாகிறார்கள்.

## அதிகாரப் பரவலாக்கம் பற்றி ஜனாதிபதி

அதிகாரப் பரவலாக்கம் இன்றைய சூழ்நிலையில் தொடர்ந்தும் இருக்கும், இது அரசியல் வாழ்வில் ஒரு உண்மையாகி விட்டது என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். பிராந்திய அபிவிருத்தி நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அதிகாரப் பரவலாக்க அனுபவத்தின் தேசிய மாநாட்டில் பேசிய போதே ஜனாதிபதி 'அதிகாரப் பரவலாக்கம் அரசியல் வாழ்வின் உண்மையாகிய போதும் அதன பல விடயஙகள திருப்திகரமாக தீர்க்கப்பட வேண்டும், அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளுக்காக காத்திருக்கிறது. வெவ்வேறு கருத்துக்கள், உணர்வுகள் கொண்ட குழுக்களுடன் இந்த விடயம் அரசியல் உரையாடல்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்' என்று தெரிவித்தார்.

'அதிகாரப் பரவலாக்கம் பிந்திய காலங்களில் சிறுபான்மையினரின் பிரச்சனையுடன் சம்பந்தப் பட்டதாக இருந்தது. அடையாளம் காணல், பாதுகாப்பு, சமூக பொருளாதார சந்தர்ப்பங்கள் என்பவற்றின் பிரச்சனைகளுக்கான தீர்வாக அதிகாரப் பரவலாக்கம் காணப்பட்டது. இதுவே பதின்மூன்றுவது திருத்தச் சட்டத்துக்கு வழிவகுத்தது. இன்றிருக்கும் மாகாண சபைக்கும் வழிவகுத்தது' என்று மேலும் ஜனாதிபதி கூறினார்.

## மனித உரிமை மாநாட்டுக்கு இராணுவ அதிகாரி

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைக்கான ஐ.நா மாநாட்டிற்கு இராணுவ அதிகாரி ஒருவரும் இலங்கைப் பிரதிநிதியாக செல்ல நியமிக்கப்பட்டதற்கு கடும் ஆட்சேபம் கிளம்பியுள்ளது. இளைப்பாறிய இராணுவ பிரிகேடியரான தயா விஜேசேகரவை இந்தக் குழுவில் சேர்த்துக் கொண்டதை அறிந்த ஜனாதிபதி இது குறித்து விசாரிக்கும்படி வெளிநாட்டமைச்சுக்கு உத்தரவிட்டிருக்கிறார். இது குறித்து விசாரிக்க உள்ளதாக வெளிநாட்டமைச்சர் ஹமீது தெரிவித்திருக்கிறார்.

இந்த பிரிகேடியர் பாதுகாப்பு அமைச்சில் உளவியல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான இயக்குனராக இருக்கிறார். முன்பு செயற்பட்ட கூட்டுப்படைத் தலைமையகத்தில் பணிபுரிந்த இவர் யாழ்ப்பாணத்திற்கு தடை செய்யப்பட்ட பொருட்களை கடத்தும் முயற்சியில் சம்பந்தப் பட்டதாக விசாரணை செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலம் பெயர்ந்த நாடுகளில் குடும்ப உறவு

**அருண்**

புதியன புகுதலை சிலவேளைகளில் வரவேற்க முடிவதில்லை இதேபோல பழையன கழிதலில் சிலவேளை கழிப்புற முடிவதில்லை.

தமிழர் தமிழராகவே வாழவேண்டும் என்பதற்காகவே போர் நிலவும் காலத்தில், தேசம் நீங்கி தமிழராகவே புலம் பெயர்ந்து, ஆங்காங்கு சிதறிபோயிருக்கும் தமிழர் புலம் பெயர்ந்து வதிந்து கொண்டுள்ள அன்னிய தேசங்களில், தமிழராக வாழ முனைவதில் கூட இயலாமை என்பது, நாமே சுவீகரித்துக் கொண்ட கலை

வந்தடைந்து வந்த வதியத்தில் எங்கள் சுயங்களை சிறுக சிறுக சேர்த்துக் கொள்ள ஒப்பந்தமாகிவிட்டோம். மொழி, பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் என்பன இந்த சீரழிவுக்கு உட்பட்டுக்கொண்ட அதே வேளை குடும்ப உறவும் இக்கதிக்கு ஆட்பட தலையாட்டிக்கொண்டு விட்டது வேதனைக்குரியது. ஏனெனில் தமிழர் தம் அத்திவாரத்தையே உடைத்தெறிய ஆரம்பித்துள்ளனர்.

குடும்ப உறவு என்பது மனித மனிதனுக்கு மட்டுமல்ல சமூகத்துக்கு மட்டுமல்ல முழு உலகுக்கும் ஆதாரமானது குடும்ப உறவில் உள்ள வலிய இறுக்கம் அன்பு, அரவணைப்பு, புரிந்துணர்வு, பகிர்வு, என்பவற்றினுல் உறுதிப்படுத்தப்படும்.

தமிழர் குடும்ப உறவின் இறுக்கம் தனித்துவமானது. போற்றத்தக்கது தமிழர் நாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் நாகரீகம் என்று கூறிக்கொண்டு குடும்ப உறவின் அர்த்தமே காட்டு வாழ்க்கைக்கு இணையானதாய் நடைமுறையில் உள்ளது. நாகரீகம் என்பதற்கு கூட இங்கு அர்த்தம் தலைகீழாய் உள்ளது. இதையே தமிழர்கள் பின்பற்ற ஆயத்தம் செய்தால்......

கனடிய வாழ்க்கை முறையை ஒத்ததாயே தமிழர் குடும்ப உறவும் உள்ளது எனவும் தமிழர் குடும்பங்களில் கணவன் மனைவி பிரிந்து வாழும் நிலமை கனடியர்களை ஒத்திருப்பதாக முன்பு ஒருமுறை ரொரன்ரோ பத்திரிகையில் வந்திருந்தது. இந்த அதிர்ச்சியான செய்தியை ஆராய எத்தனித்தால், சமூக பண உதவிப் பணம் கூடுதலாய் பெறுவதற்காக தமிழர் இங்கு கைக்கொள்ளும் உத்தி என விளங்கியது. ஆனுல் இன்றோ நிலமை வேறு விதமாக உள்ளது. சமூக உதவிப் பணம் கிடைக்கும் என்ற தைரியத்தில் கணவன் மனைவி நிரந்தரமாகவே பிரிந்து வாழும் நிலமையில் உண்மையில் கனேடியரை ஒத்ததாகவே தமிழர் மாறி வருகின்ற நிலை வேதனைத் தருகின்றது.

இங்கு ஒவ்வொரு குடும்பமும் தீவு போல் தனித்தே இருக்கின்றது. ஒரு குடும்பத்தில் சிறு அசைவு கூட இன்னெரு குடும்பத்துக்கு தெரிவதில்லை. அதாவது சமூகவாழ்வு முறை இங்கு இல்லாமலே போய்விட்டது. இது ஒருவகையில் பாதகமாகவே அமைந்துவிட்டது. எமது நாட்டிலோ ஒரு குடும்பத்தில் ஏற்படும் சிறு பிணக்குகள் ஊருக்கே தெரிந்து விடும் நிலமையினையும் விட அயலவரோ உறவினரோ நாகரீகமாக தலையிட்டு சில பிணக்குகளை தீர்த்து வைக்கவோ ஆலோசனை சொல்லவோ வாய்ப்பிருந்தது. ஊருக்கு கதைபோனுல் 'பரிசு கேடு' என்ற சில பூசல்கள் கூட கணவன் மனைவி இருவரதும் சமரசத்தால் முடங்கி விடுவதுண்டு. ஆனுல் இங்கோ ஆலோசனை வழங்க யாரும் வரப்போவதில்லை. தீர்வுகள் ஏற்படுத்த அயலவர் வாய்ப்பில்லை அயலவர் தமிழர் எனினும் அவர்களுக்கே இவர்கள் சச்சரவு பற்றி ஏதும் எட்டப் போவதில்லையே. கணவனே மனைவியோ தங்கள் தங்கள் மன ஓட்டத்துக்கு ஏற்ப முடிவுகளை எடுக்கின்றனர். பலகோணங்களிலும் ஆராய அவர்களுக்கு அவகாசமும் இல்லை. அவற்றுக்காய் தூண்ட பிற ஆலோசனைகளும் இல்லை. இலகுவான சட்டங்களும் தனித்தே வாழ்வதற்கான உறுதிப்பாடுகளும் இவர்களை ஒரே துயரமுடிவிற்கே கூட்டிச செல்கின்றன. அந்த முடிவு மணமுறிவே.

மணமுறிவிற்கான முடிவை எடுக்க செலவிட்ட முயற்சிகளை மண இணைவிற்கான வழிக்கு செய்தோமா?

ஒருகணநேரத்து பிணக்கை பூதாகரமாக்கி பிரிவிற்கான ஆதாரமாக்காமல் அதை தூசுபோல் ஆக்கும் பக்குவத்தை பெற்றெடுக்க புலம்பெயர்ந்த நாடுகளில் யாருமில்லை என நினைக்காதீர்கள். உங்கள் பிரச்சனையை இன்னெருவருக்கு சொல்ல தயங்க கூடாது. சக ஊழியருக்கு வைத்தியருக்கோ தெரிவித்துக் கொள்ளலாம். சேற்றுக்குள் விழுந்துவிட்ட நீங்கள் அங்கிருந்து எதை எடுத்தாலும் சேருய் தானிருக்கும். சேற்றை விலகியுள்ளவர்க்கு அப்படியல்ல. அவர்கள் சொல்வது முடிவு இல்லை. எனினும் உங்கள் பிரச்சனையை தீர்க்கும் ஒரு படியாய் அமையலாம். நாளுக்கு நாள்

எம்மவர்களிடையே எத்தனை விபரீதங்கள் நடக்கின்றன இருபது வருடங்கள் குடித்தனம் செய்ததுடன் பதினெட்டு பத்தொன்பது வயதில் பிள்ளைகளும் இருக்க கணவனை பிரிந்து மனைவி இன்னொரு குடித்தனம் தொடங்குவது ஏன் இங்கு நடக்கின்றது? இருபது வருடங்கள் இல்லாத மணமுறிவு இன்று விஸ்வரூபம் எடுத்தது தான் ஏன்? இது எல்லாம் சாதாரணமாய் போய்விட்ட கனேடிய சூழலில் நாமும் கரைந்து விடுவதும் முயற்சியா?

அவப்பெயருக்கு பயந்த காலம் இங்கு இல்லாமல் போனதன் தாக்கம் துல்லியமாய் புரிகிறது. புதிய சூழல் சுற்றிவரப் புதிய முகங்கள் எது நடந்தாலும் பாரிய தாக்கத்துக்கு அவகாசம் இல்லாத அவசரமான சுற்றம் இத்தகைய தைரியத்தில் சிறு சலனங்கள் கூட அரங்குக்கு வருகின்றன.

சார்ந்த வாழ்தல் சாபக்கேடு என்று சொல்லப்பட்ட காலம் மீள இழுத்து பரிசீலிக்கப்படுகின்றது. சார்ந்து வாழ்ந்த போது சகிப்பு தன்மை இருந்தது. இது அடிமைத்தனத்தின் முகவரி என்று விலங்கப்பட்டபோது அதில் நியாயம் இருப்பதாய் கொதித்து எழுத வேண்டியிருந்தது. இங்கு சார்ந்த வாழ்தல் விமோசனம் பெற்ற ஒன்று. இது புரிய பிரச்சனையின் புதிய முகத்தை அறிமுகம் செய்து கொண்டது. தன் காலில் தான் நிற்க கூடிய தைரியம் பெற்றதனல் இணக்கம் கொண்டிருக்க வேண்டிய மனங்கள் முறிந்து கொள்ள வேண்டிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இங்கு புதிய விதி உதயமாகின்றது. சமனனதும் முரணனதுமான இரண்டு சேர்ந்திருப்பதிலும் பிரிந்திருப்பதற்கே அதி சாத்தியம். இப்படியான புதிதாய் புகும் விதியை வரவேற்க முடியவில்லை விட்டுக்கொடுப்புகள் சமரசங்கள் பழையனவாய் கழிதலும் கழிப்பு இல்லை.

'இளம் பிராய தம்பதியிடையே மனதை அனுசரித்து நெகிழும், வளையும் தன்மை அனுபவக் குறைவால் பூரணிப்பது இல்லை இதனுல் இளங் குடும்பத்து பிணக்குகள் முதியோரால் தீர்த்து வைக்கப்பட்டது' இது ஊரில்.... இங்கோ முதியோரே பிணங்கி நிற்கின்றனர். பேரப்பிள்ளைகள் இருக்கும் இம் முதிய தம்பதியர் கூட விவாகரத்து வரை செல்கின்றனர் என்ருல் அனுபவம் குறைந்தோர் யாரிடம் ஆலோசனை கேட்பது என்கிறவரும் உளர். உண்மையில் அனுபவமும் ஆற்றலும் வயதாவதால் மட்டும் வருவதில்லை. பலருடனும் பழகுவதால் பலரையும் கேட்டு படித்து அறிவதால் சமாதான சிந்தனையால் ஒருவருக்கு நல்ல ஆலோசனை வழங்கும் தகுதி வருகின்றது. வயதை நோக்காமல் தகுந்தவரை நாடி ஆலோசனை பெறுங்கள். எத்தனை அமைப்புகள் இங்கு உண்டு அவர்களையும் நாடலாம். பெண்கள் அமைப்புகள் இளைஞர் அமைப்புகள் என எத்தனையோ அமைப்புகள் உள்ளனவே. அவை விட்டு எடுத்ததெற்கெல்லாம் விவாகரத்து அல்லது பிரிந்து வாழ்தல் என முடிவு செய்தல் புத்திசாலித்தனமாகாது.

குடும்பம் என்ருல் பிரச்சனைகள் இருக்கும். வீட்டுக்கு வீடு வாசற்படி. அதை உணர்ந்து கொள்ள வேண்டும் கூடுதலாக பெண்கள் வாழ்நாள் பூராக கொடுமைப்படுத்தப்படும் நிகழ்வும் இல்லாமலில்லை. அதேபோல் ஆண்களும் வஞ்சிக்கப்படாமலும் இல்லை இதெற்கெல்லாம் விவாகரத்தும் பிரிந்து வாழ்தலும் தான் முடிவானதாயிருக்கலாம் அதை பல ஆலோசனைகளும் மனற்செயற்பாட்டில் மாற்றம் இன்மையும் தீர்மானிக்கும்– திடீர் முடிவல்ல.

விவாகரத்துக்கோ பிரிந்து வாழ்வதற்கோ முடிவை நகர்த்த முன் குழந்தைகள் நலம், அவர்களின் எதிர்காலம் என்பவற்றை கணவன் மனைவி இருவரும் தங்கள் பிரச்சனைகளை விட முதன்மைப்படுத்தி பார்க்க வேண்டும். குழந்தைகள் நலம் குழந்தைகள் எதிர்காலம் என்பவற்றை பெரிதும் சீர்தூக்குவதே தமிழர் மூச்சாகயிருந்தது. அதனுல் தான் எம் தேசத்தில் கணவன் மனைவிக்கு இடையிலான பிரச்சனைகள் நீர்க்குமிழிகள் போல் அழிந்து விடும். இங்கோ மீன் பொறித்து வைக்கவில்லை என்பதற்காக விவாகரத்துவரை செல்வது எதைக் காட்டுகின்றது. சகோதரருக்கு பேசியதற்காக பிரிந்து வாழ முற்படுவது எதை காட்டுகிறது? தமிழர் தமிழராக இல்லாமல் போய்க்கொண்டிருப்பதையே காட்டுகின்றது. பிரிந்து வாழ்வதால் ஏற்படப் போகும் தாக்கங்களை தொலைநோக்காக எழுந்தமானமான முடிவுகளின் பிற்போக்கு தனத்தையே காட்டுகின்றது.

மனைவியை தாக்குவது குற்றம் என இங்கு சுவரெட்டிகள் கூறும். அதனுல் மனைவியை தாக்குதல் மட்டுமே குற்றம் என எண்ணி விடலாகாது. யாரைத் தாக்கினுலும் குற்றமே. ஆனுல் மனைவியை தாக்குதல் இங்கு மலிந்து போன ஒன்று. பொதுவாக கீழத்தேசத்து பெண்கள் மீதான கொடுமையென கருதப்படும் இவ்வன்முறையை கைவிடும்படி கணவன்மாரை வேண்டுவதே இச்சுவரொட்டி. அதற்காக ஒரு சிறுப்பிரச்சனைக்கு உலகம் முழுதும் பெண்கள் பக்கம் நிற்கும் என பெண்கள் எண்ணி செயலாற்றுவது மடமை.

தேசம் நீங்கி இங்கு வந்தவுடன் எம் கட்டுக்கள் எல்லாம் அறுந்து விட்டது, எதை வேண்டுமானுலும் செய்யலாம் என எண்ணிடாதீர் நல்லதைச்

செய்யுங்கள், பிறர் மனைவியுடன் நாகரீகமாக பழகுங்கள், பிறர் கணவன்மாருடன் கண்ணியமாய் பழகுங்கள் இந்நாட்டின் பழக்கங்கள் தான் நாகரீகம் என எண்ணிடாதீர் பிறர் மனைவியை வசியம் செய்வது நாகரீகம் அல்ல. பிற ஆடவனை மயக்குவது ஒரு மனைவியின் கண்ணியமும் இல்லை, தமிழராக இருங்கள்!

அன்னியோன்னியமாக இருந்தார்கள் கணவன் மனைவியுமாய், இப்போ அவள் ஓடிவிட்டாள் என செய்தி வரமுன் செய்யப்போவதை நிதானித்து பலரையும் யோசியுங்கள். அங்கே போனவுடன் திருப்தி வந்து விடப் போவதில்லை. பிரச்சனை தீர்ந்து விடப்போவதில்லை.

வேறு ஒரு பிரச்சனை வேறு உருவில் வரும். ஏனெனில் தம்பதியானுலும் இரண்டு மணங்கள் ஒன்றய் ஆகிவிடாது. ஒரு மனமே எப்போதும் ஒரே மாதிரியாய் இருப்பது இல்லை. அப்படியிருக்க கூடிக்கொண்டாலும் கணவனதும் மனைவியினதும் மனம் தனிதனி தான். அன்பு எனும் பாலம் தான் பகிர்ந்து கொள்வது யாருடன் நின்றலும் இதை உடையாமல் பார்த்தல் சரியே.

இங்கு நடப்பது ஊரில் நடக்காது என கேட்கலாம். மிக மிக அரிதாய் நடப்பது ஆனல் அங்கும் சுற்றி வர யார் இருக்கிருர்கள் யாருக்குத்தான் பயப்படவேண்டும் என நினைப்பதுவும் ஆலோசனை சொல்ல ஆள் இல்லாததும் தான் காரணங்கள். ஆனல் இந்நிலமை அங்கு அரிது. இங்கோ அதே தான் நிலமை

தமிழரை பொறுத்த வரையில் குடும்பம் என்பது முக்கியமானது. அதற்கு பின்புதான் பாலியல். இங்கோ பாலியலும் சுகித்து வாழ்தலும் தான் வாழ்க்கை என நினைக்கும் சமூகம்– ஆதிவாசிகள் போல். தமிழர் அதைத்தான் நாகரீகம் என கண் மூடித்தனமாய் எண்ணி பின்பற்ற தலைப்படுவது வேதனைக்குரியது.

புதியது என்றல் ஏதும் உசர்ந்தி என கொள்ளமுடியாது. பழையது எனில் பரணில் வைத்துக்கொள் என ஒதுக்குவதும் ஆகாது. பழையது கழிதலும் புதியது புகுதலும் ஆரோக்கியம் கருதி ஏற்றுக் கொள்ள முடியும் அங்கோ, இங்கோ எங்கென்றலும் தமிழர் தமிழராக எண்ண வேண்டும்.

# மரபும் கவிதையும்

## விருத்தங்கள் பற்றி... (தொடர்)

**வ.ந.கிரிதரன்**

**சந்தமுள்ள விருத்தங்கள்;**

சந்த விருத்தங்களை அறிவதற்கு சீர் பற்றிய அறிவுடன் மாத்திரை பற்றிய அறிவும் அவசியம். சந்தப் பாடல்களில் ஒவ்வொரு சீரிற்கும் குறிப்பிட்ட மாத்திரை அளவுகள் உண்டு. எழுத்திலக்கணத்தை கூறப்படும் மாத்திரை அளவுகளுடன் சேர்த்து சந்தப் பாவிற்கென்று தனி அளவு முறைகள் உண்டு. குறிலிற்கு மாத்திரை ஒன்று

நெடிலிற்கு இரண்டுகுறில் ஒற்றடுத்தால் மாத்திரை இரண்டு நெடில் ஒற்றடுத்தால் மாத்திரை இரண்டு

மேலும் தேமா, புளிமா என்ற இருவகையான சீர்கள் சந்த இலக்கணத்தில் மாத்திரை அளவைப் பொறுத்து ஒரேவகையான சீர்களாகக் கருதப்படலாம். உதாரணமாக ஆக என்பது தேமா வகைச்சீர், மாத்திரை மூன்று. தருக என்பது புளிமா வகையான சீர், மாத்திரை மூன்று சந்தத்தைப் பொறுத்தவரையில் இவை மூன்று மகத்திரை அளவுடைய ஒரேவகையான சீர்கள்.

அதேசமயம் ஒரேவகையான சீர்களாக யாப்பிலக்கணத்தில் கருதப்படுவது சந்த இலக்கணத்தில் வேறுவகையான சீர்களாகக் கருதப்படும். 'ஆக' என்பது மூன்று மாத்திரையளவுடைய தேமா என்றும் வகைச்சீர் ஆய்ந்தான் என்பதும் தேமா வகைச் சீர் தான். ஆனல் மாத்திரை யளவு இங்கு நான்கு.

இது தவிர மேலும் சில விதிகளும் உண்டு. ஓர் அடியின் இறுதியில் குறில் வந்தால் அதற்குரிய மாத்திரை ஒன்றல்ல, இரண்டு அதுபோல் சமமாகவரும் இரு அரையடிகளின் இறுதியில் குறில் வந்தாலும் அக்குறிலினளவு இரண்டு மாத்திரை சீர்களிற்கு இடையில் வரும் ய,ர,ல,ழ,ள விற்குரிய ஒற்றுக்களிற்குச் சில விடங்களில் மாத்திரையில்லை (இதுபோல் ன,ண,ம ஆகிய மெய்களிற்கும் மாத்திரையில்லை).

இனிச் சந்த விருத்தம் பற்றிப் பார்ப்போம். அறுசீர்ச் சந்த விருத்தமொன்றின் ஒவ்வொரு அரையடியிலும்

'தானன தனதன தனதனன' என்ற வகையில்அல்லது 'தனதன தனதன தந்தா' என்ற வகையில் இவ்விதம் சந்தமுள்ள ஒரு போக்கு காணப்படலாம்.

'தானன தனதன தனதனன' வை எடுத்துக் கொண்டால், இதன் மாத்திரையளவு

தானை – 4

தனதன – 4

தனதனன – 6


இதுபோல் 'தனதன தந்தா' வை எடுத்துச் கொண்டால் இதன் மாத்திரையளவு

தனதன – 4

தந்தா – 4 (குறில் ஒற்றுவரின் மாத்திரை 2 தந்–மாத்திரை 2)

சந்த விருத்தங்களில் ஒவ்வொரு அடியிலுமுள்ள சீர்களின் மாத்திரையளவு சரியாகப் பின்பற்றப்படவேண்டும். இது மிகவும் முக்கியம்.

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்

Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

# Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினுல் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




## NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




## CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




## DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் றொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினுல் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள் அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

## Tel:297 9444

## விசேட மலிவு விற்பனை

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.99 | 1.49 |
| குத்தரிசி | 6.99 | 1.49 |
| அரிசிமா | 6.99 | 1.49 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.59
2 கிலோ $ 2.99

## THURKAS SUPERMARKET

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

சீனி 1.39/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றோசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி, கோழிக்கால், ஈரல், கிட்னி, மரக்கறி வகைகள், பழவகைகள் அனைத்தும் மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST

**Car Certification**
**29.99**

## 755 8550

**CALL**
**MIKE or RAJAN**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
திருத்துவதில் பல வருடம் அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



# முகமிழந்த மனிதர்கள்



## பவான்

தலை குத்திய இரும்புப் பறவை வயிற்றிலிருந்து சிறகுக்குக் கீழாய் என்னை வெளித்தள்ளிய போது, உள்ளே கண்ணால் சிரித்த சீரான உடையணிந்த அழகிய இளம் பெண் பரிமாறிய மேலைத்தேய உணவு தொண்டைக்கு மேலாய் ஏறித் தொக்கி நின்றது. பனிப்புகைக்குள் புதைந்து கிடந்த கட்டிடத் தொடர்களை நோக்கி ஓடுபாதையில் வெள்ளையர்களை முன்னே விட்டு நடந்து கொண்டிருந்தேன். புறக்கோட்டை பேமன்ரில் வாங்கிய ஜக்கற்றுக்குள் உடலெங்கும் ஊசிகளாய்க் குளிர் குத்துகிறது. ஒறிஜினலாய் வந்ததால் பயமோ அவஸ்தையோ இல்லைத்தான், ஆனாலும் ஒரு படபடப்பு. அந்தா அண்ணை நிக்கிறான். சவண்டிக் கொண்டு நிக்கிறத வச்சே அவன் தானெண்டு தெரியுது. அண்ணை! நான் தம்பியெண்டு வேகமெடுத்தேன். வாசலில் நின்றவன் கையிலிருந்த சிறு பொல்லால் தடுத்து நிறுத்தினான். அண்ணை வலுங் கஸ்ரப்பட்டு ஏதோ சொல்லி எதையோ எல்லாம் வேண்டிப் பார்த்துவிட்டு போய்த்தொலை என்பது போல் கழுத்திலிருந்து பொல்லை எடுத்தான். மீசையும் ஆளும் என்னால மட்டுக்கட்ட முடியேல என்றான் அண்ணை. நிண்ட நிலையில் சிலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சுடச்சுடக் கோப்பி வேண்டிக் கொண்டு வரும் போதே கேட்டான் "ஞாபகமிருக்கா நான் வெளிநாடு வரேக்க நீ வளையம் உருட்டிக்கொண்டு வந்து வழியனுப்பினது" எண்டு. "அப்ப நீ கூட தலைமயிருக்கு கெயாபின் குத்தியிருந்தாய், இப்ப மொட்டையை மறைக்க தொப்பி போட்டிருக்கிறாய்" என்றேன். இருவரும்சிரித்தோம். காரில் நின்ற அவன் நண்பர்களுடன் அவன் சொன்னபடியே கையைக் குலுக்கிவிட்டு ஏறியமர்ந்தேன். எல்லோர் கைகளும் சொரசொரப்பாக இருந்தது. இப்படித்தான் நான் வெளிநாடு போகிறேன் என்று விடைபெற்ற போது "விஷ் யூ ஒல் த பெஸ்ற்" என்று எதிர்பாராத வகையில் கையை நீட்டினாள் அவள். நான் தடுமாறிக் குலுக்குவதற்குள் அவள் காத்திருக்க வேண்டியிருந்தது. அந்தக் கையின் மென்மையை முதன் முதலில் ஸ்பரித்ஸித்த போதும், அவள் முகத்தில் படர்ந்த சோகத்தை பார்த்த போதும் பயணத்தை ஒத்திவைத்துவிட்டு இன்னும் கொஞ்ச நாளாவது லௌவ் பண்ணவேண்டும் போல் இருந்தது.

நெடுங்கோடாய்க் கறுப்புத் தெருக்கள் பின்னோக்கி ஓடிக் கொண்டிருக்க மேகத்திலிருந்து


கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாஜி 796 2672

Net, Colorful Flower Bouquet, Flower Basket

பஞ்சு வெடித்துப் பறந்து கொண்டிருந்தது. முடிவிலியாய் முன்னும் பின்னும் வாகனங்கள் கண்ணுக்கெட்டியவரை கண் கூசும் படியாய் ஒளியை உமிழ்ந்தபடி இயங்கிக் கொண்டிருந்தன. இரு மருங்கிலும் மினுங்கும் பனிப்பாறைப் படிமங்கள் எம்மைக் கடந்தபடி. மரங்களிலெல்லாம் பனி பூத்திருந்தது. எம்மை வரவேற்பதற்காய் அண்ணனின் நண்பர்கள் வாசலில் வந்து நின்ருர்கள். தெருவாலே போனவர்கள் மொறக்கீஞே என்று கத்தவே எங்களில் ஒருவன் நாம் மொறக்கீஞே இல்லே என திருப்பிக் கத்திஞன். சிறுகுசினி, ரொய்லற், றூம் எல்லாமே ஒன்றுக்குள் ஒன்ருய் இருந்த பேஸ்மன்ரில் இருந்துவந்த கோழிக்கறி மணம் என்னேத் தூக்கி நிறுத்தியது. எல்லோரும் பரபரப்பாய் சாப்பிட்டு தட்டைக் கழுவி வைத்து விட்டு சாவோ (BYE) சொல்லிக் கொண்டே பறந்து கொண்டிருந்தார்கள். ஒருவனே சற்று தாமதிக்கச் சொல்லவே, மேடம் கொண்டு போடுவாள் நான் போறன் என்று பறந்தான். சிறிது வீடு ஊர் நண்பர்கள் என கதைத்துக் கொண்டிருந்து விட்டு "வெளிக்கிடு என்ர வீட்ட போவம்" என்ருன் "அப்ப இது?" "இது லீவு நாட்களில் பொடியள் ஒண்டாய்ச் சேர்ந்து சமச்சுச் சாப்பிட நான் வேல செய்யிற வீட்டிலேயே நீயும் கொஞ்ச நாள தங்கலாம" என்ருன. பஸ்ஸில் போகும் போது தெரு, விளக்குகள், மனிதர்கள் எல்லாமே புதுமையாக தெரிந்தது. உள்ளே ஹோலிலே உணவுண்டு கொண்டிருந்த பொஸ் மேடம், அவர்கள் மகள் எழுந்து அட்டகாசமாய் கைய குலுக்க கூச்சம் மறுபுறம் சந்தோசம் ஒருபுறம் அதுவும் பொம்ம போல இருந்த மேடத்தின்ர பொட்ட குலுக்கேக்க உடம்பு கூச வேறு செய்தது. மாடியிலே அண்ணு அறையாக பாவித்த பழைய சாமான்கள் போட்டு வைத்திருந்த ஸ்ரோர் றூமில் எனக்கும் ஒரு கட்டில் போட்டான். உறக்கத்தில், ஏர்போட் வெள்ளேக்கார இளம்பெண்கள், வண்ண வண்ண வாகனங்கள் உயர்ந்துயர்ந்த கட்டிடங்கள் மத்தியில் பஞ்சுப் பொதிகளிடை நான் மிதந்து கொண்டிருந்தேன். கட்டிலில் அண்ணுவைக் காணவில்லே கீழே எட்டிப் பார்த்தேன். வீடு கூட்டிக் கொண்டிருந்தான். சோம்பல் முறித்துவிட்டு பல்லுத் தீட்டியபடியே ரொய்லற் ஜன்னலே மெதுவாய் திறந்தேன். நாய்க்கூட்டிற்குள் நுளேந்து யாரோ அது செய்து வைத்திருந்த அசிங்கத்தை சுத்தம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்தா வெளியால வருகிது அது.. அது அண்ணு தான்.

கீழே இறங்கி வந்தேன். அண்ணு கழிவு நீர்க் கால்வாயை சுத்தம் செய்து கொண்டு நின்ருன். அவனேப் பார்க்கவே குமட்டிக் கொண்டு வந்தது. எனக்கு பாட்டி அடிக்கடி சொல்லிற "உடையார் பரம்பரை" என்பது ஏனே ஞாபகம் வந்தது. நல்ல வேளே அவள் இறந்துவிட்டாள் வீட்டிலே சாப்பிட்ட கோப்பை கழுவாத அண்ணு அவர்கள் சாப்பிட்ட கோப்பையை கழுவிக் கொண்டிருந்தான். கழுவி முடிந்ததும் அவர்கள் சாப்பிட்ட மிச்சத்தை காவல் நின்று எடுத்து வந்து எனக்கும் போட்டு தானும் சாப்பிட்டான். சில நாள் விருந்தாளி போல இருந்து கொண்டிருந்தேன். அண்ணு ஒரு நாள் காய்ச்சலில் படுத்தான், வீடு கூட்டினேன். அப்புறம் ஒருநாள் மேடம் நாய்ப்பீ அள்ளச் சொன்னுள். அப்புறம் அண்ணு அடிக்கடி காணுமல் போனுன். ரொய்லற் கழுவினேன் கொஞ்சம் சமைக்கவும் கற்றுக் கொண்டேன், ஞாயிறு விடுமுறையில் நண்பர்களேச் சந்திக்கும் போது சொல்வார்கள் "இங்க கறுவல் மொறக்கீஞே ஒருவனேயும் வீட்டு வேலேக்கு எடுக்கிறேல, சிறீலங்கன மாத்திரம் தான், எங்களில அவ்வளவு நம்பிக்கை, நல்லெண்ணம் அவங்களுக்கென்று" எனக்கு சிரிப்பொரு பக்கம், ஒரு பக்கம் பரிதாபமாக இருந்தது. தோட்டக்காட்டிலே இருந்து வீட்டு வேல செய்ய வந்த ஆக்கள நாங்க நடத்தின மாதிரிக்கு, நாங்க குடுத்து வச்சனுங்க, குறஞ்சது மனுசன் மாதிரியாவது நடத்திஞன் என்று ஆசாவசப்படுவோரும் உண்டு. நான் வீட்டு வேலேயில் இசைவாக்கம் அடைவதை கண்ட அண்ணு எனக்குமொரு வீட்டு வேலே கதைக்க கூட்டிச் சென்ருன். மேடம் பூனேயோடு கொஞ்சிக் கொண்டிருந்தாள், ஒவ்வொரு நாளும் கூட்டோணும் ரொய்லற் கழுவோணும் நாய் பூனேயிட அசிங்கம் எல்லாம் சுத்தம் செய்து, உடுப்புத் தோச்சு.... அடுக்கிக் கொண்டுபோனுள், அண்ணுவுக்குச் சந்தோசம், ஒரு இடமும் இந்தச் சம்பளம் கிடைக்காதெண்டு வளிவளியாச் சொல்லிக் கொண்டு வந்தான். இரவு உறக்கம் வர மறுத்தது, யோசித்தேன்.

இந்த வேலேக்குப் போனுல் நானும் இவனேப் போல இந்த அடிமை வாழ்வுக்கு என்னே பழக்கப்படுத்தி விடுவேன், ஏற்கனவே என்னேயறியாமல் கொஞ்சம் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டேன் என்று தெரிந்தது. உள்ளே தூங்கிக்கிடந்த ஏதோ ஒன்று சுறுசுறுப்பானது. எழுந்து பெட்டியை எடுத்து உடுப்பை அடுக்கி வைத்தேன். பொஸ் விடிந்ததும் விடியாததுமாய் அண்ணுவை ஏனே திட்டிக் கொண்டிருந்தான். இரவு சைனிஸ் ஹோட்டலில் சாப்பாடு வேண்டித் தந்து றெயினேத்தி விட்டான் அண்ணு. றெயின் வந்து நின்றது ஓடிச் சென்று சீற்றுக்குக் கீழே படுத்துக் கொண்டேன் சீற்றில் வந்து இருந்த வெள்ளே மனிதன் என் மூஞ்சியில் சப்பாத்துக் காலால் மிதித்துக் கொண்டு, காலே ஆட்டியபடி இருந்தான், முகம் எரிந்தது. ஆறு மணி நேரமாய் மூச்சை அடக்கிக் கொண்டும், சிறு நீரை அடக்கிக் கொண்டும், சப்பாத்துக் கால்களுக்குக் கீழ் முகமிழந்து படுத்திருந்தேன். புதியதோர் வாழ்வுக்காய்!

# குறுக்கீடும், நிறைவும்

## ஜெயந்தீஸனின் லக்ய சித்ராபிஷேகத்தினது கடைசி அங்கம்.

6 மணிக்குத்தான் கவியரங்கம் தொடங்குமென நோட்டீஸில் போடப்பட்டபோதும், 5 மணிக்கே 3÷4 வாசி மண்டபம் நிரம்பி விட்டது. என்னைத் தலைவராகப் போட்டதுதான் காரணம் என திருமதி O.C என் காதில் மெல்லமாகச் சொன்னபோது அவவின் உதட்டில் சோகம் படிந்ததைக் கண்டு நெஞ்சு பதைபதைத்தது. "என்ன நடந்தது?" என வினவினேன். "ஆக்கள் நிக்கினம். சொன்னுக் கேட்டிடும். கவியரங்கம் தொடங்க முன்னம் இதை உம்மிட்டை எப்பிடியாவது சொல்ல வேணும்." என இழுத்தவுடன் ஏதோ சீரியஸாக நடந்து விட்டதென உணர்ந்தேன். "கவிதை அரங்கம் துடங்க இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கு. வாரும் வெளியாலே போய் கோப்பி குடிச்சுக் கொண்டு, கதைச்சிட்டு வருவம்" என்றபடி யாருக்கும் தெரியாமல் அவவுடன் நைஸாக மாறினேன்.

கோப்பிக்கடையின் மூலேப் பகுதியொன்றில் இருவரும் உட்கார்ந்துகொண்டோம். எங்கள் முன்னே ஆவி பறக்கும் கோப்பிகள். நான் வாங்கிக் கொடுத்த மூக்குத்தி அவவின் மூக்கிலிருந்து மின்னியது. முகம் வியர்வை சிந்தியது. எனது கைலேஞ்சியால் துடைத்து விட்டேன்.

"நான் இண்டைக்குக் கவிதை பாட மாட்டன்" என்ற வெடிகுண்டை அவ தூக்கிப் போட்டதும், நான் திக்பிரமை பிடித்தவன் போலாகிவிட்டேன்.

"என்ன! பெடியள் என்னை நம்பி உங்கடை பேரைப் போட்டு புது நோட்டீஸும் அடிச்சிட்டாங்கள். நீங்கள் இண்டைக்கு மேடையிலே ஏருட்டி முழுப்பழியும் என்னிலேதான் விழும். போதாக் குறைக்கு பிற்போக்குவாதி எண்டும் விமர்சனம் செய்வாங்கள். உங்களுக்கு என்ன மேடைக் கூச்சமே?"

"மேடைக் கூச்சமெண்டு ஒண்டுமில்லே. நேற்றைக்கு இரவு அவர் கார்த்திக்கோடை வீட்டை வந்தவர். நான் குசினிக்கை போய் தண்ணியை அடுப்பிலே வைச்சிட்டு வந்தா ரெண்டு பேருக்கும் நடுவிலே ஒரு போத்தில் இருந்திது. எனக்கெண்டா விசர்தான் வந்திது. போத்தில் விஷயங்களை வெளியாலே வைக்கவேணும், வீட்டுக்கை வைக்கக்கூடாதெண்டு எத்தினை தடவை சொன்னனுன் எண்டு அவரை ஏசினன். நான் வாங்கேலலே, கார்த்திக்தான் வாங்கினுரெண்டு அவர் சொல்ல, "வாரும் எங்காவது பார்க்கிலே போய் இருந்து குடிச்சிட்டு வருவம்" என்றபடி அவரையும் கூட்டிக்கொண்டு கார்த்திக் இறங்கினுன். அப்பவே எனக்குத் தெரியும். கட்டாயம் கார்த்திக் அள்ளி வைப்பானெண்டு. இரவு ஒரு மணிபோல அவர் ஆடி ஆடி வீட்டை வந்தார். அந்த நேரம் நான் எழுதின கவிதையை புது மெட்டியற்றி மெல்லமாப் பாடிக் கொண்டிருந்தேன். புலிபோல பாய்ஞ்சு என்ரை கவிதையைப் பறிச்சு தூள் தூளாக் கிழிச்சு எறிஞ்சார். மேடையிலே நான் ஏறினு என்ரை தலேயும் உம்மடை தலேயும் ஒரு நேரத்திலே உருளும் எண்டு மிரட்டினுர். உம்மைப்பற்றி படு ஆபாசமாக வெல்லாம் திட்டினுர்" என்றபடி கார்த்திக் ஊடாக திரு.OC கேட்ட கதைகள் சிவற்றைச் சொன்னு. இந்தக் கதைகளைக் கேட்ட போது, ஏன் கார்த்திக் குட்டிக்கதைகள் எழுதாமலுள்ளான் என வியந்து கொண்டேன். அவனது கண்டுபிடிப்பின்படி நான் மூன்று பிரெஞ்சுக்காரிகளை வைத்திருக கின்றேனும்.

"சரி, எது எப்படியோ? நீங்கள் இண்டைக்குக் கட்டாயம் மேடையிலே ஏறவேணும்... கவிதை பாடவேண்டும்" என்று சபதம் எடுப்பது போல் சொன்னேன்.

"முடியாது, என்னிட்டைக் கவிதையும் இல்லே. அவர் வந்து ஆக்களுக்கு முன்னுலே உம்மை அவமானப்படுத்திப் போடுவார். பிறகு உம்மையும் என்னையும் வைச்சு பேப்பர்களிலே அவமானமா எழுதுவாங்கள்.. தயவு செய்து என்னை எங்கையாவது கூட்டிக் கொண்டு போம்... " என்றவுடன் நெஞ்சு படபடத்தது. எதற்கும் மனதைத் திடமாக்கி, "கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒருவேளை கூட்டிக்கொண்டு ஓடுவதில்தான் சொலூஸன் ஏற்படலாம் என்று படுகின்றது. ஆனுல் நாங்கள் பயப்பிடுவதற்கு எதுவுமே இல்லே. இருவருக்குமான பாதுகாப்பு ஏற்பாடுகளை நான் தனிப்பட்ட ரீதியாகச் செய்துள்ளேன்". என்றதும் "அது என்ன பாதுகாப்பு ஏற்பாடு" என வாயைப் பிளந்தா.

"கனடாவிலே கராட்டி வித்துவானுக உள்ள எனது மச்சான் பென் சூரியன், தனது சிஷ்யர்களோடை விஷேடமாக பிரான்ஸ் வந்திருக்கிருன்" என்றதும் அவவின் நெஞ்சு ஒரு தடவை பொம்மிப் புடைத்துக் கொண்டது.

சூரியன் பிரான்ஸ்க்கு வந்ததும், திடுதிப்பென எனக்குச் சொல்லாமல் கனடாவிற்கு ஓடியதையும் நீங்கள் அறிவீர்கள். இவனை நம்பி கேஸும் எழுதி அதற்குக் காட் கூட வந்தது. கனடா சென்றவன் எனது கடந்த காலங்களையெல்லாம் கதைகளாக எழுதுகின்ருன். அண்மையில் திருமதி O.C கூட "யார் அந்தக் காஞ்சனு?" என்று துருவ வெளிக்கிட்டதும், ஒருவாறு சமாளித்துத் தப்பிவிட்டேன். சூரியனின் கடந்த காலம் கூட எனக்குத் தெரியும். பக்கத்து

வாங்கில் இருந்த லட்சுமிக்கு இவன் நாவல் பழம் எறிந்ததும், எறியில் மயங்கிய லட்சுமி இவனது சுழட்டலே தான் அக்செப்ற் பண்ணிவிட்டேன் என்பதைச் சொல்ல நாவல் பழம் கிடைக்காமல் ஓர் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்துடன் அலையா அலைச்சல் அலைந்த சங்கதியையும் கட்டாயம் ஒரு காலத்தில் தொடர்கதையாக எழுதுவேன்.

"சூரியன் பாதுகாப்புத் தாறதெண்டா நான் கவிதை பாடத்தயார்... ஆனா... கவிதைதான் இல்லையே!" என திருமதி O.C சிணுங்கியதும் சில வெள்ளைத் தாள்களைத் தூக்கி மேசையிலே போட்டு விட்டு எனது கவிதைச் சிறகை அசைத்தேன். கவிதை பறந்து வந்து தாள்களை நிரப்பியது. கவிதையை வாசித்துவிட்டு அவ என்னை ஆரத்தழுவியதும் நான் கவியரங்கத்தை மறந்துவிட்டேன். இருவரும் மயக்கம் தெளிந்து விழித்தபோது 6 1÷4 ஆக இருந்தது. "நீர் முன்னே போம், நான் பின்னே வருகின்றேன்". என்று ஒரு பிளான் போட்டேன்.

மண்டபத்துக்குள் நான் நுழைந்தபோது கவிஞர்களுக்கான கதிரைகள் அடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. தமது தலைகளைச் சிலுப்பியபடி கவிஞர்கள் மூலைக்கு மூலை நின்று "என்னமோ" பெரிசாக் கதைப்பது போல பட்டது. இயற்கை மணம் கமழும் பூக்கள் சூடியிருந்த பெண்கள் மத்தியிலே நின்ற திருமதி O.C இன் கருகருத்த விழிகள் என்னையே ரசித்துக் கொண்டிருந்தன. பென் சூரியன் ஒரு மூலையிலே தனது சிஷ்யர் கோஷ்டியுடன் நின்று கொண்டிருந்ததால் பெண்கள் சந்திப்பினூடு தலையைப் போடச் சற்றே தயங்கினேன். சில நிமிடங்களிலே பெண் சூரியனின் தலை மறைந்தது. நான் இது தான் சந்தர்ப்பம் என பெண்கள் சந்திப்பில் தலையைப் போடச் சென்றேன். திருமதி OC என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தபோது அவர்கள் அனைவருமே இலக்கிய நாட்டம் கொண்டவர்கள் என்பதை அறிந்தேன். இவர்களுக்குள் ஒருத்தி "கவியரங்கம், இப்போது தொடங்கும் போல தெரியவில்லை. ஒரு குட்டிக்கதை சொல்லுங்களேன்" எனக் கேட்டாள். எனக்கு வலுபுளுகம். தாடியைத் தடவிவிட்டு ஒரு குட்டிக்கதை சொல்ல வெளிக்கிட்டேன். இந்த நேரம் பார்த்து, காணுமல் போன சூரியனின் தலை மண்டபத்துக்குள் வந்தது. பெட்டைகளிடம் எக்ஸ்யூஸ்மீ கேட்டுவிட்டு சூரியன் பக்கம்சென்றேன். "என்ன மச்சான், இண்டைக்கு கவியரங்கமோ, கராட்டியரங்கமோ நடக்கும்" எனக் கேட்டேன்.

"நான் ஒருக்கா திருமதி O.C யோடை பேர்சனலாப் பேசவேணும்" எண்டான், பேர்ஸனலா? பாதுகாப்பு நோக்கத்துக்கா ஒருக்கா வந்திட்டுப் போடா எண்டு கேட்டா, பேஸனல் அது இது எண்டு பெரிய கதையளை எடுக்கிருனே.

"அவ பிஸியிலே இருக்கிரு.. கவியரங்கம் முடிஞ்சோண்ணை கதைப்பம்" என்றேன்.


"அவவோடை நான் உப்பவே கதைக்க வேணும்" என்று அவன் சொன்ன வேகத்தைக் கண்டதும் ஓடிப்போய் திருமதி O.C இன் காதில் ரகஸியமாக "சூரியன் உங்களோடை பேர்ஸனலாகக் கதைக்க வேணுமாம்" என்றேன். மான் குட்டி போல துள்ளிப் பாயந்து அவ சூரியன் பக்கம் சென்ரு. இந்த நேரம் பார்த்து மண்டபத்துக்குள் வந்த பூங்கொடி "ஜெயந்தீஸன், எங்கையாவது ஓடித் தப்பும். திரு O.C ஏழு பெடியளோடை நிறை வெறியிலே வந்து கொண்டிருக்கின்ருர்" என்றதும் நான் சூரியனைத் தேடி ஓடினேன். விஷயத்தைக் காதுக்குள் போட்டேன். "நீங்கள் ரெண்டு பேரும் போய் மேடையிலே ஏறுங்கோ... நான் மிச்சத்தைக் கவனிக்கிறேன்" என்ருன். நாங்கள் மேடையில் ஏறியபோது சூரியன் மண்டபத்துக்குள் எட்டிப் பார்த்துக் கண்சிமிட்ட, சிஷ்ய கோடிகள் வெளியே போயினர், கவியரங்கம் தொடங்கியதும். "தமிழ் இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என்பதுதான் எமது கொள்கை. எமது நாக்குகளில் இருந்து பிறக்கும் கவிதைக் கனல்கள் இந்து மகா சமுத்திரத்தை தாண்டிச் சென்று எமது தேசத்தில் நடக்கும் அராஜகத்தை அழிக்கட்டும், சுட்டெரிக்கட்டும்" என நான் ஆக்ரோஷமாகக் குரல் கொடுத்தேன்.

இந்த வேளையில், ஒரு வட்டு எழும்பி, "அண்ணே, நீங்கள் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்திட்டியள், போராளியளுக்கு முதலிலே மௌன அஞ்சலி செலுத்துங்கோ" என்ருர்.

அதற்கு இன்னொரு வட்டு, "நீர் வீட்டை நித்திரை கொண்டிட்டு வந்திருக்கலாம் தானே" என்று அவருக்குப் பதிலளித்தது.

நிலைமை சீரியஸாகும் போல பட்டதால் "போராளிகளின் பேரால் நீங்கள் மூன்று நிமிடங்கள் தூங்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்" என்றவுடன் நாம் மூன்று நிமிடங்கள் தூங்கி விழித்தோம்.

வெளியே போன சூரியன் உள்ளே வரவில்லை, ஒட்டகச்சிவிங்கி குழுவும் தான். ஆனால் கவியரங்கம் இனிதே முடிவுற்றது. அடுத்த நாள் பத்திரிகைகளில் வெளியே அடிதடி இடம் பெற்றதாகவும் செய்தி வரவில்லை. என்ன நடந்தது? இதனைக் கூரியனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.



# அரசாங்கத்தின் படுகொலைக் கலாச்சாரத்தை இப்பொழுதாவது நிறுத்தியே ஆகவேண்டும்

**1994 ஜனவரி 16 ராவய ஆசிரியர் தலையங்கம்**

**தமிழாக்கம்:செ.லோகநாதன்**

சூரியகந்தையில் காணப்பட்ட சடலக்குழிகள் சம்பந்தமான விசாரணை தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகள் மிகவும் நிந்தனைக்குரியவையாகும். அங்கு காணப்பட்ட எலும்புகள் 1971 கிளர்ச்சியோடு ஒட்டியவையாக இருக்கலாம் என முதலாவது சுற்றில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ செய்திப் பத்திரிகைகள் கூறின. அவ் எலும்புகள் இரண்டாவது கிளர்ச்சியின்போது ஜேவிபியினால் படுகொலை செய்யப்பட்ட மனிதர்களின் எலும்புகளே என இப்பொழுது அரசாங்கம் கூறுகிறது.

கலவரத்தின் போது ஜேவிபியினர் படுகொலைகளில் ஈடுபட்டதை மூடி மறைப்பதோ அல்லது ஜேவிபியினால் கடைப்பிடிக்கப்பட்ட படுகொலை கொள்கையை மூடிமறைப்பதோ எமது அவசியம் அல்ல. அக்கலவரத்தில் ஜேவிபியினால் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர் என்பது எவ்வித விவாதத்திற்கும் இடமற்ற உண்மையாகும். அவ்வாறே அக்காலகட்டத்தில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான, உத்தியோகபூர்வமற்ற படைகளால் மிகப் பெருந்தொகையானோர் மிகக் குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர் என்பதும் எவ்வித விவாதத்திற்கும் இடமற்ற உண்மையாகும்.

ஆயுதக்கிளர்ச்சி ஒன்றின் முன்னால் எந்தவொரு அரசாங்கமும் கையை கட்டிக்கொண்டு சும்மா இருக்கும் கொள்கையை கொண்டதாக இருக்க மாட்டாது என்பதையும் நாம் அறிவோம். ஆனால் இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஜனநாயக அரசாங்கம் அக்கிளர்ச்சியை அடக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சட்டத்துக்கு அனுகூலமானதாகவும் நியாயமானதாகவும் இருக்கவேண்டும் போர்க்களத்தில் கொல்லப்படுவதற்கு இடமிருந்தாலும் சிறைப்பட்டவர்களை கொலை செய்யும் உரிமை எந்த அரசாங்கத்துக்கும் இருக்க முடியாது. ஆனால் அரசாங்கம் எவ்வித விளக்கமும் இன்றி கைது செய்யப்படுபவர்களையும் சிறைபிடிக்கப்பட்டு இருந்தவர்களையும் தொகையாக கொலை செய்யும் கொள்கையையே கடைப்பிடித்தது என்பது எவ்விதத்திலும் பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாத உண்மையாகும்.

கிளர்ச்சியை அடக்குவதற்காக அரசாங்கத்தின் வசம் இருந்த அதிகாரத்தை ஆயுதமாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகளைச் செயலிழக்கச் செய்வதற்காக எதிர்க்கட்சி ஆதரவாளர்களை கொலை செய்யும் கொள்கையையே அரசாங்கம் கொண்டிருந்தது என்பது தெளிவான விடயமாகும். அவ்வாறே கிளர்ச்சியை அடக்குவதற்கான உருவாக்கப்பட்ட உத்தியோகபூர்வமற்ற படைகளுக்கும் நாட்டில் இடம்பெற்ற மர்மமான அரசியல் படுகொலைகளுக்கும் இடையே உறவு உண்டு என்னும் சந்தேகம் பொதுமக்கள் மத்தியிலே காணப்படுகிறது.

நாட்டில் நிலவும் படுகொலை அரசியல் கலாச்சாரத்தை வேருடன் பிடுங்கி எறிவதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முன்னோடி முயற்சியிலும், இடம்பெற்றுள்ள அச்சம்பவங்களை ஆய்வுக்குட்படுத்தல் மிகவும் அவசியமானது. சூரியகந்தையில் தொகையான சடலங்களைக் கொண்ட பல குழிகள் கண்டுபிடிக்கப்பட்டதும் இது சம்பந்தமாக விசாரணைகளைத் தொடங்கியதும் அவ்வாறான ஆய்விற்கான முன்னோடியான ஆரம்பம் எனக் கருதலாம்.

ஆனால் இச் சடலக் குழிகள் சம்பந்தமாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைகளும் அவ்வாறே பலவந்தத்தின் மத்தியிலாயினும் கூட தேசியப் பத்திரிகைகள் இது பற்றி கடைப்பிடிக்கும் கொள்கைகளும் மிகவும் நிந்தனைக்குரியவை என்பதை கூறவேண்டியுள்ளது.

சூரியகந்தை சடலக் குழிகளுக்கு மாஜிஸ்திரேட்டால் போடப்பட்டிருந்த சிவில் பாதுகாப்பை அரசாங்கம் அகற்றியது. இரண்டாவது தடவையாக குழிகளை தோண்ட ஆரம்பிக்கும் போது, விசாரணையைத் திசை திருப்புவதற்காக அச்சடலக் குழிகளுக்குள்ளே வேறு எலும்புகள் போடப்பட்டிருந்தது தெளிவாகக் தெரிந்தது. சடலக் குழிகளை பாதுகாப்பதற்காக பொலீசாரும் இரகசியப் பொலீசாரும் மட்டுமே கடமையில் ஈடுபடுத்தப் பட்டார்களாயின் அரசாங்கத்தால் மட்டுமே இவ்வாறு எலும்புகளைப் போடமுடியும்.

இரண்டாவது விசாரணைக்காக குறிக்கப்பட்ட தினத்திற்கு முதல் நாள் இரவு பெல்மதுளையைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் சுடுகாடுகளிலிருந்த சடலக் குழிகளைத் தோண்டி அவற்றின் எலும்புகள் இவ்விசாரணையுடன் தொடர்பான எதிர்க்கட்சியினரது வீட்டுக்கு முன்னாலும் சூரியக் கந்தையை நோக்கிச் செல்லும் தெருவிலும் போடப்பட்டிருந்தன. மறுதினம் எம்பிலிப்பிட்டியவில் அடையாள அணிவகுப்பின் பின்னர் திரும்பி வந்து கொண்டிருந்த முறைப்பாட்டுதரப்பு சட்டத்தரணியின் வாகனத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

சூரியக்கந்தையில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புகள் கடந்த கலவர காலத்தில் ஜேவிபியினுல் படுகொலே செய்யப்பட்டவர்களது எலும்புகளே என அரசாங்கம் இரகசியப்பொலீசாரைக்கொண்டு கூறும் கதை அப்பட்டமான பொய் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லே. இச் சடலக் குழிகள் காணப்பட்ட ஸ்தானத்தில் ஆருவது பீரங்கிப்படையின் இராணுவ முகாம் ஒன்று 1990 ஆண்டு இடைப்பகுதிவரை இருந்தது. இராணுவ முகாம் இருந்த பூமியில் தம்மால் படுகொலே செய்யப்பட்டவர்களேப் புதைக்கும் ஆற்றல் ஜேவிபிக்கு எவ்விதத்திலும் இருக்க முடியாது.

இப்படுகொலே அரசியல் கலாச்சாரத்தை தொடர்ந்தும் நிலவச் செய்வதைத் தவிர அதனே அகற்றும் அவசியம் அரசாங்கத்துக்கு இல்லே என்பதையே இவ் அனேத்து நடவடிக்கைகளும் தெளிவாகக் காட்டுகின்றன. ஆனுல் மக்களின் அபிலாஷை இதற்கு மாருனது. இப்படுகொலே அரசியல் கலாச்சாரத்தை அகற்றுவதே மக்களின் அபிலாசையாகும்.

## பென் சூரியனின் குட்டிக்கதைகள்

# கற்புக் கவசம்

சோமநாதனுக்கு நித்திரை வரவில்லே. மண்டை வெடித்தது.

வெளியே போகும் போது பத்திரமாக கதவைப் பூட்டி விட்டு அதற்கு மேலால் உள்ள பூட்டையும் போட்டுச் செல்வான். தன்ரை வீடு பத்திரமாய் இருக்க அவன் பூட்டுருன், உனக்கென்னடா என்கிறீர்களா? பிரச்சனே அதுவல்ல. உள்ளே அவனுக்கு இலங்கையிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட ரஞ்சினி அல்லவா இருக்கிருள். தான் வேலேக்கு போகும் போது தனது பொருட்களேயும்தனது மனேவியின் கற்பையும் யாரும் திருடி விடக் கூடாது என்பதற்காக சோமநாதன் இவ்வளவு கவனமாக இருக்கிருன். உள்ளே அவ பத்திரமாக இருப்பா. தற்செயலாக வீடு தீப்பற்றினுலும் அவ தீயில் சங்கமித்து தன் கற்பை நிருபிக்க வேண்டியதுதான். அவன் வீட்டுக்கு யார் போன் பண்ணினுலும் அவ எடுக்க முடியாது. ஆன்ஸரிங் மெஷினேடு பேச வேண்டியதுதான். தான் எடுக்கும் போது மட்டும் ஆன்சரிங் மெசினில் குரலேக் கேட்டதும் எடுக்க வேண்டும். அவ பத்திரமாகத்தான் இருக்கிருவா என்பதை உறுதி செய்து கொள்ள அடிக்க அவன் கோல் பண்ணுவதும் உண்டு. அவ குசினியில் அலுவல் காரணமாக எடுக்கப் பிந்தினுலும் 'என்னடி, ஆரோடயும் படுத்திட்டு வாறியோடி' என்று தயக்கமில்லாமல் கேட்பான் சோமநாதன்.

அவவுக்கு சமைப்பதும் வீடியோ பார்ப்பதும் அவன் கேட்கிற நேரங்களில் அவனுக்கு சுகம் கொடுப்பதும் தான் தொழில். சோமநாதன் வீட்டுக்கு வந்ததும் செய்கின்ற முதல் வேலே யார் யார் போன் பண்ணினுர்கள் என்று பார்ப்பது தான். அதில் யாரும் அவனுக்கு தெரியாத யாராவது போன் பண்ணியிருந்தால் அவ தொலேந்தா. அவவின் கள்ளப்புருசன் தான் அது என்பது தான் சோம்நாதனின் முடிவு. உடனே உதையும் அடியும் சரமாரியாகும். மூசி மூசி அவவுக்கு அடித்து முடித்து அவ அழுது ஓய்ந்த பின்னர் மெதுவாக இரவு சாயும் போது மெதுவாக அன்பாக பேசத் தொடங்குவான். அது காரணத்தோடு.

சில வேலே வெட்டி இல்லாததுகள் இவனது நம்பருக்கு எங்காவது பூத்தில் நின்று எடுத்து பேசாமல் நிற்கும். அன்று ரஞ்சினி பாடு அரோகரா. உன்னுேட கதைக்கிறவங்கள் நான் எடுத்தவுடன பேசாமல் நிக்கிருங்கள் என்று பூசை நடக்கும்.

முன் வீட்டில் இருக்கின்ற பெடியனேக் கண்டால் இவனுக்கு நரி வெருட்டும். ஐயோ, நானில்லாத நேரம் ஏதும் செய்திடுவாங்களோ என்ற பயம்.. உவங்கள் கூடாத பெம்பிளேயளோட போய் உவங்களுக்கு கெட்ட வியாதிகள் வந்திருக்கு என்று சொல்லி அவவைப் பயப்படுத்தி வைத்திருந்தான். அவவின் கற்பை பத்திரமாய் பாதுகாப்பதற்கு அவன் பட்ட பாடு கொஞ்சமா? நஞ்சமா?

இன்றைக்கும் அப்படித் தான். அவன் வந்தபோது அவவுக்கு நெஞ்சு பக்கு பக்கு என்றது. அறுவான் இண்டைக்கு துலேக்கப் போருன் என்று. வந்ததும் முதல் வேலேயாக மெஷினேப்போட்டால்யாரோ ஒரு வப்பு மெஷினில் விசில் அடித்ததுடன் ஹாய் ஹனி என்று விட்டிருந்தது. 'எளிய நாயள், அலேயுதுகள்' என்ற சோமநாதன் அவவின் தலேமயிரைப் பிடித்து 'ஆரடி அவன்' என்ருன். 'ஐயோ, எனக்குதெரியாதுங்கோ' 'என்னடி ஆடுறியோ? அவங்களுக்கு என்னண்டடி என்ரை நம்பர் தெரியும். நீ கீழே வோஷிங் மெசினுக்கு போடப் போகேக்கை கண்டிட்டாய்போல, இனிமேல் போகப்படாது' பேசிக்கொண்டே சோமநாதன் உதைக்கத் தொடங்கினுன்.

எப்போது விடியும் என்று காத்திருந்த சோமநாதன் உடனடியாக பெல் கனடாவிற்கு அடித்து தனது பெயரை புத்தகத்தில் போடாமல் இரகசியமாக வைத்திருப்பதற்கும் தனது இலக்கம் மற்றவர்களின் போனில் தெரியாமல் இருப்பதற்கும் காசு செலவிட்டு தனது மனேவியின் கற்பை கவனமாக பாதுகாக்க சித்தம் கொண்டான்.

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 13

### சின்னத்தம்பி வேலாயுதம்

## ஈழப்பிரிவினையும் இந்தியாவும்

இத் தொடரிலே இவ்வத்தியாயம் மிக முக்கியமானது என முன்னரே குறிப்பிட்டுள்ளேன். வரலாறு இந்தியா இலங்கை மீது படையெடுத்த மன்னர் பரம்பரைகளை நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்ற போதும் 1947 ல் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்ட இந்தியாவும் அதைத் தொடர்ந்து எவ்வித போராட்டமுமின்றிச் சுதந்திரத்தைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துப் பெற்றுக்கொண்ட இலங்கை (1948) யும் எமது காலத்தில் கண்டிருக்க முடியாத மிக மோசமான வெளியுறவுக்கொள்கையால் இன்று சீரழிந்து கொண்டிருக்கின்றன. இதன் பின்னணி என்ன, இதிலே சம்பந்தமான ஒவ்வொருவரதும் பங்கு என்ன என்பன போன்ற விடயங்களை ஆராய்வதே இத் தொடரின் நோக்கமாகும்.

இங்கே இந்தியாவின் சர்வதேச வெளியுறவுக் கொள்கைகளும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதன் கொள்கைகளும், செயற்பாடுகளும், இந்தியாவும், தமிழகமும், இந்தியாவும் இலங்கையும், இந்தியாவும் ஈழப் பிரிவினையாளர்களும், R.A.W எனப்படும் இந்திய வெளியுறவு உளவு ஸ்தாபனம் என்பன முக்கியமானவை சுதந்திரத்தின் பின் வந்த காலகட்டங்கள் பற்றிய சுருக்கமான வரலாறு பற்றிப் பார்த்தோமானால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் பற்றி அறியலாம்.

'பாரதமாதா' என்று மகாகவி பாரதியார் தொடக்கம் இன்றைய இந்தியன் வரை 'முதலில் தான் ஒரு இந்தியன் பின் தமிழன்' என்ற தேசபக்தியை கொண்ட தமிழர்களும் இன்னும் பதினைன்கு பிரதான மொழி பேசும் இனங்களும் உலகின் முதலாவது பெரிய ஜனநாயக நாடு இரண்டாவது சனத்தொகை யுடையது, மூன்றாவது பெரிய உளவுத்துறையை (R.A.W) கொண்டது. நான்காவது பெரிய இராணுவத்தைக் கொண்டது என்ற விடயங்களை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர். மிகப்பழைய நாகரீகமெனப்படும் சிந்துவெளி (மொகஞ்சதாரோ, கரப்பா) நாகரீகத்தின் சொந்தக்காரர்களுமாவார்.

இந்தியா சுதந்திரமடைந்தபோது 1947ம் ஆண்டு பாகிஸ்தானின் பிரிவு அதனால் ஏற்பட்ட மனித உயிரிழப்பு பிரிவினையைத் தூண்டிவிட்ட பிரிட்டிஸார் என்பன மிகவும் கசப்பான அனுபவங்களுடன் தான் இந்தியா தனது சுயாட்சியைத் தொடங்க வேண்டியிருந்தது. பிரிவினையில் ஏற்பட்ட கசப்புணர்வுகள் காரணமாகவே இந்திய– பாகிஸ்தானிய முரண்பாடுகளை வைத்தே மேற்குலக ஏகாதிபத்தியங்கள் எதிரி படலையில் என்ற நிலையைத் தோற்றுவித்தன. பின்வந்த காலங்களில் அமெரிக்காவின் ஆயுத உதவி உட்பட்ட பொருளாதார உதவிகள் P.L480 சட்டத்தின் மூலம் பாகிஸ்தானுக்குக் கிடைத்தன. இந்தியா தன்னைச் சூழவுள்ள நாடுகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டிய தேவையை உணர்த்தியது.

பாரதப் பிரதமர் நேரு 'பஞ்சசீல' கொள்கையை முன்வைத்து இந்தியாவைக் கட்டியெழுப்ப முயற்சி செய்த போதும் உள்ளும், புறமும் எதிரிகள் பற்றிய விழிப்புடன் இருக்க வேண்டியேற்பட்டது. உள்நாட்டிலும் திராவிடப் பிரிவினை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இந்த நிலையில் 1952÷53 ம் ஆண்டு காலகட்டங்களில் கராச்சி, லாகூர், டக்கா ஆகிய பாகிஸ்தானிய நகரங்களிலும் பர்மாவிலும் கொழும்பிலும் இந்தியாவின் உளவு நிறுவனம் (INTELLIGENCE BUREAU–''IB'') அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. இவை தான் வளர்ச்சி பெற்று இன்றைய 'ரோ' வாக இயங்குவது குறிப்பிடக் கூடியது.

1960 ம் ஆண்டு இந்திய இராணுவம் கோவாவில் உட்புகுந்து போர்த்துக்கேயர் ஆட்சியிலிருந்த கோவாவை விடுதலை செய்து கொண்டது. இந்தியா விடுதலையடைந்த போது சில மன்னர் ஆட்சிப் பிரதேசங்கள் கோவை போத்துக்கேயரிடமும், பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரரிடமும் இருந்தது. 1962ம் ஆண்டு அக்டோபர் மாதம் மக்மோகன் எல்லைக் கோட்டை அடிப்படையாக வைத்துச் சீன–இந்திய எல்லைச்சண்டை தொடங்கியது. இதிலே சீனா கணிசமான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. நேருவின் பஞ்சசீலக் கொள்கை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியது. நேருவின் பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன் ஒரு சீன ஆதரவாளர் எனவும் அதனால் தான் இந்தியா தோற்றதெனவும் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களில் மேனன் பதவி துறந்தார். எது எப்படியாயினும் இந்தியா தனது இராணுவ பலத்தை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவையை உணர்த்தியது. இன்று சீனாவும் இந்தியாவும் நட்புறவு ஒப்பந்தத்துக்கு வந்துள்ளனர். அது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

1962 யுத்தத்தைத் தொடர்ந்து 1965 செப்டம்பரில் இந்திய–பாகிஸ்தானிய யுத்தம் தொடங்கியது. சுதந்திரத்தின் போது நடந்ததை முதலாவது என்றும், இதை இரண்டாவது என்றும் அழைப்பர். 1964ல் நேரு காலமானதைத் தொடர்ந்து பதவியேற்ற லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இந்த யுத்தத்துக்கு முகம் கொடுத்தார் இந்த யுத்தத்தில் பாகிஸ்தான் அமெரிக்க நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தியதோடு

இந்தியாவால் தோற்கடிக்கமுடியாத இராணுவச் சமநிலையைப் பேணிக் கொண்டது இச்சம்பவமானது இராணுவத்தை கட்டியெழுப்பவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் சோவியத் யூனியனுடன் நட்புறவைப் பலப்படுத்திக் கொள்ளவென "தாஸ்கண்ட்" விஜயம் செய்கிறார். அங்கு மாரடைப்பால் காலமாக காமராஜர் பிரதமராவார் என்ற வதந்திகள் வருகின்றன. காமராஜர் திருமதி இந்திரா காந்தியை பிரதமராக்கிக் (KING MAKER) என்ற பட்டத்தைத் தட்டிக் கொள்கிறார். திராவிடர் பிரதமராக முடியாது என்ற மலினமான அரசியல் நெடி சென்னையில் வீசுகிறது. இன்று திராவிடரான நரசிம்மராவ் பிரதமராகி இருப்பது கவனிக்க வேண்டியது.

இந்திரா காந்தி நேருவின் பஞ்சசீலக் கொள்கைகளைத் தூக்கிக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு இந்திய இராணுவத்தைச் சீரமைப்புச் செய்தார். நேருவின் "மென்போக்கை" கடும் போக்காக்குகிறார். 1968ம் ஆண்டு (I.B) எனப்படுகின்ற உளவுத்துறையை (R.A.W) என்கின்ற உளவுத்துறையாக மாற்றினார். அதன் தலைவராக (R.N.Kao) ஆர்.என்.காவ் நியமிக்கப்பட்டார். R.A.W வின் காரிய கர்த்தா இந்திராகாந்தி என்பதை விட காவ் என்பதே பொருத்தமானதாகும். 1970 ல் கொழும்பிலும் I.B ஸ்தாபனம் ரோவாக மாற்றப்பட்டது.

1971ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்குமிடையே சமாதான, நட்புறவு, பரஸ்பர ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இருபது வருடங்களுக்கான இந்த ஒப்பந்தம் இந்திய அரசியலில் ஒருதிருப்புமுனை எனலாம். ஏனெனில் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடொன்று கம்யூனிஸ நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதேயாகும். இதற்கான அடிப்படைக் காரணம் இலகுவில் விளங்கக் கூடியது. அமெரிக்கா பாகிஸ்தானுக்கு உதவியளிப்பதால் மேற்குலகத்தின் மீது இந்தியாவின் ஆத்திரமும் சீனாவுடன் பகைமையும் இருந்தால் சோவியத் யூனியன் மட்டுமே நட்புறவுக்கு ஏற்றதாக விருந்தது. நேட்டோ கூட்டு நாடுகளுடன் சேரும் நிலை இல்லாததால் வேறு வல்லரசுகள் இருக்கவும் இல்லை. சீனா-சோவியத் தத்துவார்த்தப் பகையும் ஒரு காரணமாகும்.

இந்தியா சோவியத் யூனியனுடன் ஒப்பந்தம் செய்யவேண்டிய முக்கிய தேவையென்ன? ஏற்கனவே பாகிஸ்தானின் பிரிவினைக் கோரிக்கை வலுத்துக் கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்துபோகக்கூடிய ஒரு தருணம் வந்துவிட்டது. பாகிஸ்தானின் பலத்தை உடைப்பது இந்தியாவின் தேவையும் கூட, எனவே பங்களாதேஷ் அகதிகள் வருகையை காரணமாக வைத்து இந்தியா தலையிட்டது.

1971 டிசெம்பரில் இந்தியப் படைகள் கிழக்குப் பாகிஸ்தானில் புகுந்தன. இருவார காலயுத்தத்தில் கிழக்கு பாகிஸ்தான் விடுவிக்கப்பட்டது. இந்தியாவுக்கு சோவியத் உதவி தாராளமாகக் கிடைத்தது. நவீன ஆயுதங்கள் மிக் விமானங்கள் விமான ஓட்டிகள் முக்கியமானவை. மேற்கு பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவத்திடம் சரணடைந்தது. சோவியத் இந்திய நட்புறவு ஒப்பந்தம் இந்த யுத்தத்தில் மிக முக்கிய பாத்திரத்தை வகித்தது.

முதலாவதாக அமெரிக்கா பாகிஸ்தானுக்காக நேரடியாக இறங்கினால் இரு பெரும் வல்லரசுகளின் உலகயுத்தமாக இது மாறிவிடலாம் என்பதுடன் அமெரிக்க பிரபல்ய ராஜதந்திரியான ஹென்றி கீசிங்கர் கூறியது இன்னும் நினைவிலுள்ளது. அதாவது இந்திரா காந்தியை அமெரிக்கா குறைத்து மதிப்பீடு செய்ததே அமெரிக்காவினால் உடனடியாக எந்த அசைவுகளையும் எடுக்க முடியாமற்போனதென்று. இதற்காக ஒருதடவை தகுந்த பாடம் கற்பிக்கும் அரசியற் சதுரங்கத்திலும் ஈடுபட்டு வருகிறது.

பாகிஸ்தான் பிரிவினையில் இந்திரா காந்தியின் வெற்றி சர்வதேச அரங்கில் நேருவை விட ஒரு படி மேலே கொண்டு சென்றது. இங்கேதான் இந்தியாவின் 'இறுமாப்பும்' வளரத்தொடங்கியது. பங்களாதேஷ் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இலங்கையில் சிறிமாவோ பாகிஸ்தானில் பூட்டோ பதவியிலிருந்தார்கள். பாகிஸ்தானிய யுத்த விமானங்கள் கொழும்பில் எண்ணெய் நிரப்புவதை, இந்திய ஆட்சேபனையின் மத்தியிலும் சிறிமாவோ அனுமதித்தார். இதற்கான காரணங்கள் சுவாரஷ்யமானவை. சிறிமாவோ சீனா, இந்தியா, பாகிஸ்தானுடன் ஒரே வித நட்பையும் பாகிஸ்தான் சீன, இலங்கையுடன் நட்பையும், இந்தியா இலங்கையுடன் மட்டுமே நட்பையும் பேணிக் கொண்டிருந்தன. இங்கே சிறிமாவோவின் அணுகுமுறைகள் முக்கியம் பெறுகின்றன. ஒரு அணிசேராச் செயற்பாடு இந்தியாவுக்குக் கச்சைதீவைப் பரிசாகக் கொடுக்குமளவிற்கு வளர்த்தது.

பங்களாதேஷ் பிரிவினையின் பின் இந்திராகாந்தி, சிறிமா, பூட்டோ, 1976ல் கொழும்பில் 5 வது அணிசேரா மகாநாட்டில் சந்திக்கும் வரை அண்டை நாட்டுறவுகள் சுமுகமாகிவிருந்தன. மீண்டும் 1977ம் மார்ச்சில் இந்திராவும் தோற்றுப்போக ஆடியில் சிறிமாவோவும் தோற்றுப்போகவும் 1979 ல் பூட்டோ தூக்கிலிடப்பட்டு இராணுவ ஆட்சி வரவும் மீண்டும் எமது பிராந்திய அரசியல் அயலுறவுகள் சீர்கெடத் தொடங்கின.

டிசம்பர் 1979 சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் நுழைந்தன. இதிலே இந்தியாவின் நிலைப்பாடு சோவியத் யூனியனுக்குச் சாதகமாகவிருந்தது. 1977ல் பதவியிழந்த இந்திரா 1980 ஜனவரியில் இந்தியப் பிரதமரானார்.

மேற் கூறப்பட்ட பகுதியில் சுதந்திர இந்தியாவின் வெளியுறவு பற்றிப் பார்த்தோம். இனி இந்தியாவும் தமிழகமும் பற்றி அடுத்தவாரம் பார்ப்போம்.

இரவெல்லாம் பனிதுளிகளை
தாங்கிக்கொண்டிருந்த
நாணற்புற்களிலிருந்து
பனிதுளிகள் வடியும்
ஓசை ......

பக்கத்துவீட்டு ராசாத்தி அக்கா
முனியாண்டி சாமிக்கு நேத்தி
வைத்து அடைத்தே வளர்க்கும்
அந்த சிவப்பு சேவல் கூண்டுக்குள்
நடைபயிலும் ஓசை ....

சுழல்காற்றின் ஊளையுடனும்
கைகோர்த்த புழுதியுடனும்
இலைகளுக்கு எல்லாம் இறக்கை
முளைத்து பறக்கும் ஓசை ......

புஞ்சிபண்டாவின் மனைவி
பசுவின் முலைகளுக்கு
தண்ணீர் தெளித்து
பால் கறக்கும் ஓசை.....

பாட்டி
சுள்ளிகளை அடுப்பில் வைத்து
தீப்பெட்டியுடன் தீக் குச்சியை
உரசும் ஓசை மெதுவாய்..

தண்ணீர் கொதித்து
சட்டிக்குள்ளே
நடனமாடும் சத்தம்
மெதுவாய்....

கோடியில் கிணற்றில்
அம்மா குளிக்கும்
ஓசை மெதுவாய் மெதுவாய்

தாத்தா பத்திரிகையை புரட்டி
வாய்குள் முணுமுணுத்து
[illegible]
போர்வையை எடுத்து
தூர எறிகிருள் அம்மா.....

குளிர் ஒருக்களித்து படுத்த நான்
திடுக்கிட்டு எழுந்திருக்கின்றேன்
கண்ணீரால் தலையணை ஈரமாய்...

விடிந்து கனநேரமாகிவிட்டிருந்தது.....

மாடியிலிருந்து
கண்ணுடி ஜன்னலினூடாக
வெளியே பார்க்கின்றேன்
எங்கும் பனிமூட்டங்கள்
பாதைகள்
தொலைந்து போயிருந்தன
கூரைகள் மறைந்து போயிருந்தன
வானம் அழுது கொண்டிருந்தது...

என் அம்மாவைக் காணவில்லை
அவள் குரலையும் காணவில்லை
அவள் உருவத்தையும் காணவில்லை
கோடியிலே காயப்போட்டிருக்கும்
ஈரசேலையையும் காணவில்லை....

அவள் உலகத்தின் மறுபக்கம்
எனக்கு விடியல் என்ருல்
அவளுக்கு இருட்டு
இப்போது அவள் உறங்கியிருப்பாள்.....

தாத்தா உட்கார்ந்திருந்த இடமும்
பாட்டி உலாவி திரிந்த இடமும்

நான் படுத்திருந்த கட்டிலும்
வெறுமையாய்
அவள் மட்டும் தனித்து
இருப்பா.....ளோ?

*மொனிக்கா*

## மௌனப் பாடம்

வண்ணத்துப் பூச்சி
எப்போதேன் தன் சிறகுகளை
மிகவும் வலிதாக மடக்கிஞல்
அவர்கள் கூவினர்: அமைதி!

அருண்ட பறவையொன்றன்
சிறகு சூரியக் கதிரில்
உரசுபட்டாலும்
அவர்கள் கூவினர்: நிசப்தம்!

இவ்வாறு அவர்கள்
முரசங்கள் மீது இரையாது நடக்க
யானைகட்கும்
மண் மீது நடக்க மானுடர்க்கு கற்பித்தனர்

வயல்வெளிகளில் மரங்கள்
ஒலியின்றி எழுந்தன
அச்சதில் ரோமம் எழுவது போல..

## கனவு

எரியும் வனத்தினின்று மான் போலக்
கவிஞனை அவன் துயிலினின்று
துள்ளச் செய்த
துர்ச்சொப்பனம் எது?

அவனது உவமேயத்தின் வண்ணத்துப் பூச்சி
தன் சிறகுகளால் அவனுக்கு முகத்திரை
இட்டிருந்தது
அவன் வர்ணித்த கதவுக்குமிழ் நடுக்குற்றது

(Tymoteusz Karpowicz)
(போலந்துக் கவிஞரான இவர் வில்னேவில்
1921ல் பிறந்தார். தமிழில்:மணி)

## சங்கல்பம்!

விருச்சங்கள் சருகுகள் உதிர்த்து
மொட்டையடித்துக் கொண்டுவிட்டன
சில்லிடும் மறைவெப்பம் என்
உச்சந் தலையில் சிலிர்ப்பை கொணரும்

இங்கு எனக்கு
இன்னுமொரு புதுவருடத்தின் உதயம்!

நான் சங்கல்பம் கொள்ளுவதும்
இன்னும் இன்னுமொருதரமாய்....

நேற்றுவரை தேய்ந்துபோன செருப்பை
கழற்றி யெறிய வேண்டும்!!

என் பாதைகளை ஆக்கிரமித்திருக்கும்
சறுக்களினை இனிமேல்
கவனமாய் தவிர்க்க வேண்டும்!

நேற்று நெருப்பினில் சுட்டுக் கொண்டது
ஞாபகத்தில் இருப்பதால்
இனி புதிதாய் சட்டையொன்று தைத்து
போட்டுப் பார்க்க வேண்டும்

என்னைப்பற்றியும் எதைப்பற்றியும்
நானே நானுய் இருந்து
நிர்ணயம் செய்வதும்கூட
இனி அவசியம்தான்!
இனியொருதரமேனும்
நான்
மூக்கில் அப்பிக் கொள்ளப் போவதில்லை!

சுடுசோற்றை அள்ளிப் போட்டதில்
நாக்கு சுவைதெரியாமல் வெந்து போனது!
எனக்குள் இனி படிமானம் வர வேண்டும்!
மெதுவாய் மெதுவாய்
ஓரங்களில் சுற்றி சாப்பிட்டு
முழுத்தட்டின் சுவையறிய வேண்டும்!

இருப்பதை விடவும் கூடுதலாக இன்னும்
மனிதம் கொள்ளுதலும் தேடுதலும்
முயற்சிக்கப்படுதல் கூட
மனசிற்கு சாந்தி தரக்கூடும்!

பிசாசுகள் தாண்டவமிடும் அந்த
பாட்டோ ஏதேனும் கூத்தோ
இல்லை அந்த உதைபடும் ஆட்டங்களையோ

நான் முற்ருய் தவிர்க்கப் போவது
முட்டாள்தனமான முடிவல்ல

இன்னும் சிறிது கணங்களில்
விருச்சங்களில் துளிர்த்தல் நிகழும்!
பின் உதிர்தலும் கூட
மிக மிக விரைவாய்தான்!

பின்னுமொரு வருஷத்தின் முடிவில்
நான் மீண்டும் ஒருதரம்
சங்கல்பம் கொள்ளுதலும் கூட
விரைவாய் நிகழும்.

**அனந்தன்**

---

என் அந்தப்புரத்தில்
அழகான பூக்கள்
அவற்றின் மகரந்தத்தை
வண்டுகள் பூசிக்கொள்கின்ற ஓசை....

வாசிக்கும் ஓசை

பொம்பிளை பிள்ளையா
இவ்வளவு நேரம்

## விடுதலையின் விலை?

சகோதரி,
குறுகத் தறித்து அழகாக வாரி மெழுகிட்ட
உன் கூந்தலும்
மிடுக்கான ஆடைகளும்
எடுப்பான நிமிர்ந்த நடையும்
உன் சமத்துவத்தின் பிரகடனங்கள்
போதாமல்,
மேலும் விளங்குவதற்காகப்
புகை மூலஞ் சைகைகள் விடுக்கிருய்
விறகடுப்பை ஊதிய பழைய பரம்பரையின்
புகைச் சைகைகளினின்றும்
இவை வித்தியாசமானவை மிகவும்
அச்சமற்று உரத்துச் சிரிப்பதும்
அடங்குதற்கு மறுப்பதும்
எதிர்வாதம் புரிவதும்
பெருமைக்குரிய வெற்றிகள்.
ஆயினும்
வண்ணக்கலவை பூசிய உன் கண்ணிமைகளும்
பிடுங்கிச் செப்பனிட்ட உன் புருவமும்
பூச்சும்
காதிலுங் கழுத்திலுஞ் சிலசமயங் கைகளிலுங்
கிடக்கும் நகைகளும்
விடுதலை பெருத பிரதேசங்கள் சில
உன்னுள் இன்னமும் உள்ளதாகவே
சொல்கின்றன.
அனைத்தினும் முக்கியமாக,
உன்வீட்டுக் குசினிக்குள்ளும்
தோட்டத்திலும்
பிள்ளைப் பராமரிப்பிலும்
குறைந்த கூலிக்கு முறிகிற அவளும் அவனும் உனது
விடுதலையை உறுதிப்படுத்தவில்லை உறுதியாக,
அவர்கள் விடுதலைபெருமல் உனக்கும் விடுதலையில்லை

**புவனம்**

# மெக்சிக்கோவில் ஒரு ஆயுதக் கிளர்ச்சி

1994ம் ஆண்டு மெக்சிக்கோவில் வன்முறை அதிர்வுகளுடன் பிறந்திருக்கிறது மிக நீண்டகாலமாக மெக்சிக்கோ அரசாங்கத்தின் பல்வேறுபட்ட அடக்குமுறைக் கொடுமைகளுக்கும், பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஆளாகிவந்த 'ஸபாரிஸ்ற்' இனம் மெக்சிக்கோவின் சியபாஸ் மாநிலத்தில் ஆயுதங்கள் மூலம் அரசாங்கத்திற்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய முயன்றிருக்கிறது. ஸபாரிஸ்ரா தேசிய விடுதலை இராணுவம் (ZAPATISTA NATIONAL LIBERATION ARMY) மாநிலத்தின் நான்கு முக்கிய நகரங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து மெக்சிக்கோ அரசாங்கத்துடனான தமது போரை பிரகடனம் செய்தனர். ஆத்திரமடைந்த அரசு அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியது. ஸ்பாரிஸ்ற்றுகளின் கிளர்ச்சியை அடக்குகிறோம் என்ற பெயரில் இராணுவம் வெறியாட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டது. மக்கள் வாழும் பகுதிகள் மீது விமானங்களும், ஹெலிகொப்டர்களும் குண்டுகளை வீசின, கொரில்லா போர் முறையில் அனுபவப்படாத மெக்சிக்கோ இராணுவம் அப்பாவி மக்களை கொன்று கொலை வெறியாட்டம் நடத்தியது. ஸபாரிஸ்ற் போராளிகளோ மலைகள் நிறைந்த தமது பிரதேசத்தில் பின்வாங்கி இலகுவாக மறைந்துவிட்டனர். இரண்டுவாரத்துக்குள் கிளர்ச்சியை அடக்கிவிட்டதாகவும் 150 கிளர்ச்சியாளர்களை தமது இராணுவம் கொன்றதாகவும் மெக்சிக்கோ அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களோ ஸ்பாரிஸ்ற் மக்கள் மீது மெக்சிக்கோ இராணுவம் மிக மோசமான இராணுவ வெறியாட்டத்தை நடத்தியுள்ளதாகவும் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை 500க்கும் மேல் என்றும் இதில் பெரும் பகுதியினர் அப்பாவி மக்களே என்றும் கூறுகின்றன. சியபாஸ் மாநில மக்கள் இந்த இராணுவ வன்முறை அதிர்வுகளிலிருந்து இன்னும் மீளவில்லை. இந்த நிலையில்தான் மெக்சிக்கோ ஜனாதிபதி கார்லோஸ் ஸாலினஸ் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தையும், இராணுவத்தை சியாபாஸ் மாநிலத்திலிருந்து மீளப்பெறுவதாகவும் அறிவித்துள்ளதுடன் உறவுகளை சுமுகமாக்கல், சமாதானம், அமைதி பேணுதல், மனித உரிமைகளை மதித்தல் ஆகிய முயற்சிகளில் தாம் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

ஆனால் ZNLA இதனை ஏற்க மறுத்துள்ளது. 2000க்கும் மேற்பட்ட தனது போராளிகளை தற்காலிகமாக பின்வாங்க வைத்திருக்கும் ZNLA "நாம் மீண்டும் வருவோம். புரட்சி தொடரும்" என அறிவித்துள்ளது. அது மட்டுமல்ல போராட்டத்தை தென்பகுதியில் மட்டுமல்ல நாடு முழுவதும் விஸ்தரிப்போம் எனவும் ZNLA கூறியுள்ளது. இதனைத் தொடர்ந்து தென் மாநிலங்களான பியூபெலா, மிசோகன் ஆகியவற்றில் இரு மின்சக்தி நிலையங்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன இதற்கான உரிமைகோரல் கடிதத்தை மெக்சிக்கோவின் பிரபல பத்திரிகையான 'லா ஜோர்னடா' விற்கு ZULA அனுப்பியுள்ளது அதுமட்டுமல்ல நாட்டின் வடபகுதியிலும் தாக்குதல்களை நடத்துமாறு ZNLA தனது ஆதரவாளர்களை கோரியுள்ளது.

ஸபாரிஸ்ற் மக்கள் வெறுமனே வன்முறைமீது காதல் கொண்டவர்களாய் ஆயுதங்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களது வறுமையும், அனுபவித்த ஒடுக்குமுறையும் துயரமானவை, மெக்சிக்கோவிலேயே மிகவும் வறுமையான சியாபாஸ் மாநிலத்தின் மக்கள் எண்ணிக்கை 3.5 மில்லியன். மெக்சிக்கோவின் இதர மாநில மக்கள் 80 வருடங்களுக்கு முன்னர் நடந்த புரட்சியின் பயன்களை அறுவடை செய்யும் போது சியாபாஸ் மாநில மக்கள் ஒரு புரட்சியை எதிர்பார்த்து நிற்கிறார்கள் கலாச்சார ரீதியாகவும், சமூகரீதியாகவும் ஏன் அரசியல் ரீதியாகவும் கூட மெக்சிக்கோவின் தென்கிழக்குப் பகுதியான இம் மாநில மக்கள் கௌதமாலாவின் ஒரு பகுதியாகவே கணிக்கப படுகிறார்கள். ஆனால் இன்னொரு வகையில் சியாபாஸ் மாநிலம் மெக்சிக்கோவின் கறைபடிந்த அம்சங்களை அப்படியே பிரதிபலிக்கிறது. மனிதஉரிமை மீறல்கள், எங்கும் எதிலும் பரவிக்கிடக்கும் ஊழல்கள், வாழ்வோடு பின்னிப்பிணைந்து போன வறுமை இவை அனைத்தும் சியாபாஸின் வாழ்வு அம்சங்கள். மெக்சிக்கோவில் நடந்த புரட்சியினால் நிரப்பமுடியாது போய்விட்ட ஓட்டைகள். இந்த மாநில மக்கள் இப்போது இன்னுமொரு பாதையை தேர்ந்தெடுக்க முயல்வதற்கான காரணிகள்.

இந்தக் கொடுமைகளை எதிர்த்தே 73 வருடங்களுக்கு முன்னர் எமிலியானோ ஸபாற்ரா விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தார். ஏழை விவசாயிகள் பண்ணையாளர்களால் நசுக்கப் பட்டனர். இதனை ஸபாற்ரா கடுமையாக எதிர்த்தார். கிட்டத்தட்ட காலனித்துவ முறையிலேயே விவசாயிகள் மிகக்குறைந்த கூலியில் உழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். புரட்சியை தொடர்ந்து அறிமுகப்

படுத்தப்பட்ட கூட்டுப் பண்ணை முறைகள் கூட மெக்சிக்கோவின் மக்கள் தொகை நிறைந்த மாநிலங்களான சியாபாஸிலும், ஒ ஆக்சாவிலும் தோல்வியையே தழுவின. கடைசியாக 1980 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டின் படி சியாபாசிங் உள்ள அரைவாசிக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் தனியாரின் கைகளிலேயே உள்ளன. இது குறித்து சர்வதேச தொழிலாளர் சங்க எழுத்தாளரான திரு. ரோஜர் பிளானற் கருத்துத் தெரிவிக்கையில் "மெக்சிக்கோவின் இதர பகுதிகளோடு ஒப்பிடுகையில் இது மிகவும் மோசமானது. இதுவே இன்றைய பிரச்சனைகளுக்கு அடிப்டைக் காரணமுமாகிறது" எனக் குறிப்பிடுகிறார்.

தனியார் பண்ணை அமைப்புக்கள் இம்மாநிலத்தில் முறைகேடுகளை வளர்த்தன. நில ஆக்கிரமிப்புக்கள், விவசாயிகள் கொல்லப்படுதல், காணுமல் போதல் ஆகியன தொடர்ந்தன. தமக்கு என ஒரு சிறுதுண்டு நிலமாவது சொந்தமாகக் கிடைக்குமென தசாப்தங்களாக காத்துக் கிடந்த விவசாயிகள் தமக்கெதிரான வன்முறைகளால் பொறுமை யிழந்து தமது உரிமைகளைக் கோரி போராளிகளையும், போராட்டத் தையும் நோக்கி நகர்த்தப் பட்டுள்ளனர். ஆனுல் மக்களின் பிரச்சனையைப் புரிந்து கொள்ளாத அரசு சியாபாசை இராணுவ மயமாக்க முயன்றது. ஆளும் PRI கட்சி இதர அயல் மத்திய அமெரிக்க நாடுகளைப்போல பலம் வாய்ந்த இராணுவத்தைக் கட்ட முயன்றது. விளைவு தலைநகரான மெக்சிக்கோ நகரிலுள்ளது போன்ற பெரும் இராணுவத்தளத்தை சியாபாஸின் தலைநகரான சன் கிறிஸ்ரோயலில் அமைத்ததுடன் ஊழல் நிறைந்த இராணுவ உயர்அதிகாரிகளையும் அங்கு பதவியில் அமர்த்தினர். இத்தகைய அதிகாரிகளில் ஒருவரான அப்சலோன் கஸ்தெலன் என்பவரைத்தான் ZNLA போராளிகள் கடத்தினர்.

சியபாஸ் மக்களின் பிரச்சனைகள் தொடர்ந்தன. நிலமற்ற இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அன்ருட கூலியான 2.5 பேசோவிற்கு உழைத்தனர். இந்த மிகக் குறைந்த கூலியுடனுன வாழ்வும் கூட அரசாங்கம் இப்பகுதிகளின் விவசாய நிலங்களை இதர தேவைகட்கும், எண்ணெய் உற்பத்தி அபிவிருத்திக்கும் பாவிக்க முற்பட்ட போது சீர்குலைந்தது. விளைவு மெக்சிக்கோவின் மிகுந்த ஏழை மாநிலமான சியபாசில் பிறக்கும் ஒவ்வொரு 1000 குழந்தைகளில் 94 குழந்தைகள் இறக்கின்றன.

# சுழலும் உலகம்



## தி. உமாகாந்தன்

60%மான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இத்தனைக்கும் இம்மாநிலம் தபாஸ்கோ மாநிலத்துடன் சேர்ந்து நாட்டின் மொத்த எண்ணை உற்பத்தியில் 80% இனை உற்பத்தி செய்கிறது. மெக்சிக்கோவுக்கான 50%மின்சார சக்தியை உற்பத்தியை செய்கின்ற இம்மாநிலத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் தொகைக்கு குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகள் கிடையாது மாட்டுப் பண்ணைகள் மூலம் நாட்டிற்குத் தேவையான பெரும் பங்கு பாலையும் இறைச்சியையும் வழங்கும் இம் மாநில மக்கள் சத்துணவு இல்லாமல் நோய்வாய்ப் படுகிறார்கள். இந்த மோசமான நிலையில் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நஃப்ரா (NAFTA) பொருளாதார ஒப்பந்தம் இம் மாநில மக்களை மேலும் சீரழிவுக்கு உள்ளாக்கும் என ZNLA உறுப்பினர்கள் கூறுகிருர்கள், NAFTA ஒப்பந்தந்தின் கீழ் அமெரிக்காவிலிருந்து மானியமாக மெக்சிக்கோவிற்கு வரப்போகும் பெருமளவு தானியங்கள் இந்த மக்களின் எதிர்கால இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும் என்பது ZNLA கணிப்பு. சியபாசில் இந்த கொடுமைகளுக்கெதிராக மாயன் இந்திய விவசாயிகள் கிளர்ச்சி நடத்திய பின்னரும் அரசாங்கம் விழிக்கவில்லை. இந்தக் கிளர்ச்சிக்கான காரணம் சியப்பாறிலுள்ள கத்தோலிக்க மதகுரு சாமுவேல் றுயிற்ஸ் என்றே அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது. எப்படி 1980 களில் எல் சல்வடோரில் புரட்சியை முடுக்குவதில் தேவாலயங்கள் பின்னணியில் நின்றனவோ அதுபோலவே இப்போது சியாப்பாசில் நிற்கின்றன என்பது அரசின் குற்றச்சாட்டு. ஜனதிபதி கார்லோஸ் சலிஞசின் அரசு "இந்தக்கிளர்ச்சிக்கு முன்னர் ZNLA என்ற அமைப்புப் பற்றி எந்த தகவலுமே இல்லை வன்முறைமூலம் பயன்பெற விரும்பும் வெளிநாட்டு சக்திகளாலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்பட்டது" எனக் கூறுகிறது. ஆனுல் அரசின் கூற்றை நிருபிப்பதற்கு ஒரு சிறு ஆதாரம் கூடக் கிடையாது. றுயிற்சின் மீதான குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் உள்நாட்டமைச்சு "கிளர்ச்சி யாளர்கள் சில சித்தாந்த வாதிகளாலும், மதவாதிகளாலும் ஆதரிக்கப்படுகிருர்கள்" என அறிக்கை விடுத்துள்ளது. "அதுமட்டுமல்ல ஒவ்வொரு குடும்பத்தையும் கிளர்ச்சி யாளராக்கும் முயற்சிகள் நடக்கின்றன" எனவும் அவ்வறிக்கை கூறுகிறது.

றுயிசோடு வத்திக்கான திருச்சபையும் வழக்கம் போல் முரண்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் றுயிற்சை

**24ம் பக்கம் பார்க்க..**

## ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக்க, பற்றிக் பிர்னாண்டோ
சாந்த த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. யோகநாதன்

### 1989 ஏப்பிரல் 05ம் திகதி தொடக்கம் ஜேவிபி தனது நடவடிக்கைகளை அதிகரிக்கிறது.

1989 ஏப்பிரல் மாதம் 05ம் திகதி வந்த 1971 ஏப்பிரல் கிளர்ச்சியின் நினைவு கூர்வை மிகவும் விமர்சையாக நடாத்த தீர்மானித்த ஜேவிபி, ஏப்பிரல் 05ம் திகதியிலிருந்து 15ம் திகதி வரையான பத்து நாட்கள் பெரியதொரு ஹர்த்தாலுக்காக அழைப்பு விடுத்தது. கடைகள், தொழிற்சாலைகள், அரசாங்க தனியார் துறை நிறுவனங்கள், போக்குவரத்து, பாடசாலை, துறைமுகம் உட்பட சகல துறையினருக்கும் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. கட்டளைகளை மீறுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தமது கட்டளைகள் மூலமாக இவ்ஹர்த்தாலை பூரண வெற்றியை நோக்கி இட்டுச் செல்ல ஜேவிபியால் முடிந்தது.

ஜேவிபி யுத்த ரீதியாக பாயசசலில அடிஎடுதது வைததது இக்கால கட்டத்திலேயாகும். அதாவது நாம் ஏற்கனவே குறிப்பிட்ட கண்ணி வெடி நுட்பத்தை பயன் படுத்தத் தொடங்கியது இக்கால கட்டத்திலேயேகும் ஹிங்கம, வீரவில பிரதேசங்களில் கண்ணி வெடிகாரணமாக உயிர் இழந்தவர்களைத் தவிர எம்பிலிப்பிட்டிய பனுமுறே பாதையில் படைவீரர்கள் நால்வரும் மெதிரிகிரிய என்னுமிடத்தில் நான்கு பொலீசாரும் கண்ணி வெடியில் அகப்பட்டு உயிர் இழந்தனர்.

பொலீஸ் நிலையங்கள் படைமுகாம்களை தாக்குதல் இராணுவத்தினரை காத்திருந்து தாக்குதல் தனிமைப்பட்ட படைவீரர்களை கொலை செய்தல், எதிர்தரப்பாளர்களை படுகொலை செய்தல் என்பன துரிதப்படுத்தப் பட்டதையும் காணமுடிந்தது. காலியிலுள்ள பிட்டிகல பொலீஸ் நிலையத்தை தாக்கிய தேசபக்த மக்கள் இயக்கத்தினர் பனுகொடை இராணுவ முகாம் மீதும் தாக்குதலைத் தொடுத்தனர். இத் தாக்குதல் பிரச்சார நோக்கத்துக்காகவும், மனோவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டதாக இருக்கலாம். இத்தாக்குதல் தோல்வி அடைந்தது. ஆயினும் கூட இலங்கையின் பிரதான இராணுவ முகாம் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என்பதால் இது ஜேவிபி அங்கத்தவர் ஆதரவாளர் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஹிங்கம பிரதேசத்தின் கிவுல என்னும் இடத்தில் கொமாண்டோ குழுவினர் மீது மறைந்திருந்து தொடுக்கப்பட்ட தாக்குதலால் மூன்று கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும் பறிக்கப்பட்டது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

நிலமை மென்மேலும் மோசமடையும் போது இந்திய விரோதப் பதாகையை மேலுயர்த்தி இந்திய விரோதத்தின் அடிப்படையில் அணிதிரண்டிருந்த சக்திகள் மத்தியிலே பிளவை ஏற்படுத்துவதன் மூலம் ஜேவிபியை பெலவீனப்படுத்த எண்ணிய ஜனாதிபதி பிரேமதாச 1989 ஜூன் 1ம் திகதி இந்திய சமாதானப் படையைத் திருப்பி அழைக்குமாறு சவால் விடும் தோரணையில் இந்தியாவுக்கு கூறினார். ஆனாலும் பிரேமதாசவின் உபாயம் பலிக்கவில்லை. ஜனாதிபதி பிரேமதாசாவின் சவாலை ஏற்று இந்தியா சமதானப்படையைத் திருப்பி அழைக்கவில்லை. தனது வெட்டிப் பேச்சு மூலம் தானே இக்கட்டான நிலமைக்குள்ளானார். பிரேமதாசா அவர்களைத் துரத்த வேண்டும் என ஜேவிபி கூறியது. இந்திய விரோதத்தை தனது கையில் எடுக்க பிரேமதாசா மேற்கொண்ட முயற்சி வெற்றி அளிக்காதது மட்டுமல்ல இந்திய விரோதத்தை மேலுயர்த்தக் கூடிய "ஒரே தகமையாளன்" ஆக ஜேவிபி மாறியது.

1989 ஜூன் 06ம் திகதி ஜேவிபியின் வழிகாட்டலின் கீழ் நுகேகொடையில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அனைத்து லக மாணவர் பேரவை, அனைத்து பல்கலைக்கழக பிக்குமார் பேரவை, அகில இலங்கை பல்கலைக் கழக மாணவர் பெற்றோர் சம்மேளனம், எக்சத் லங்கா ஜனதா கட்சி, ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி என்பவற்றால் இக்கூட்டம் ஒழுங்குபடுத்தப் பட்டபோதிலும் ஒழுங்கு படுத்தியதன் பின்னணியில் ஜேவிபியே இருந்தது. பிரேமதாச அரசாங்கம் இக் கூட்டத்தை நடாத்துவதற்கு பூரணமாக இடமளித்தது. இந்திய விரோத பதாகையை மிக உயரத்துக்கு தூக்கிப் பிடித்த இக் கூட்டத்தில் தேசபக்த போராட்டத்தில் அடுத்த படி பற்றி பிரகடனம் செய்யப்பட்டது. அதாவது இந்திய பண்டங்களை பகிஷ்கரிக்குமாறு குரல் எழுப்பப்பட்டது.

இவ்வாறு குரல் எழுப்பிய பின்னர் தேசபக்த மக்கள்

இயக்கத்தால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல், வைத்திருத்தல், பாவித்தல் என்பனவற்றுக்கு நாடு பூராவும் தடை விதிக்கப்பட்டது. இந்தியப் பண்டங்களை பகிஷ்கரிப்பது ஆரம்பமாகியதுடன் கூடவே மீண்டும் மாணவர் ஆர்ப்பாட்ட அலைகள் நாடுபூராவும் பாயத் தொடங்கின. சகல பிரதேசங்களிலும் மாணவர் ஊர்வலம் பற்றிய தகவல்கள் கிடைத்தன. தெல்தெனியாவில் நடைபெற்ற மாணவர் ஊர்வலத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததால் ஒரு மாணவன் கொல்லப்பட்டான். பல்கலைக் கழகங்களிலும் பாடசாலைகளிலும் கல்வி ஸ்தம்பிதம் அடைந்தது. இதற்குச் சமாந்தரமாக ஜேவிபி தனது "ஏனைய முன்னணிகளையும்" போர்க்களத்தில் இறக்கியது.

ஊவா பிராந்திய போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் தொழிற் பிரச்சனைகள் காரணமாக பொது முன்னணி ஒன்றை அமைத்து வேலை நிறுத்தத்தை தொடங்கியதும் இக்காலத்திலேயேயாகும். சிறிது காலத்தில் இம் முன்னணியின் நடவடிக்கை குழுவின் அதிகாரத்தை தமது பிடிக்குள் கொண்டு வந்த் ஜேவிபி யினர் இப்போராட்டத்தை தமது அவசியங்களுககாக ஈடுபடுத்தத தொடங்கினர் இறுதியில் "போக்குவரத்துச் சபையின் ஐக்கிய நடவடிக்கை முன்னணி" ஜேவிபி யினால் வழி நடத்தப்படும் சபையாக மாறியது.

ஊவாப் பிரதேசத்தில் ஆரம்பமான போக்கு வரத்துச் சபை ஊழியர் வேலை நிறுத்தம் நாடு பூராவும் விரிவுபடுத்தப்பட்டது. போக்கு வரத்துச் சபை ஊழியர் வேலை நிறுத்தத்தை வெற்றி அடையச் செய்வதற்காக தனியார் பஸ்வண்டி சேவைக்கும் ஜேவிபியால் தடை விதிக்கப்பட்டது. சுமார் ஒரு வார காலத்திற்குப் பின்னர் துறைமுக, புகையிரத ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இணைக்கப்பட்டனர். மூன்று சில்லு வண்டிகளையும் ஓட்ட வேண்டாமென்று கட்டளையிடப் பட்டது.

போக்குவரத்து நாடுபூராவும் ஸ்தம்பித்தது, ஆனாலும் இவ்வேலை நிறுத்தத்தை வெற்றி அடையச் செய்வதற்காக ஜேவிபிக்கு தனது தேசபக்த மக்கள் இயக்கம் மூலமாக சுமார் 130 படுகொலைகளைச் செய்விக்க நேரிட்டது. மாணவர் போராட்ட, வேலை நிறுத்த அலைகள் அதிகரிக்கும் போது 1989 ஜூன் 22ம் திகதி அரசாங்கம் மீண்டும் அவசரகாலம் சட்டத்தை பிரகடனப்படுத்தியது. அவசர காலச் சட்டம் அமுலில் இருக்காத சுமார் அரைவருட காலத்துள் ஜேவிபி யினால் படுகொலை செய்யப்பட்டோர் தொகை சுமார் 2000 அளவு இருக்கும். அவசர காலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது என்பதற்காக ஜேவிபியின் நடவடிக்கைகள் குறையவில்லை. அரசாங்கத்தின் தாக்குதல்கள் அதிகரிக்கும்போது தபால் தந்திச் சேவை ஊழியர்களும் வேலை நிறுத்தத்திற்கு இழுக்கப்பட்டனர். நாடு மாபெரும் பொது வேலைநிறுத்தத்திற்கு ஊடாக பயணம் செய்தது. இராணுவத்தை ஈடுபடுத்தி பஸ் வண்டிகளை ஓடச் செய்யவும் கடற்படையினர் மூலமாக துறைமுகத்திலிருந்து சரக்குகளை இறக்கவும் என்றவாறு செயலிழந்த நிலைமையை மீண்டும் சீர்படுத்துவதற்காக பெரும் முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு நேரிட்டது.

இதனிடையே இராணுவ த்தின் பலாத்காரம் ஜேவிபியின் பலாத்காரத்தையும் தாண்டி பஸ்வண்டிகளை பலாத்காரமாக ஓட்டுவிக்க தொடங்கி இராணுவத்தினர் காவலுடன் ஓட்டப்படும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கின.

அரசாங்கம் இதனிடையே வேலை நிறுத்தம் செய்த ஊழியரின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியது. ரூபா 2500 ரூபா சம்பள உயர்வு கோரிக்கைக்கு பதிலாக ரூபா 180 ரூபா சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் சம்மதித்தது. ஜேவிபி முதலில் இதற்கு அனுகூலம் காட்டவில்லை.

வேலைநிறுத்தத்தை தொடர்வது கடினம் என்னும் நிலமைக்கு முகங் கொடுக்கும் போது ருக்மன் சேனநாயக தலையிட்டு ஜனாதிபதியுடன் ஜேவிபியின் பிரதிநிதி ஒருவர் (டி.எம்.ஆனந்த என்று கூறப்படுகிறது) பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ரூபா 180 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டு இரு சாராரும் 'வெற்றிபெற்று' வேலை நிறுத்தத்திற்கு இணக்கம் காணப்பட்டது.

போக்குவரத்து சபை ஊழியர் வேலை நிறுத்தத்தில் இரண்டு அம்சங்களைக் காணமுடியும். ஒரு புறம் வேலை நிறுத்தம் விரிவு படவும் நின்றுபிடிக்கவும் ஜேவிபியினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பலாத்காரம் கணிசமான அளவு சேவை செய்தது. மறுபுறம் அடக்கு ஒடுக்குமுறைகள் காரணமாக பலவருடங்களாக அமுக்கி வைக்கப்பட்டிருந்த உழைக்கும் மக்களின் அரசாங்க விரோத உணர்வுகளும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்காக உழைக்கும் மககளுககு உள்ளார்நத தூண்டுதலை ஏற்படுத்தின. அரசாங்கம் முகங்கொடுத்த இக்கட்டான நிலையின் கீழ் பலாத்காரம் மட்டுமன்றி மேலே கூறப்பட்ட உள்ளார்ந்த தூண்டுதலும் வேலை நிறுத்தத்திற்கான தாக்கத்தை ஏற்படுத்தின என்று கூற முடியும்.

இக்காலகட்டத்தில் பாதுகாப்புசேவைக்கும் அவற்றின் அங்கத்தவர்களுக்கும் தொடர்ச் சியாக தாக்குதல்கள் தொடுக்கப் பட்டன. இவற்றில் ஜூன் ஆரம்பத்தில் திஸ்ஸமகராமை பொலீஸ் நிலையமும் ஆகஸ்ட்

***24ம் பக்கம் பார்க்க..***

## மெக்சிக்கோ..

திருச்சபையிலிருந்து விலக்கப் போவதாகவும் வத்திக்கான் எச்சரித்தது. ஆனால் கடந்த வாரம் ZNLA யுத்த நிறுத்தம் ஒன்று தொடர்பாக றுயிற்சையும் நோபல் பரிசுபெற்றவரும் மனித உரிமைவாதியுமாகிய கௌதமாலாவின் றிகோபேற்ற மென்சுவையும் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள அழைத்தது. இந்தக் கோரிக்கையை றுயிற்ஸ் ஏற்றுக் கொண்டார். ஆனால் அரசாங்கம் றுயிசை ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன் கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களைக் கீழே போட்ட பின்னர்தான் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் எனக் கூறிவிட்டது.

பெரும்பாலான ஆதரவாளர்களால் மதிக்கப்படும் றுயிற்ஸ் 'ஸபாரிஸ்ராஸ்டுகள் எனது சகோதரக் கிளர்ச்சியாளர்களே' என்கிறார் அவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட எல்லையற்ற கொடுமைகளாலேயே பொறுமை இழந்து யுத்தம் செய்ய தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்கிறார். இந்திய இனத்தின் மீது நடத்தப்படும் ஒடுக்குமுறைகளையும், மனித உரிமை மீறல்களையும் கடுமையாகச் சாடும் றுயிற்ஸ் இன்றைய வன்செயல்களுக்கான காரணங்களை வேறு எந்த வெளிச்சக்திகளையும் நோக்காமலே புரிந்துகொள்ளமுடியும் என்கிறார். வறுமை, அடக்கு முறை, இன ஒதுக்கல் ஆகியனவே கிளர்ச்சிக்கான அடிப்படைக் காரணங்கள் என்று றுயிற்ஸ் திட்டவட்டமாகவே கூறுகிறார். மேலும் இரு கத்தோலிக்க மதகுருக்களோடு சேர்ந்து றுயிஸ் விடுத்துள்ள அறிக்கையில் சமூகப் பிரச்சனைகளை ஆயுதங்கள் தீர்த்து வைக்கும் என நாம் நம்பவில்லை, ஆனால் சமீபத்திய வன்செயல்கள் அரசின் தவறான நடைமுறைகளுக்கெதிரான ஒரு அபாய எச்சரிக்கை என புரிந்து கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. NAFTA பொருளாதார ஒப்பந்தத்தின் கீழ் பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளை மெக்சிக்கோ எதிர்நோக்கியிருக்கும் வேளையில் ஸ்பாரிஸ்ருகள் மேற்கொண்ட கிளர்ச்சி முதலீட்டாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மெக்சிக்கோவின் பங்குச் சந்தை பெருமளவு சரிவுக்குள்ளாகியது. கிளர்ச்சியை அடக்கி விட்டோம் என்ற மமதையுடன் அரசு நடக்க முயன்றால் மெக்சிக்கோ மிக மோசமான பயனை அறுவடை செய்ய வேண்டிவரும் மாறாக ஸ்பாரிஸ்டுகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுயன்றால் நிலமைகளில் பெருமளவு மாற்றம் ஏற்படும்

## ஜே.வி.பியின்...

இடைப் பகுதியில் பெந்தோட்டை பொலீஸ் நிலையமும் தாக்கப்பட்டு அவற்றின் ஆயுதங்கள் பறிக்கப் பட்டது திம்பிரிகஸ்யாயவில் தேசிய புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர் இருவரும் கொல்லப்பட்டது, சிரேட்ட பொலீஸ் அத்தியட்சகர் பெனட் பெரேரா கொல்லப்பட்டது ஆகியவற்றைக் காட்டமுடியும்.

கொல்லப்பட்ட சிவில் நபர்கள் மத்தியில் தேவிஸ் குருகே, பிரேம கீர்த்தி டி அல்விஸ், கொட்டிகாவத்தை சந்தாதிஸ்ஸ அடிகள் (பௌத்த பிக்கு) டாக்டர் கிளடிஸ் ஜெயவர்தன, மெரில் காரியவசம், மொறட்டுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பட்டுவனவிதான, ரூபாவாஹினி பிரதான செய்தி ஆசிரியர் குலசிறி அமரதுங்க, சாகரிகா கோமஸ் என்போர் பிரதானமானவர்கள்.

பொதுவேலைநிறுத்தத்திற்குப் பின்னர் இலங்கை இந்திய உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதன் நிமித்தம் அழைக்கப்பட்ட பெரும் எதிர்ப் பார்ப்பாட்ட இயக்கம் கூர்மையான தோற்றத்தை எடுத்தது. ஜூலை 26 சத்தியாக்கிரகத்துக்கு பாதுகாப்பு பிரிவுகளைச் சார்ந்த பகுதியினரும் கலந்து கொள்வர் என ஜேவிபி கூறிய போதிலும் அவ்வாறு நிகழவில்லை. எதிர்ப்பு இயக்கத்திற்கு முதல் நாள் நாடுபூராவும் ஊர்வலம் நடாத்த ஒழுங்குகள் மேற்கொண்ட போதிலும் அரசாங்கம் அவற்றை தடைசெய்தது. தடையையும் மீறி ஊர்வலம்சென்றோர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டது. இதனால் சுமார் 150 பேர் கொல்லப்பட்டனர். இக்கலகட்டத்தில் பெரும் எழுச்சி ஒன்று ஏற்படும் என ஜேவிபி நம்பியதனாலேயே இவ் எதிர்ப்பு இயக்கத்தில் பாதுகாப்பு படைகளைச் சார்ந்த பகுதியினரும் கலந்து கொள்வர் என ஜேவிபி கூறியது. ஆனால் அவ்வாறான நிலைமை உருவாகவில்லை. ஜூலை மாதத்தின் பின்னர் ஜேவிபியின் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டதையே காண முடிந்தது. 1989 ஆகஸ்ட் மாதத்தில் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அது அரை வெற்றியையே அளித்தது. பாதுகாப்பு படையினர் ஜேவிபியையும் தாண்டி முன்னுக்கு பயணம் செய்ததையே காணமுடிந்தது. பாதுகாப்புப் படையினரின் பதில் கொடூரங்கள் ஜேவிபியின் கொடூரங்களையும் தாண்டிச் செல்லத் தொடங்கின. பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகள் வெற்றியை ஈட்டும் போது அரசாங்கத்தை பலவீனப் படுத்துவதற்கு பொருளாதாரத்தை தகர்ப்பதற்காக தமது அங்கத்தவர்களையும் தேசபக்த மக்கள் இயக்கத்தையும் ஜேவிபி வழிநடாத்தியது. இப்பொருளாதார சீர்குலைவு வேலைகளால் பொதுவாக 550 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. ஆயினும் ஜேவிபியையும் தாண்டி பாதுகாப்புப் படையினர் முன்னுக்கு வருவதை ஜேவிபியால் தடுக்க முடியவில்லை.

(தொடரும்)

இருத்தலியல் விசாரணைகள்

எஸ் கௌந்தி

# பிராம்: எழுத்துச் சுதந்திரத்தின் இன்றைய நிலைமை

பிரமோதய ஆனந்த தோஎர் (Pramoedya Ananta Toer) ஓர் இந்தோனேஷிய எழுத்தாளர். இவரது பெயரும் எழுத்துக்களும் இந்தத் தேசத்தில் தடை செய்யப்பட்டுள்ளன. பலவருடங்களாக "கண்காணிப்புடன்" கூடிய வீட்டுக்காவலில் இவர் வைக்கப் பட்டுள்ளார். சர்ச்சைக்குரிய "சாத்தானின் பாடல்களை" எழுதிய சாலமன் றூஷ்டியினது வாழ்வு கூட கண்காணிப்புடன் கூடிய தெனினும், அவரது உடல் பாதுகாப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது. இந்தோனேஷியாவிலே பிராம் பற்றி எவரும் எழுதவோ அல்லது பேசவோ முடியாது. 1925ம் ஆண்டு பிறந்த இவர் தற்போது ஜாகர்த்தாவிலே வீட்டுக்காவலில் உள்ளார். கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக இருந்தார் என்பது இவர் மீது சுமத்தப்பட்ட ஓர் குற்றச்சாட்டு. சிறை உவாதையை வாழ்வாக்கிக் கொண்ட இவருக்காக, மிகவும் அண்மையிலே, தனது குரலை ஒங்கிக் கொடுத்துள்ளார் பிரான்ஸில் வாழும் ஓர் மிகச்சிறந்த எழுத்தாளர் தாஹார் பென் ஜெலூன் (TAHAR BEN JELLOUN). மொரோக்கோ தேசத்தில் பிறந்தவர், பல வருடங்களாக பிரான்ஸில் வாழ்பவர், பிரெஞ்சு மொழியிலே எழுதுபவர், 26 மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டவர், பிரெஞ்சு மொழிச் சீர்த்திருத்தம் தொடர்பாக சில ஆண்டுகளின் முன்னர் அரசமட்டத்திலே ஒழுங்கு செய்யப்பட்ட கமிட்டிக்குள் இடம் பெற்ற ஒரேயொரு அந்நியர்- தனது மிகப்பிந்திய படைப்பான "பிரிந்துபோன மனிதன்" (L'HOMME ROMPU) இனை பிராமிற்குக் காணிக்கை யாக்கியுள்ளார். ஜெலூன் துணிச்சல் கொண்ட எழுத்தாளர் மட்டுமல்ல, இந்த நூற்றுண்டின் மிகப்பெரும் கதாசிரியர்களில் ஒருவருமாவார். இலக்கிய உலகில் அங்கீகாரம் பெற்ற இவர் எனக்கு "முதலாவது சாலமன் றூஷ்டி"யாக படுவதுண்டு (பார்க்க: MOGA FOU MOGA LE SAGE " மோகா பைத்தியம், மோகா ஞானி" ஜெலூனின் சிறந்த படைப்புகளில் ஒன்று). இஸ்லாமிய நிந்தனைக் குழும்சம்கள் இவரது படைப்புகளில் மிகவும் ஆவேசமாகவே தம்மை இனங்காட்டியுள்ளன.

அரச நிந்தனை, மத நிந்தனை, சமூக சமச்சீருக்கான வாதாட்டம் இவைகளெல்லாம் தண்டனைக் குரியன என்ற "கண்டுபிடிப்பு" இந்த நூற்றுண்டுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. பழைய மரபில் ஊறிப் போனவர்களுக்கு புதிய சிந்தனைகள் சிம்மசொப்பனமாக அமைந்ததை நாம் மனித குல வரலாறு பூராகவும் காணலாம். மதமோ, அரசோ, அல்லது பயங்கரவாத வித்தைகளைக் கற்றுக்கொண்ட ஆயுதக் குழுக்களோ விமர்சிக்கப் படக்கூடாதன என்ற விதி எதுவும் இல்லை. இந்த விமர்சன சுதந்திரத்தை வேருடன் அறுக்க, இவைகள் கண்காட்சித்தனம், கொண்ட தண்டனைகளை சில தனிமனிதர் மீது வலிந்து புகுத்திவருதல் தொடர் கதையாகவே உள்ளது. அற்ப களவுகளைச் செய்தோரினை பொது வீதிகளுக்கு இழுத்து வந்து, களவுப்பட்டியலை அவர்கள் மீது மாலைகளாகச் சூட்டி, மொட்டையடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி "சுத்தமான" தேசப் போராட்டம் நடத்தும் கொடூரம் எமது மண்ணில் நடைபெற வில்லையா? தண்டனைகள் சமூகத்தைத்திருத்தா. மாறாகவக்கிர சமூக உருவாக்கத்துக்கே உதவும். "வாழ்க்கை ஓர் இரவுக் கூத்தல்ல" (LA VIE N'EST PAS UNE FOIRE NOCTURNE) என்ற நாவலினைப் படைத்த பிராம் மீது ஜெலூன் எழுதுகையில் (பார்க்க LE MONDE, பிரான்ஸ் தினசரி, 24-01-1994) "எழுதுவற்கானதும் பகிர்வதற்கானதும், கண்டுபிடிப் பானதுக்குமான எழுத்தாளர்களின் உரிமைமீது நாம் எந்த ஒரு விவாதத்தையும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. கவிதையையும், கற்பனையின் பதுமத்தையும் சர்வாதிகாரிகள் விரும்புவதில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிராமின் நூல்கள், தடைகள் பலவற்றையும் மீறி 16 மொழிகளிலே மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. "ஊழல்" எனும் நாவலை எழுதிய இவரை, 1993 ஆம் ஆண்டு, தனது இந்தோனேஷியப் பயணத்தின் போது ஜெலூன் சந்திக்க முயற்சி செய்துள்ளார். "எனது சந்திப்பு, ரகஸியப் பொலீஸாரினால் இவருக்கு மேலும் நெருக்கடிகளை ஊட்டி விடலாம் என அறிவுறுத்தப்பட்டதால் எனது முயற்சியைக்கைவிட்டேன்" எனக் குறிப்பிட்டுள்ள ஜெலூன், "அவருக்கான எனது ஆதரவைக் காட்ட காட்சியக் கடிதம் எழுதுவதைக் காட்டிலும், எனது தேசத்தில் (மொரோக்கோ) ஊழல் எவ்வாறு நடக்கின்றது என்பதைச் சொல்லவே அவருக்குக் காணிக்கையாக தனது "பிரிந்துபோன மனிதனை" எழுதியதாகச் சொல்கின்றுர்.

எழுத்தை ஆயுதமாக்கி இன்னலுறுவோர் பிராமும், றூஷ்டியும் மட்டுமா? இந்த உலகப் பந்தில் எமக்கு அறியப்படாதோர் நிறையவே உள்ளனர். உண்மைகளை எழுதிய "முறிந்த பனை" ஆசிரியர்களில் ஒருவரும், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் தலைவியுமான ராஜனி திராணகமாவினை ஆயுத

வெறியர்கள் சுட்டுத்தள்ளி அனுதையாக வீதியில் எறிய வில்லையா? சுடுவற்கு மட்டும் துணிச்சல் உண்டு. சுட்டபின்னர் உரிமை கோரக் கூடத் துணிச்சல் இல்லாத கோழைகளினதும், அறிவீனர்களினதும் கரங்களில் இன்று குடாநாடு சிக்குப் பட்டுள்ளது. இங்கே, எழுத்துத் சுதந்திரம் எந்த நிலையிலிருக்கும் என்பதை நான் உங்களுக்கு செல்ல வேண்டியதில்லை. அராஜகம் அடிப்படையிலே குருட்டு நம்பிக்கையில் கால் கொண்டது. இதனதுவெற்றி பற்றிய அனைத்துக் கணிப்பீடுகளும் போலியானவை. தண்டனைகளுக்கூடாக, இன்று மறுக்கப்படும் சுதந்திரங்கள் அனைத்தும் நாளை புதுஜனனம் பெறும் என்பதே உண்மை.

தண்டனைகள் (இவை எந்தவடிவில் இருப்பினும்) தனிமனிதர் களுக்கான சுதந்திர மறுப்பினது குறியீடுகளே! (பொருளாதார, கலாசார நீதியாக சுதந்திரம் மறுக்கப்பட்ட தனி மனிதர் பெரும் பான்மையையே குறிபிடு கின்றேன். உலகம் பிளவுபட்டு ள்ளதென்பது கார்ல் மார்க்ஸினது அபிப்பிராயம் மட்டுமல்ல, ஓர் மிகப்பெரும்பெரும்பான்மையினது அபிப்பிரயாயமாகும்.) இந்தப் பெரும்பான்மை சுதந்திர மறுப்பி னது தாக்கங்களை பல வித கோணங்களில் அனுபவிக்கின்றது. உணருகின்றது. இது ஏன் இயங்க முடியாத நிலையிலுள்ளது. என்பதை விளங்க, உலக போர் வரலாறுகளின் மீது (சித்தாந்த உற்பத்திகளினதுவரலாறுமீதல்ல) நாம் ஆழமானதும், தெளிவானது மான ஓர் ஆய்வினைச் செய்தல் வேண்டும்.

எழுத்துச்சுதந்திரத்தினதும், ஏனைய சுதந்திரங்களினதும் இன்றைய அடிமை நிலையே நாளை நிலையாகவும் இருக்கலாம். "இன்றைய சுமைகள் எமது நாளைய சந்ததியின் சுமைகளாக இருக்கக் கூடாது" என கிறிஸ்துவுக்கு முன்னர் பிறந்த கிரேக்க தத்துவஞானி ஹெராக்கிளிற் சொல்கின்ருர். நான் இவரது பக்கம். உங்கள் பக்கம் எதுவோ?

# பஞ்சமியில் செத்தவர்களும வாழ்வும்



சுகன்
நன்றி: பள்ளம் உ பங் - சித் 90

பஞ்சமியில் செத்த மாரிமுத்துக் கிழவனின் ஒரு காதருகில் கோழிக்குஞ்சு, மறு காதருகில் சுருட்டுக் கட்டை.

இப்போதெல்லாம் பூவரசு மரத்திற்குப் பக்கத்தில் சவத்தை எரிப்பதே இல்லை. கடல் முட்டியும், முட்டாமலும் இருக்கும் அந்தப் பிட்டியில்தான் எந்தப் பிரேதமும் எரிப்பது வழமை. சவச் சாம்பல் அனைத்தையும் உடனே வாரிக் கடலில் கரைப்பது சுலபம். சவம் எரிச்ச உடனேயே காடாத்தல்–கொத்திக் கிளறி, விதைத்து, தண்ணீர் தெளித்து... கடற்கரையில் செய்யும் விவசாயம்.

கிழவனின் பிரேதம் பூவரசு மரத்திற்குப் பக்கத்தில் தான் கொளுத்தப்படப் போகிறது. அருகில் இருந்த மாலில் பெரியதம்பி, நன்னியர் இருவரும் வலை பொத்துவதை நிறுத்திவிட்டு சுடலைக்கு வருகிருர்கள். மாரிமுத்து, பெரியதம்பி, நன்னியர் மூவரும் இளம் வயதில் கள்ளுக்கு 'ரேஸ்ற்' இதற்காக ஒரு கிடாய் குட்டியின் 'விதையை' மட்டும் அறுத்துக் கொண்டு வந்து நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டுக் 'கள்ளடித்ததாகக்' கதை. ஆடு அலறிக் கொண்டு ஓடியதாம்.

ஏன் மாரிமுத்துக் கிழவனின் பிரேதம் மட்டும் பூவரசுக்குப் பக்கத்தில் எரிக்கப்படுகிறது என்று எனக்கு நன்கு விளங்கும். அந்தப் பூவரசைப் பற்றி நிறையக் கதைகள்.

மாரிமுத்துக் கிழவனின் தகப்பன் பூதி சாகும்போது இப்போது பூவரசு மரம் நிற்கும்

பக்கமாகத்தான் மனிசனின் பிரேதத்துடன் வள்ளம் வந்து ஒதுங்கியதாம்.

ஒற்றை மரக்கால் தடி கடலோடு போக வலைக்குக் கறுப்புக் கட்டும் சின்ன மரக்கால் தடிதான் வள்ளத்தோடு கிடந்ததாம்.

அன்றுதான் புதிதாக மரக்கால் தடி செய்ய வீட்டில் நீளமாக நுனியில் கயிறு கட்டி ஒரு வருசமாக வளர்த்த பூவரசம் தடியை தகப்பன் 'பூதி' மாலுக்குக் கொண்டு சென்றாராம்.

வள்ளத்திலே நெஞ்சுக்குத்து வந்து செத்துக் கரையொதுங்கிய பின் அந்தத் தடியையே அன்று சுடலையில் நட்டு அது முளைத்துக் கிளைவிட்ட பின்னர் தான் பூதிக் கிழவனின் 'ஆத்துமா' அடங்கிப் போனதாம்.

பூதிக் கிழவனுக்கு முதலில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆறு மாதத்திலேயே அது செத்துப்போக, புதைப்பதற்கு சுடலையில் கிடங்கு வெட்டிப் பின் அதைக் கோறையாக உள்ளுக்குள் குடைந்து அந்தக் குடைவிற்குள்தான் குழந்தை ஒளிச்சுத் தாக்கப்பட்டது.

எங்கோ ஒரு கரையில் கிடந்த பெரிய கல் ஒன்று அதன் மேல் வைக்கப்பட்டது. நரிகள் குழந்தைப் பிணங்களை எங்கிருந்தாலும் மோப்பம் பிடித்துவந்த கிளறி இழுத்துக் கொண்டு சென்று விடும். ஆதலால் தான் குடைந்து குடைந்து தாழ்ப்பது வழக்கம்.

அந்தப் பாருங்கல்லுக்கும் கூட ஒரு மகத்துவம் உண்டு. சுடலைக்குச் செல்லும்போது எல்லா இளந்தாரிகளும் அதைத் தூக்கிப் பார்க்க நினைப்பதுண்டு.

கடைசியாக அந்தக் கல்லைத் தூக்கினது வீமன் அப்பு தானும். மூத்தார் என்பது அவர் பெயர். நாட்டுக்கூத்திலே வீமனுக்கு ஆடியதால் மூத்தார் என்னும் பேர் மறைந்து போனது. 'வீமன்' என்றால்தான் உடனே விளங்கும்.

வீமனுக்குப் பிறகு எந்த இளந்தாரியாலும் அந்தக் கல்லைத் தூக்க முடியவில்லை. நரிகள் விளையாடாமல் குழந்தைப் பிணங்களுக்குப் பாரமாக அந்தக் கல்லு இன்னும் இருக்கிறது என்பதைவிட சுடலையில் கூட ஆண்மை விளையாட்டுக் காட்டியது அந்தப் பரம்பரை, இப்போது அதைப் பற்றியெல்லாம் பெருமையாகக் கதைப்பதில்லை.

நாம்தான் அதைப் பெருமையாகக் கதைக்கிறோம். அந்தக் கல்லை உருட்டுவதோடு சரி.

'தலைச்சன்' ஆண் குழந்தை தாட்ட பிறகும் ஒரு மாதம் வரையில் தொடக்கு உருத்துக்காறர் சுடலையில் காவல் நிற்பது வழக்கம்.

சவத்தைக் கிளறி அதைத் தலைகீழாகக் கட்டித் தூக்கி தலையில செப்பாணி அடித்து வழிகின்ற ஊனத்தைக் 'கறும சண்டாள மை' என்று சாத்திக்கிழவன் செய்வினை, சூனியங்களுக்கு பயன்படுத்துகின்றதாம். 'கறும சண்டாள மை' எடுத்த முழந்தைப் பிணத்தினுடைய உருத்துக்காரர்களுக்குப் பிறகு தொடங்கும் கெட்டகாலம் என்றுஎல்லலோரும் நம்புகிறார்கள்.

இப்போதும் கூட சுடலையில் ஏழு வாழைக்குட்டிகள் நட்டு வெட்டிப் போடப்பட்டுள்ளது. இராத்திரி சாத்திக் கிழவன் விளையாட்டுக் காட்டியிருக்கிறார்.

"எங்கையிருந்து வந்தனி?"

"கொத்திவெளி ஒற்றைப் பனையில இருந்து வந்தனான்!"

"வேறை யாரோடை இருக்கிறாய்?"

"தனியாகத்தான் அலையுறன்!"

"உனக்கு என்ன தந்தால் போவாய்?"

"நரபலி"

"நரபலி"

"நரபலி"

"நரபலி தரமுடியாது வேறை ஒண்டைச் சொல்லு?"

உலக்கை மாதிரிப் பெரிய காஞ்சுரங் கட்டையாலைதான் பேய்களுக்குச் சாத்துவது வழக்கம். பேய் விடுவதாயில்லை.

நரபலி! நரபலி! நரபலி!

சாத்தல்.... சாத்தல்..சாத்தல்.....

"குமர்ப்பிள்ளை கேட்குதோ உனக்கு? முந்தி எங்கையடா இருந்தனி?"

"விடலையாய் இருந்தனான்"

"இவளில என்னத்தைக் கண்டனி?"

"ஆரோடையெண்டாலும் ஆசைக்குத் தாவவேணும் வழியில அம்பிட்டாள். தவினனான்"

"இது காமப் பிசாசு. களுத்தை முறிக்காமல் போகாது" என்று சாத்திக் கிழவன் பெட்டையின் தாய்க்குக் கூறுகிறார்.

"நரபலி தரமுடியாது வேறை ஒண்டைச் சொல்லடா"

விடலைப் பேய்க்கான பாட்டைக் கேள்வியுடன் தொடங்குகிறார் கிழவன்.

கூரைவேயுமுன்னே குமரியிடத்து
கூறாமல் வந்ததென்ன குமரியிடத்து
நீ கோடி முலையிருக்கக் குமரியிடத்து
நீ கிண்ணி முலை தாவுறியோ
குமரியிடத்து நீ

பச்சைத் தூசணம்தான் பேய்களின் மொழி. அதுதான் எல்லாப் பேய்களுக்கும் விளங்கும்.

சாத்தல்... சாத்தல்.. சாத்தல். .. சாத்தல்...

குங்கிலியப் புகையால் பேய்க்குப் பிடித்தல்.

கூய்...ஊ...கூ...ஊய்...

ஆ... ஞா....ஆ.. ஞா....

"சொல்லடா? சொல்லடா?"

ஒரே புகை... குங்கிலியப் புகை... கோழி!

குமர்ப்பெட்டையை விட்டு விட்டு கோழியை விரும்பியது விடலை.

ஓசை அடங்கி நீண்ட மௌனம்.

"ஒரு ஆட்டிலை, மாட்டிலை போவமெண்டில்லை. கோழியிலை போறாய். கோத்தையின்ரை...யிலை போ.....!"

ஆடோ மாடோ கிடைக்காத ஏமாற்றத்திலும், சின்னக் கோழியோடை ஒரு மனிச உயிரைத் தப்ப வைத்ததில் சாத்தி கிழவனுக்குச் சந்தோசம்தான். ஆனால் மனிச உயிருக்குச் சமமாக சின்னக் கோழியைச் 'சூஸ்' பண்ண விடலைக்கு ஆர் கற்றுக் கொடுத்தது.
?

இப்போதுதான் எனக்கு விளங்கியது. பஞ்சமியில் செத்த மாரிமுத்துக் கிழவனின் காதருகில் ஏன் ஒரு கோழிக்குஞ்சு கட்டிவிடப்பட்டிருக்கிறது என்று.

1 கோழிக்குஞ்சு ≠ 1 மனித உயிர்
நல்ல சமன்பாடுதான்.

# தமிழின் தொன்மையை உலகிற்கு உணர்த்திய அறிஞர் நா.சிவபாதசுந்தரனார்.

ஈழத்தின் பழம்பதியாகிய தொல்புரத்தில் 1920 ல் பிறந்த நாகலிங்கம் சிவபாதசுந்தரனார் அவர்கள் இலங்கை இந்திய தமிழ் அறிஞர்களின் பெருமதிப்பிற்கு பாத்திரமானவர். அதற்கு காரணம் அவர்கள் இயற்றிய பத்தொன்பது நூல்களும் தமிழின் தொன்மையும் புதுமையும்வேறுபட்டகோணத்தில் வெளியிட்டமையே. அவரது நூல்கள் தனியே மொழி சம்பந்தப் பட்டதாக அன்றி சமயம், சரித்திரம், இலக்கியம், அரசியல் என்றுஎல்லா துறைகளிலும் முத்திரை பதித்தவை. அவை எல்லாவற்றிற்கும் சிகரம் போன்று உச்சத்தில் விளங்குவது புறப் பொருள் வெண்பா மாலை ஆராட்சியாகும்.

தொல்காப்பியம் வேதத்திற்கு முந்தியது என்று நச்சினார்க்கினியர் கூறினார். நெடுங்காலமாகையினால் கடல்கோள் முதலிய இடையூறுகளினால் பழம் பெரும் நூல்கள் தமிழர்களிடையே அருகி மறையலாயிற்று இதற்கு உதாரணமாக அமைவது புறப்பொருள் வெண்பா எனினும் தமிழ் மன்னர்கள் சங்கம் அமைத்து அதனை ஒருவாறு பின்வந்தோர் ஓதி அறிய வைத்தனர். இம்மன்னர் மூவேந்தர்களில் சேரமரபு வழிவந்த ஐயனாரிதனாராவர். இவரே புறப்பொருள் வெண்பா மாலையை ஆக்கி தந்தவர்.

பண்டை தமிழரின் பால் உணர்ச்சி தவிர்ந்த வாழ்வியற்கூறு கலைக்குறித்து விளக்குவது புறப் பொருள் வெண்பாமாலை. தமிழரின் ஆழ்ந்த கல்விக்குரிய நூலாக விளங்கும் இன் நூலின் வெண்பாக்கள் படிப்பாளரை இன்புறுத்துவன. அந்த நூலுக்கு உரையும், விளக்கமும் எழுதிய புலவர் சிவபாதசுந்தரனாருக்கு தமிழ் உலகம் என்றும் கடமைப்பாடு உடையது.

புலவரின் புறப்பொருள் வெண்பாமாலை ஆட்சியுரை மூன்று பகுதிகளை கொண்டது. முதலாவது பகுதி 1972 ல் வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்க வெளியீடாக வெளி வந்தது. அதன்சிறப்பை மதித்து இலங்கை அரசு சாகித்திய மண்டல பரிசு வழங்கி கௌரவித்தது.

பின்பு 1992 ம் ஆண்டு பெரும் சிரமங்கள் பொருளாதார சிக்கல்களின் மத்தியில் நாட்டு நிலமையும், ஆசிரியரின் உடல் நிலைமையும் பாதகமாக இருந்த நேரத்தில் அதன் இரண்டாம் பாகம் வெளிவந்தது. இலங்கை அரசு புலவரின் அரிய பணியை மதித்து "தமிழ் மணி" என்ற விருதை வழங்கியதுடன் இன்றைய ஜனாதிபதி D.B.விஜயதுங்கா அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்யப்பட்டார்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்ற காலத்தில் ஊற்று எடுத்த தனது எண்ணமான நூலின் (பு.பொ.வெ.மா) 3ம் பாகத்தை முடிக்காமல் இறையடி சென்று விடுவேனா என்று தனது தளளாத வயதில தயங்கி இருநத நிலையிலும் தமிழ்த்தாயின் கடாட்சத்தினால் அதன் 3ம் பாகத்தையும் 1993ல் வெளியிட்டுவைத்தார். இதற்காக அவரை கொழும்பு தமிழ்சங்கம் கௌரவித்து விழாவெடுத்தது. அதற்கு வந்த புலவர் வித்தியாசமான உணவு, சுற்றுடல் காரணமாக நோய்வாய்பட்டு 1993.12.15ல் தமிழ் தாயின் அடியிணை சேர்ந்தார்.

புலவர் பற்றி அவரின் புறப் பொருள் வெண்பாமாலை 3ம் பாகத்திற்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் பாலசுப்பிரமணியம் (துணைவேந்தர் தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்) பின்வருமாறு கூறுகிறார். "இனக்குழு வாழ்க்கையில் இருந்து படிமுறை வளர்ச்சியில் நாகரீக மெய்திய ஓர் உயர் பண்பாட்டினமாக தமிழினம் உருவான பின்னரே தொல்காப்பியம் தோன்றியது. தொல்காப்பிய புறத்திணையில் ஒரு விழுமிய நாகரீகத்தில் புறப் பொருட் பகுதியாகும். இந்நிலையில் ஆசிரியர் நா. சிவபாதசுந்தரனார் தமிழரின் பண்டை வாழ்வியற் கூறுகள் பலவற்றைப் புறப் பொருளிலக்கணப் பகுதிகளால் விளக்குவது அவரது ஆழ்ந்த மதி நுட்பத்தையும், பன் நூல் புலமையையும் காட்டுவதாய் உள்ளது. அவர்களின் இவ் உரைப்பணிக்கு என் வாழ்த்துக்கள்"

உழைப்பை நோக்காக எழுத்தை ஆயுதமாக்கி வரும் இன் நாளில் ஈழத்தின் போராட்ட சூழலில் பண்டைய போர்முறைகளை விபரிக்கும் புறப்பொருள் வெண்பா மாலையை ஆக்கி தந்த பெருநூல் விற்பன்னர் அமரர் நா. சிவபாதசுந்தரனாரை கௌரவிப்பது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

**இ.ஆறுமுகம்**


## இளையநிலா தமிழ் வீடியோ சஞ்சிகைக்குநிருபர்கள் தேவை

ஜெர்மனி பிரான்ஸ் லண்டன், அவுஸ்திரேலியா உட்பட அனைத்து நாடுகளிலிருந்தும் செய்திகளையோ அல்லது கலை நிகழ்ச்சிகளையோ விபரங்களையோ வீடியோவில் பதிவு செய்து அனுப்பும் நிருபர்கள் தேவை, ஆர்வமுள்ளவர்கள் விரும்பும் பட்சத்தில் இளையநிலா 6 பார்வைக்காக அனுப்பி வைக்கப்படும்.

**நிலா குகதாசன்**
33 KAREN MILES CRES,MARKHAN ONT,L35 1Z6,CANADA
PHONE 905–472–6976

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 St.Dennis Dr

(Don Mills/Eglinton)

## (416) 421 3429

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள்
வாடகைக்குப் பெற...

**★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்**

★ Frozen seafood

CD, Audio **மலிவு விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# A.R.K MARKET

# தொண்டா(man)ஆ செல்ல(ா)ச் சாமியா?



**விபீஷன்**

இன்று இலங்கை அரசியலில் அதிமுத்த அரசியல் வாதியும், அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நீண்டகாலத் தலைவரும், ஒரு தமிழனுமான திரு சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு வயது போய் கிழடு தட்டி "அறளை" பெயருகிற நேரத்தில் எங்கே நீயோ நானா? ஒரு கை பார்த்துவிடுவோம் என்று வரிந்து கட்டிவிட்டார் செல்லச்சாமி. இவர் இ.தொ.கா வின் நீண்டகால செயலாளர்.

இ.தொ.கா விலிருந்து பிரிந்து ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்த அஸீஸ் அவர்களும் அவரது குழுவும் விடுத்த சவால்களுக்கும், என்,எம், பீட்டர், சண். காமினி போன்ற தலைவர்களின் தொழிற்சங்கங்கள் விடுத்த சவால்களுக்கும் ஈடு கொடுத்து இ.தொ.கா என்ற ரதத்தை இன்று வரை இழுத்து வந்த "தொண்டா" இன்று செல்லச்சாமியை ஒரு செல்லாச்சாமி ஆக்கி ஓரங்கட்டி விட்டுத் தனது மகனின் மகனை ஆறுமுகததைத் தனது கதிரையில் இருத்திவிட்டு விடத் துடியாய் துடிக்கிறார்.

இது ஒரு "வாரிசு சீஸன்" போலும். குறிப்பாக தமிழர்களுக்குள் வாரிசு என்பது மித மிஞ்சிப் பொருந்தும்

இலங்கையிற் வட புறமாகப் பிரபாவின் வாரிசு மாத்தையாவா? பொட்டம்மானா என்ற பிரச்சினை. மலையகத்தில் ஆறுமுகமா-செல்லச்சாமியா? என்பது தொண்டமான் இருக்கும் வரை முடிவு கட்டமுடியாது. தமிழகத்திலோ வை.கோ வா-ஸ்ராலினா? என்று பலத்த போட்டி

இந்த மூன்று வாரிசுப் பிரச்சனையிலும் புலிகளும் இந்தியாவும் ஏதோ ஒரு வகையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

ஆச்சரியமாக இருக்கிறதா? இதிலே புலிகளோ இந்தியாவோ பெருமைப்பட்டுக் கொள்வதற்கோ தமிழர்கள் மார்பில் தட்டி பெருமை பேசிக் கொள்ளவோ எதுவும் இல்லை, "எல்லாமே பதவிக்குத் தாண்டா" சங்கதிதான்.

புலிகளுக்குள் உட் பிரச்சனை! அங்கே விசாரணைகள் நடக்கின்றன. நீதியான விசாரணைகளையும், "நல்ல தீர்ப்புக்களையும் லட்சோபலட்சம் மக்கள் அறியக் காத்துக் கிடக்கிறார்கள் உள்ளபடியே "தோளுக்கு மிஞ்சினால் தோழன்" என்ற மாத்தையாவின் மதியாத தன்மையோ "ஆத்திரக்காரனுக்கு புத்திமத்திமம்" என்று தலைவர் செயலோ அல்லது "வீடுகொழுத்திற ராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கிற மந்திரிகளோ" என்று முடிவு கட்டமுடியாத சிக்கல்கள் எங்கோ இருக்கின்றன. எது எப்படியான போதும் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கிற விடயத்தில் இந்தியாவுக்கு உளவு சொன்னார் என்ற குற்றச்சாட்டால் "இந்தியா" சம்பந்தப்பட்ட பிரச்சனை என்றால் மறுப்பீர்களா? இதிலே கவலைக்குரிய விடயம் "தெருவுச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி" என்று சிங்கள அரசு விடுப்புப் பார்த்துக்கொண்டிருக்கிற விடயம் தான்.

தொண்டா செல்வா பிரச்சனை மட்டும் என்னவாம்? இருவரும் இந்தியர் (வம்சாவளி) என்பதால் மட்டும் இந்தியா சம்பந்தம் என்றுமட்டும் நினைத்து விடாதீர்கள். ஐ.தே.கட்சி உடைந்து காமினி லலித் புதிய கட்சி அமைத்தபோது பிரேமாவின் ஓரங்கட்டல் பற்றி அடிபட்டதல்லவா? அத்துடன் பிரேமா இந்திய எதிர்ப்பு- காமினி லலித் இந்திய ஆதரவு என்னும் ஒரு கணக்குப் போடப்பட்டது. இப்போ மத்திய மாகாணத்தில் தொண்டமான் காமினியின் ஜனநாயக தேசிய முன்னணியையும், மத்தியில் ஐ.தே.க வையும் ஆதரிப்பதாக கூறினாரல்லவா? இது எப்படி? இது தான் மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற ஒப்பற்ற தத்துவம் (நன்றி கலைஞர் மு.க) தொண்டாவால் பிரயோகிக்கப்படுகிறதென நினைக்காதீர்கள்.

தொண்டா குழம்பிப் போயிருக்கிறார். செல்லா விஜேதுங்க பலரும் குழம்பிப் போயிருக்க இந்தியாவின் நண்பன் அனுரா பேசிச் சமாதானம் பிடிக்கிறார். இப்போ இந்தியாவின் முக்கியத்துவம் பற்றி ஊகிக்கும்படி உங்களிடமே விட்டு விடுகிறேன்.

பார்த்தீர்களா? நான் சொல்லவந்த முக்கிய விடயத்தை விட்டு விட்டேன. என்னவென்றால் தொண்டா வந்து அரசியலிலே ஒரு ஆனானப்பட்ட ஆள் ஜே.ஆர் ஒரு பீ.எச்.டி என்றால் இவர் டபுள். அதனாலேதான் ஜே ஆரை கோடு கீறி நிற்பாட்டி வைத்தவர். இந்த வருடம் இலங்கையிலே ஒரு அடாவடித் தேர்தல்கள் ஆண்டு. 1977 யூலை யூ.என்.பீ வென்றதிலிருந்து தேர்தல் என்றால் அடாவடி, அடாவடி என்றால் தேர்தல் என்று இரண்டையுமே பிரிக்க முடியாதளவுக்கு நாட்டிலே ஜனநாயக முதிர்ச்சி வந்திருக்கு. யூ. என் பீ யின் ஏஜண்டான தொண்டா இம்முறை தனது மக்களின்ரை வாக்குகளை நூறு வீதம் நம்பத் தயாரில்லை.

தொழிற்சங்க காசை

தொண்டாவின் பேரன் லட்சம் லட்சமாக சுருட்டியதாக செலலா சேறடிக்க நாற்றமெடுக்கிறது. தோட்டத் தொழிலாளியள் அங்கத்துவப் பணம் என்ற பெயரில் தங்களை உறிஞ்சிய இந்த அட்டைகளை இனம் கண்டு கொள்ளத் தொடங்கியுள்ளார்கள் இனிமேலும் தொண்டாவையோ செல்லாவையோ நம்பத் தயாரில்லை. தனது அனுபவத்தைக் கொண்டு புரிஞ்சு கொண்ட தொணடா இதோ தேர்தல்கள் வருகிறதென்டதும் யுத்த அகோரம் தாங்காமல் வடக்கு கிழக்கிருந்து வெளியேறி தெற்கில் வசிக்கும் அகதியாயிருக்கும் அப்பலே தமிழர்களின் வாக்கை உறுதி செய்ய "புறன்ட்லைன்" சஞ்சிகையிலே "ஒரு பிரபாகரன் போனுல் ஆயிரம் பிரபாகரன் தோன்றுவார்கள் என்கிறுர்! சபாஷ் ஏறிவா. இங்குள்ள பத்திரிகை ஒன்று அந்தச் செய்தியை "புறன்ட் லைன்" இல் ஒட்டி சுயதிருப்தியுடன் இதோ தொண்டாவின் பூ ஒரு காதிலே, என்ரை மற்றதிலே என்கிறது.

1976 ல் ஈழப்பிரகடனத்தில் "இணை"த்தலைவராகிப் பின் "சுணை" யில்லாமல் ஐக்கிய தேசியத்தில் சுவிங்கம் போல் ஒட்டி அடாவடித் தேர்தல்களுக்கு அசிங்கமாகத் துணை போய், சமாதானக் கதவுகளைத் துறந்து விடுங்கள் வருகிறேன் வடக்குக்கு என்று சவடால் விட்டு.... பின்வாங்கி.. இப்படியாக உமது ரேஸ்ட்டுக்கு பாவிக்கப்படக்கூடிய "பாவப்பட்ட" இனமல்ல தமிழினம்.

ஆயிரம் பிரபாகரன் தோன்றிய பின் ஆயிரம் தலைவரை சந்திக்கும் அவஸ்தையை விட ஒரு பிரபாகரன் இருக்கும்போதே ஒரு உறுதியான சமாதானத் தீர்வை எடுத்துச் செல்ல முடியாத உமக்கு ஏனய்யா? வாயைக் கொடுத்து.. பழுதாக்கிற வேலை தொண்டாவும் இடறுப்படும்போது "புலிகள்" நாமம் உச்சரிக்கிறுர்.

அங்கோ தொண்டாவாக மு.க செல்லச்சாமியாக வை.கோ, ஆறுமுகமாக ஸ்ராலின் வேடமேற்றிருக்கிறுர்கள் இராமண் ஆண்டாலென்ன? இராவணண் ஆண்டாலென்ன ஒரு வேளைக் கஞ்சிக்கு வழி செய்யுங்கடா என்கின்ற "தமிழ்" மக்கள். தொண்டா மாதிரி கலைஞருக்கும் கிழடு தட்டி விட்டுது. இல்லாட்டி அவரின் கற்பனை வளம் "ஸ்ராலின் என்ருல் சோஸலிசம் "வைகோ என்ருல் "வெறுமை"யிசம் அதாவது வறுமையிசம்.... சோஸலிசம் பற்றி சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது... அதனுலே அதைக்கண்டு பிடித்தவனும் தமிழன்தான்.. ஆகவே தமிழனுகப் பிறந்தவன் ஸ்ராலினை ஆதரிக்காவிடில் அவன் தமிழனேயல்ல என்று அடுக்கு மொழியை உதிர்த்துவிட.... தமிழும் வாழ்ந்திருக்கும்! தமிழனும் வாழ்ந்திருப்பான்! இப்போ தமிழக மக்கள் "திக்குத்தெரியாத காட்டில்"? ஏதோ... தமிழகத்திலும் தலைவர்கள் இடறுப்படும் போது புலிகள் தான் சப்ஜெக்ட்

வை.கோ புதிய அலுவலகம் துறந்து "தாயகம்" என்று பெயர் வைத்திருக்கிருராம். கனடாவுக்கு ஒரு உollect call எடுத்து ஜோர்ஜை கேட்டு விட்டு வைத்திருக்கலாம். எப்படியோ டில்லியில் எம்.பியாய் இருந்தவர், படிச்சவர் யோசிச்சு செஞ்சிருப்பார்.

குளிர் மைனஸ் 30 பாகை என்ருல் மட்டும் அடுத்த வாரமும் "ஆகட்டும் பார்க்கலாம்."


# டிப்பன்னர் விற்பனைக்கு

**பேக்கரி, பியர், வைன்**

**மொன்றியலில் பிஸி மெட்ரோ**

**முன்பாக**

**தொடர்புகளுக்கு**

**514 739 9938**



# வெளிவந்து விட்டது

# இளையநிலா 6

∂ அமெரிக்காவின் அடுத்த பக்கம்
அமெரிக்கச் சிறைகளில்
தமிழ் அகதிகளின் பரிதாப நிலை
∂ நிலா குகதாசனின் அலசல் ரிப்போட்
∂ "இயக்குநர் திலகம் பாலசந்தர்"
அ. கந்தசாமி வழங்கும் ஒரு வித்தியாசமான பார்வை
∂ "உள்ளூர், உலக நடப்புக்கள்"
ராஜ்குமார் வழங்கும் இளைய நிலாவின் செய்தி அறிக்கை
∂ "ஐரோப்பியச் செய்தித் தொகுப்பு"
ஐரோப்பிய முகவர் கஜேந்திர சர்மா வழங்கும்
ஐரோப்பிய சாளரம்
∂ "ரொப் பரடைஸ்"
சினிமா ரசிகர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் புதிய
பாடல் தெரிவு
"கனடாவில் தேரோட்டம், காவடியாட்டம்,
சமாதானத்திற்கான அசுவமேத யாகம், நெஞ்சை
நெகிழவைத்த காட்சி,
கீரிமலைச் சிவன் கோவில் ஒரு விவரணம்"
மற்றும் பல சுவையான அம்சங்களையும் தாங்கி
வெளிவந்து விட்டது.
அனைத்துத் தமிழ் வீடியோக்கடைகளிலும் கிடைக்கும்.

**தொடர்புகளுக்கு (905) 472-6976**

## திதி 22.1.94

## சபாபதிபிள்ளை ராசையா

கட்டப்பிராய் கோப்பாய் தெற்கு
யாழ்ப்பாணம்



தோற்றம் 19.8.1916 — மறைவு 23.12.1993

எம் நெஞ்சிலே நிலைகொண்ட அன்புத் தந்தையே பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் குடும்ப வாழ்விற்கு வழிகாட்டியாக பாரினில் பிறந்து இறையடி என்னும் உயரத்தில் உள்ளவரை ஆராது எம் துயரம். அன்புத் தெய்வமே எங்களைப் பிரிந்து சென்று முப்பத்தியொரு நாட்கள் சென்றுவிட்டன ஆனாலும் உங்கள் நினைவுகள் ஆறுதையா! அன்பான உங்கள் முகம் காண ஏங்கித் தவிக்கின்றோம் அன்புடன் ஆதரித்து அணைக்க யாருமில்லாத உங்களுடன் கூடிய துணைவியும் பிள்ளைகளும் தனியே வாடி கலங்குகின்றன. இனிவரும் பிறப்பெல்லாம் நீங்களே எங்கள் தந்தையாக வரவேண்டும். சொர்க்கத்திலிருந்தாலும் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாக ஒளிவிளக்காக வாழ்ந்திடுவீர்கள். இறையடியில் உங்கள் ஆத்தமா சாந்திக்காக எந்நாளும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் அன்பு மனைவி செல்லம்மா, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் சகோதரங்கள்,
மைத்துனர்கள்,
தகவல் இ. கணேசநாதன்.
416-412 1583

***எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நண்பர்கள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.***

## *மரண அறிவித்தல்*

**விசுவலிங்கம் பொன்னம்பலம்**
**தோற்றம் 18.2.36**
***மறைவு 22.1.94***

**மாடந்தை வல்வெட்டியைச் சேர்ந்த திரு. விஸ்வலிங்கம் பொன்னம்பலம் 22.1.94 அன்று கொழும்பில் காலமானார். இவர் கருணைமலர் அவர்களின் அன்புக் கணவரும் பத்மலோஜினி(கனடா) தயானந்தன்(கனடா) பிரேமதர்ஷினி (ஜேர்மனி) பிரேமானந்தன் (சுவிஸ்) பிரியதர்ஷினி (இலங்கை) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஸ்ரீகாந்தன் (சுவிஸ்) உதயகுமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனுருமாவார்.**

**இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்**

தகவல்
*தயா 514- 334-9153*

### *கியூ றியஸ்...*

சுரண்டவும் இல்லை.

சுன்னாகத்தில் சிங்களவர் ஒருவரின் கடையை எரித்த போது தன் குடும்பத்திற்கு வருமானம் தந்தது இது ஒன்று தான் என்று உதவி அரசாங்க அதிபரிடம் அழுததாக படித்திருந்தேன். எல்லா மனிதர்களையும் ஒரே தராசில் அளவிடுவது யாழ்ப்பாணத்திற்கு புதிதானதல்ல. பின்னர் பல பேக்கரிகள் எரிக்கப்பட்டு சிங்களவர்கள் விரட்டப்பட்டனர்.

பின்னர் பாண் செய்யும் தொழில் நுட்பத்தை யாழ்ப்பாணம் கற்றுக் கொண்டது. பாண் தயாரிப்பு முற்றுமுழுக்க 'தமிழ் தேசிய' மயமாக்கப்பட்டது. தொழில் நுட்பம் வளர்ந்து ஒடியல் மாவில் பாண், மரவள்ளி மாவில் பாண் என்றெல்லாம் வந்தது. நூறு ருத்தல் ஒடியல் மாவிற்கு எவ்வளவு பனம் கிழங்கு வேண்டும்? சாத்தியமாகிற காரியமா இது?
சிங்கள இனவாதத்தின் பிரதிநிதிகளாக சிங்கள மாத்தயாக்கள் விரட்டப்பட்டனர். எங்கள் வாழ்வு முறையிலிருந்து அன்று அந்த மகாத்மாக்கள் மறைந்து போனார்கள்.. இன்றும் ஒரு மாத்தயா.... நினைவுகளிலிருந்து அழிக்கப்படுகிறார்.

யாழ்ப் பாணர்களே இப்படித்தான்.

# மாத்தயா என்ற மனிதர்கள்

## வட(க்கு) மற(ந்த)வர் சோக காதை

## (பாண்) மாத்தயாவும் (பாணப்பிரியன்) கியூறியஸ°ம்

அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

பாணும் தேனீரும் பாழும் பருப்புமிவை
மூணும் கலந்துனக்கு நான் தருவேன்

என்னடா சம்பந்தா சம்பந்தமில்லாத topic எல்லாம் என்பீர்கள். பாண் என்பது மனித வாழ்வில் நெருக்கமான அம்சம்... எத்தனை அரசுகளைக் கவிழ்த்தது இந்தப் பாண்.. பாண் விலையை வரவு செலவுத்திட்டத்தில் கூட்டியதற்காக மக்கள் கொதித்தெழுந்ததால் கவிழ்ந்த அரசுகள் உண்டு. அடிவயிற்றில் அடிக்கும் போது தான் உண்மையில் மக்கள் புரட்சி வெடிக்கும். பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரத்தை அடக்கினாலும் பசியை அடக்க முடியாதே, அதுதான்.

பிரெஞ்சுப் புரட்சியிலும் மக்கள் பாண் இல்லை என்று கொதித்த போது 'பாண் இல்லாவிட்டால் என்ன, கேக்கை சாப்பிடலாமே' என்று கூறினாள் பிரெஞ்சு ராணி அன்ரனெட் என்று கதை. உண்மையில் அதை அவள் சொல்லவில்லையாம். சொன்னாளோ, இல்லையோ, அவளின் தலையும் வெட்டப்பட்டது. மாத்தயா மாதிரி. . சதி செய்தாரோ இல்லையோ, மரண தண்டனை கொடுப்பதில் உறுதியாக நிற்கிறார்கள்.

தமிழிலும் பாண் ஒரு பைந்தமிழ் சொல்லாகி விட்டது. உண்மையில் இது ஐரோப்பிய மொழிகளில் pain என்றிருந்து திரிந்து பாணாகி விட்டது. தமிழிலும் பாணன், பாணி என்று இருந்தாலும் அவை வேறு, இது வேறு. 'இம்பர் வானெல்லையிராமனையே பாடி என் கொணர்ந்தாய், பாணா என்றாள் பாணி'. 'ராமன் உனக்கு பாணைத் தான் தந்தானோ' என்று கேட்டாளோ என்னவோ? இராமனைப் பாடியதற்கு பரிசாக பாண் பரிசாகக் கொடுத்திருந்தால் நன்றாயிருந்திருக்கும், பசி தீர்ந்திருக்கும். இராமனோ 'கைம்மா' வைக் கொடுத்து 'சும்மா கலங்க வைத்தான்'.

நல்லூர் கோவிலிற்கு சொந்தக்காரர் மாப்பாணர் பரம்பரை என்று ஞாபகம். மாவினால் செய்த பாணுக்கும் இவர்களுக்கும் ஏதும் சம்பந்தம் இருக்குமோ? ஏன், யாழ்ப் பாணர்கள் என்னவாம்? இவர்களும் பாணுடன் சம்பந்தமானவர்கள் தானே.

இந்த ஐரோப்பியர்கள் வந்திறங்கிய போது பாணைக் கடித்து வைனைக் குடித்ததைப் பார்த்த இலங்கையின் மூத்தகுடிகள் இவர்கள் கல்லைச் சாப்பிட்டு இரத்தத்தை குடிக்கிறார்கள் என்று பயந்தோடியதாகக் கதை.

★ ★ ★

எதியோப்பியாவில் பச்சை இறைச்சி சாப்பிடுவதுண்டாம். எனது எதியோப்பிய நண்பர் ஒருவர் வலுசுவாரஸ்யமாக அதன் சுவையை எனக்கு எடுத்துரைத்தார். இந்த இறைச்சியை மிளகாய்த் தூளுடன் சாப்பிட்டால் கிருமிகள் தொற்றாது என்றும் வாஷிங்டனில் டாக்சி சாரதிகளாகப் பணிபுரியும் எதியோப்பியர்கள் 'ஹம்பேர்கர்' வாங்குவது போல இறைச்சியை வாங்கிச் சாப்பிடுவார்கள் என்றும் சொன்னார். எதியோப்பியாவை சோமாலியா ஒரு தடவை ஆக்கிரமித்தது. அப்போது பதில் தாக்குதல் நடத்திய எதியோப்பியா சோமாலியாவிற்கு தகுந்த பதிலடி கொடுத்தது. அந்த தாக்குதலில் கலந்துகொண்ட படையணி ஒன்று சோமாலியாப் பிரதேசத்தில் ஊடுருவிய போது அங்கிருக்கும் மாடுகளைப் பிடித்துகொன்று பச்சை இறைச்சியைச் சாப்பிட்டபடி முன்னேறிய போது, அடே, மனித இறைச்சி சாப்பிடுகிறார்கள் என்றபடி சோமாலியர்கள் பயந்து 'வெற்றிகரமாகப் பின் வாங்கினார்களாம்'.

★ ★ ★

இந்தப் பாண் தான் சிறிமாவின் அரசுக்கு அள்ளி வைத்தது. பாண் கியூவில் கால் கடுக்க நின்றவர்கள் தான் சிறிமாவை அரசு கட்டிலில் இருந்து துரத்தினார்கள். காலம் மாறியதைப் பாருங்கள். முன்பு தேர்தலில் இரண்டு கொத்து அரிசி சந்திர மண்டலத்திலிருந்து என்றாலும் கொண்டு வந்து தருவோம் என்று சுதந்திரக்கட்சியினர் வென்றார்கள். பாண் கியூவில் நின்றார்கள். எட்டு றாத்தல் தானியம் தருவோம் என்று ஜே.ஆர் வென்றார். அகதி முகாமில் உணவுக்காக நிற்கிறார்கள். இப்போது உணவுப் பிரச்சனை போய் இனப்பிரச்சனை, பயங்கரவாதப் பிரச்சனையில் நிற்கிறது. அந்த நேரம் பாணுக்காய் கியூவில் நின்ற போது புரட்சி வெடித்திருந்தால் ஒருவேளை பிரச்சனை மாறியிருக்குமோ என்னவோ?

★ ★ ★

இந்த பாண் எமது தமிழர் வாழ்வில் பிரிக்க முடியாத ஒரு பொருள். இதனால் தானோ என்னவோ இங்கே ரேஸ்ட் பாண் ஒரு பெரிய




அறு(சு)வை

ஹிட். காலை, மாலை நேரம்தவறாமல் சுடச்சுட பாண் கிடைக்கிறது. சிறந்த வியாபார முயற்சிக்கான பரிசு இந்த பாண் தயாரிப்பாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என்கிறேன். ஹும். யாரும்கேட்பதாயில்லை. இடியப்பக் காரர்களுக்கே கொடுக்கவில்லை. பாணுக்கா?

★ ★ ★

தாயகம் பிந்தி கடைகளுக்கு வந்ததைக் கண்ட ஒருவர் சொன்னார்.. என்ன அண்ணை, பாண் சுடச்சுட எல்லாக் கடையிலும் கிடைக்கிறது, செய்திகளைச் சுடச் சுட தருகிற தாயகம் பிந்துகிறது என்று. நல்ல ஒப்பீடு தான். ஆனால்.. பத்திரிகையையும் பாணையும் எப்படி ஒப்பிட முடியும்? ஒரு பத்திரிகையை வாங்கினால் வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் படித்த பின்னர் மற்றவர்களுக்கும் கொடுக்கலாம். பாண் அப்படியல்ல. ஒருவர் சாப்பிட்டால் மற்றவர் வாங்கித்தான் சாப்பிட வேண்டும். (இல்லை, எல்லாரும் பயன் பெற வேண்டும் என்றால் மணந்து பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்) மற்றது ஒருவர் இரண்டு றாத்தல் பாணும் வாங்கலாம்.. நாளை சாப்பிட என்று. ஆனால் ஒருவர் இரண்டு பத்திரிகை வாங்க மாட்டாரே..

★ ★ ★

கியூறியஸ் ஒரு பாணுப் பிரியன். குளித்து விட்டு உடலைத் துடைக்காமல் ஈரத்தோடு காற்சட்டையைக் கொழுவிக் கொண்டு (சேட் போடாமல் தான்) பாணை வாங்கி, வீட்டுக்கு வர முன்னர் வழியில் பிய்த்து சாப்பிடும் போது இருந்த சுகம் எங்கும் அவனுக்கு கிடைத்ததில்லை. இந்த பாண் புராணங்கள் எல்லாம் முன்பு ஒரு தடவை அறுத்திருக்கிறேன்.

யாழ்ப்பாணத்து பாண் மலர் போன்றது. அப்படியென்றால் மென்மையானது, அழகானது என்று நினைத்து விடாதீர்கள். அதாவது அதில் தான் அதிகம் வண்டுகள் மொய்க்கும் என்று சொல்ல வந்தேன். யாழ்ப்பாணத்து பேக்கறிகளில் செய்யப்படுகின்ற பாண் புரதச் சத்து மிகுந்தது. மற்ற இடங்களில் செய்யப்படுகின்றவற்றில் மாப்பொருள் மட்டுமே இருக்கும். ஆனால் நம்ம பேக்கறிகளில் வண்டு, புழு போன்ற சீவராசிகள் தொடக்கம் சகல பொருட்களும் இருக்கும்.

ஒரு தடவை கியூறியஸின் தந்தையாரின் தோட்டத்தில் வெங்காயம் கிண்டிய போது அங்கு வேலை செய்தவர்களுக்கு யூரியா உரப்பையில் அவர் வாங்கி வந்த பாணைப் போல புரதம் நிறைந்த பாணை நான் கண்டதில்லை. பாணுக்கு பொருத்தமான அந்த கத்தரிக்காய் குழம்பு இப்போதும் என் நாவில் ஜலம் ஊற வைக்கும். ஆனால் அந்தப் பாண்.. அதில் மாவுக்குள் வண்டு இருந்ததா? இல்லை, வண்டிற்குள் மா இருந்ததா? என்று சந்தேகம். அப்படி பிய்க்க, பிய்க்க கறுப்பாக வண்டுகள்.. சில இடங்களில் நெருப்பு சூட்டில் அந்த வண்டுகள் இருக்கும் இடத்தைச் சூழ மண்ணிறத்தில் இருக்கும்.. என்ன பசியோ, கியூறியஸ் உட்பட அனைவருமே அந்தப் பாணில் வண்டைத் தவத்தி மாவைச் சாப்பிட்டோம்.

நம்ம நாட்டில் மாவில் புழு, வண்டு இருப்பது ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். இங்கே என்றால் கடை சீல் வைக்கப்படும். ஆனால் எதற்கும் மனச்சாட்சிப்படி ஒரு தடவை அரிக்க வேண்டும். ஆனால் அவர்கள் அரித்த பின்பு சேர்பவற்றைக் கொட்டித் தான் அந்தப் பாணைச் செய்தார்களோ என்னவோ?

நான் சொந்த அனுபவத்தில் தலைமயிர் (தலையிலிருந்துதானோ, வேறெங்கோ யாரறிவார்?), விறகு துண்டு, ஆணி என்று பல புதைபொருட்களை பாணிற்குள் கண்டிருக்கிறேன்.

மண் வீடு கட்டுவதற்கு மண் குழைப்பது போல, மாவையும் நிலத்தில் கொட்டி காலால் உழக்கி குழைப்பதாக சிறுவயதில் நண்பர்கள் சொல்வார்கள். எனக்கு அதெல்லாம் பிரச்சனையே அல்ல. புலி ஆதரவாளர்கள் மாதிரி பாண் விசயத்திலும் எனக்கும் end justifies the means. அதாவது முடிவு வழிகளை நியாயப்படுத்தும்.

அரை றாத்தல் பாணும் ஒரு வாழைப்பழமுமே பல தடவைகள் என் பாடசாலை நாட்களில் மதிய நேரங்களில் பசியைப் போக்கியிருக்கிறது. பாணை பார்சல் கட்டும் போது ஒரு வசதி. வாழை இலை தேவையில்லை. வெறுமனே பாணை வெட்டி பேப்பரால் சுத்தினால் சரி.

அதை விட அந்தோனியார் கோவில்களில் கொடுக்கப்படுகின்ற பாண் துண்டுகளைச் சாப்பிடுவதில் தனிக் குஷியும் உண்டு.

★ ★ ★

சுதந்திரக்கட்சி காலத்தில் பாண் கியூவில் நின்றதைப் பலர் மறந்திருக்க மாட்டார்கள். வேறு பலர் அப்படியொன்றிருந்ததாக தெரிந்திருக்க மாட்டார்கள். குறிப்பாக தற்போதைய போராளிகள்.. காரணம் பலர் அதன் பின்னர் பிறந்தவர்கள் தான்.

சிறிலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவப் பிரஜைகள் என்பதற்கு அடையாளமான குடும்ப கூப்பன் அட்டை. (பச்சைக் கூப்பன் வந்தேறு குடிகளுக்காய்!). எங்களுடைய விசா காட், மாஸ்டர் காட், அடையாள அட்டை எல்லாமே அதுதான். மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு அரை றாத்தல் பாண்.. அதற்கு மேல் ஒரு றாத்தல் ஐந்து பேர் வரை என்று போகிறது. ஒரு நாளைக்கு எங்கள் ஊர் பேக்கறிக்கு கோட்டா முறைப்படி கொடுப்பதில் 600 றாத்தல் பாண் தான் செய்யப்படும்.

நூறு றாத்தல் மாவில் 120 றாத்தல் பாண் செய்ய முடியும் என்று ஈழநாட்டில் அப்போது போட்டிருந்தார்கள். தாக்கத்தின் முன்பான நிறை தாக்கத்தின் பின்பான நிறைக்கு சமன் என்ற திணிவுக்காப்பு விதியைப் படித்த பின்னர் இந்த 'உயர்கணிதம்' எனக்கு புரியவேயில்லை. பிறகுதான் தெரிந்தது பாணைப் பொறுத்தவரையில் றாத்தல் என்பது

பதினறு அவுன்ஸ்கள் அல்ல என்பது.

இந்த குடும்ப அட்டை சமர்ப்பித்தால் தான் பாண் கிடைக்கும். இதற்கு காலே நான்கு மணிக்கு எழுந்து போய் கியூவில் நிற்க வேண்டும். மட்டை, பை சகிதம் காவல் நிற்க வேண்டும். இதற்கு போவதற்கு என்றே அந்த நேரத்தில் சீட்டிலிருந்து சைக்கிள் ஓடக் கூடிய என் நண்பன் தயவில் தானும் தொங்கிக் கொண்டு அதிகாலையில் சேர வேண்டும். கியூ வளரும், பொல பொல என்று விடியும் போது ஆறு மணிக்கு நம்பர் தரப்படும். அது கிடைத்தால் பாண் கிடைக்கும். காலையில் போயும் நம்பர் கிடைக்காமல் திரும்புபவர்களும் உண்டு. தாமதமாக வந்து ஏமாறுபவர்களும் உண்டு. நம்பரை வாங்கிக் கொண்டு, அடிமைக் கூட்டமாய் அந்த பேக்கரிக்காரக் கடவுள்களின் தயவுக்காய் அலைந்து வாங்கினல் அரை ருத்தல் பாண் கிடைக்கும். பாண் வாங்குவதற்காகவே செக்கண்ட் ஷோ படம் பார்த்தபின்பு வந்து பேக்கரி வாசலில் படுத்திருந்தவர்களும் உண்டு. பாண் வாங்கச் செல்லாதவர்களின் குடும்ப அட்டைகளை வாங்கி பாணை வாங்கி விலே கூட்டி விற்றவர்களும் உண்டு. இந்த கியூவை எல்லாம் மீறி காலே சாவகாசமாக எழுந்து பல் விளக்கி தேனீர் குடித்து ஜாலியாக வந்து நேரடியாகப் போய் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட பாணை வாங்கிய பெருமக்களும் உண்டு.

பின்னர் சில நேரங்களில் உள்ளூர்க் கடைகளிலும் பாண் கிடைக்கும். சொற்ப அளவே கையிருப்பில் இருந்ததால் எங்கள் பங்குக்கு முந்திக் கொள்ள, அதிகாலை ஐந்து மணிக்கு போனல் தங்கள் கடையில் இதுவரையும் பொருட்கள் வாங்காமல் தங்களிடம் பாண் வாங்க வந்ததற்காக திட்டிக் கொண்ட கடைக்காரர்கள்...

என்னுடைய கிராமத்தின் அப்போதைய சனத்தொகை எண்ணூயிரம் என்று நினைக்கிறேன். எண்ணூயிரம் பேருக்கு அறுநூறு ருத்தல் பாண்! மக்கள் பட்ட அவலம் எழுத்தில் வடிக்க முடியாதது. பட்டினிச்சாவு, பஞ்சம் என்று இல்லாவிட்டாலும் அந்த அவலம் இன்றும் கண்முன் நிற்கிறது. மரவள்ளிக்கிழங்கு, வாழைக்காய் என்று கிடைப்பதை எல்லாம் சமைத்து சாப்பிட்டார்கள் ஒரு காலத்தில். முருங்கையிலே, மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றுள் கொஞ்ச அரிசியைப் போட்டு கஞ்சி குடித்த ஞாபகம் எனக்கு இன்னும் உண்டு.

இன்றைய அரசியலிலும் சுதந்திரக்கட்சிக்கு எதிராகப் போட்டியிடும் ஐ.தே.கட்சி பாண் கியூவைக் காட்டி 'இப்படி நிற்கப் போகிறீர்களா?' என்று கேட்பதுண்டு. அப்படி அந்த கியூவிற்கு அரசியல் தலைமையை நிர்ணயிக்கும் பொறுப்பு இருக்கிறது.

★ ★ ★

யாழ்ப்பாணப் பாரம்பரியங்களில் வெள்ளையர்களின் வருகையால் பாண் வந்து சேர்ந்த பின்னர் குரக்கன் பிட்டும் மரவள்ளிக் கிழங்கும் ஒதுக்கப்பட்டன. அந்நிய மோகம் அப்படி! ரெடிமேட் சாப்பாடு வசதியும் கூட. ஆனாலும் இந்தப் பாண் செய்வதற்கான தொழில் நுட்பம் சிங்களவர்களிடம் தான் இருந்தது. இதனல் தான் முதலில் சிங்களவர்களே யாழ்ப்பாணத்தில் பேக்கறிகளைத் திறந்தார்கள். பின்னர் தமிழர்கள் பேக்கரி தொடங்கினலும் ஒரு Resident Bread Technologist ஐ சம்பளத்திற்கு அமர்த்த வேண்டிய கட்டாயம். இதனல் தான் சிங்கள பௌத்தர்களால் அனுட்டிக்கப்பட்ட போயா தினத்தை தமிழர்களும் கைக்கொள்ள வேண்டிய கட்டாயம். காரணம்.. போயா நாட்களில் யாழ்ப்பாணம் பாண் இல்லாமல் லோ லோ என்று அலையும். சிங்களவர்களுக்கு போயா தினம் ஓய்வு நாள் என்பதால்..

★ ★ ★

இது பற்றி ஒரு கதையே உண்டு. (தமிழ் தேசியவாத). சிங்களவர், தமிழர், வெள்ளையர் சந்திர மண்டலத்துக்கு போனர்கள். ஒரு மாதத்தின் பின்னர் ஓரிடத்தில் சந்தித்து மீண்டும் பூமி திரும்புவதாக பேச்சு. தங்கள் அலுவல்களை முடித்துக் கொண்டு வந்தால்.. தமிழர் சுருட்டுக்கடை வைத்து நன்ருக காசு உழைத்திருந்தார், வெள்ளையர் மண் வகையருக்களை தோண்டிக் கொண்டு வந்தார். சிங்களர் எதுவுமே செய்யவில்லை. ஏன் என்று கேட்டால்.. சந்திர மண்டலத்தில் எல்லா நாளும் போயா நாள்! பிறகு நான் ஏன் வேலை செய்ய வேணும்? என்ருராம்.

★ ★ ★

பஸ் ஸ்ராண்டின் ஒரு புறத்தில் இருந்த சிற்றி பேக்கரி... ஒரு தட்டில் பாணும் சிறிய கோப்பையில் சம்பலும் தருவார்கள். ஆனல் இந்தப் பாணில் பூச்சி, புழு இருக்காது. இறைச்சி வகையருக்களும் கிடைக்கும். சாப்பிட்ட பின்னர் ஒரு பிளேன் டீயும் அடிக்க ஜாலியாய் இருக்கும். பின்பு 77 கலவரத்தில் என்று நினைக்கிறேன், பேக்கரியைப் பாதுகாக்க வந்த இராணுவத்தினர் அருகில் இருந்த அம்பாள் கபேயையும் உடைத்து அங்கிருந்த பொருட்களையும் அள்ளிப் போட்டுக் கொண்டு போனர்கள்.

★ ★ ★

இந்த பேக்கறிக்காரர்கள் தான் யாழ்ப்பாணக் கிராமவாசிகளால் அன்பாக மாத்தயா என்று அழைக்கப்பட்டார்கள். மாத்தயா என்ற பெயரில் இவ்வளவு அன்பா? மாத்தயா என்பது மகாத்மயா என்ற சிங்களச் சொல்லின் திரிபு. மகாத்மா என்ற சொல் கடைசியில் திரிந்து அர்த்தமிழந்து 'சுத்து'மாத்தையா வில் வந்து நிற்கிறது. பிரேமதாச கூட மாத்தயாவை உண்மையில் மகாத்மயா என்ருராம்.

சிங்களச் சொற்களின் திரிபில் எனக்கு முதலில் தெரிந்தது.. கொழும்பில் பஸ்களில் சிங்களத்தில் இதிரியட்ட யன்ன என்று அழகாக எழுதியிருக்கும்.

ஆனுல் கண்டக்டர் சிங்களத்தில் இசராட்ட யண்ட என்று கத்துவார். அந்த வயதில் 'அட, உவனுக்கும் சிங்களம் வாசிக்கத் தெரியாதோ' என்று நினைத்தேன்.

ஷொக்அப்சோர்பர் என்பது தமிழில் சொக்கச்சோவல் என்ற மாதிரித்தான்.

★ ★ ★

இந்த பாண் மாத்தயாக்கள் எங்கள் அன்ருட வாழ்வில் தபால்காரர், மீன்காரர், ஐஸ்பழக்காரர் போன்று தவிர்க்க முடியாதபடி இடம் பிடித்தவர்கள். ஆனுல் இவர் சாதாரண மக்களுடன் தொடர்பு குறைவு. கடைக்காரர்களுடன் தான் தொடர்பு. காலையில் ஒரு றவுண்ட் பாண் வினியோகம். பின்னேரம் காசு கலக்ஷன். சைக்கிளில் பின்னுல் பெரிய கரியர் கட்டி அதில் பெரிய தேயிலேப் பெட்டி வைத்து அதில் பாண் இருக்கும். ஒரு கடைக்கு பாண் கொடுத்தால் அங்கு மிஞ்சிய நேற்றையப் பாணும் அந்தப் பெட்டிக்குள் வீசப்படும். No-questions-asked-return-policy. பின்னர் அடுத்த கடையில் அதே பழைய பாண் சேர்த்துக் கொடுக்கப்படும். கடைக்காரர் அதைப் புதிய பாண் மாதிரி வைத்துக் கொள்வார். ஆனுல் மிஞ்சுகின்ற ரேஸ்ட் பாண்கள் மட்டும் வெட்டித் துண்டாடப்பட்டு றஸ்க் பிஸ்கட்களாகும்.

இருப்பர் போய் புதியவர் வந்தாலும் அவரும் அன்பாக மாத்தயா தான். ரோட்டில் நிற்கின்ற போது போகின்றவர்களிடம் மாத்தயா என்று நட்பு நாடி ஒரு சிரிப்பை உதிர்த்தால் எந்த வெறுப்புமின்றி சிரிப்பே பதிலாக வரும். தங்கவேலு மாதிரி மீசை வைத்தவர்கள் முதல் ஹிந்திப்பட வில்லன்கள் மாதிரி தோற்றம் உள்ளவர்கள் வரை பலர் மாத்தயாக்கள் எனது சிறிய வயது காலம் முதல் தெரிந்தவர்கள்

★ ★ ★

பாண் வினியோகஸ்தர்கள் உண்மையில் மகாத்மாக்கள் தான். மக்களின் பசியைப் போக்குவதால். நம்ம மாத்தயாவும் சிறிய வயதில் வடை வியாபாரம் செய்தார், அதனுல் அவருக்கு வடேக்கர் என்று பெயர் என்று வாசித்தேன். மனதைத் தொட்ட விடயம் அது. 'கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை'. இது கியூறியஸ்க்கும் மாத்தயாவுக்கும் ஒன்ருகப் பொருந்துகிறது. இதனுல் தான் மாத்தயா மீது கியூறியஸ்க்கு அவ்வளவு நெருக்கமோ என்னவோ?

★ ★ ★

நம்ம வீட்டுக்கு முன்னுலுள்ள ரோட்டால் செல்கின்ற மாத்தயாக்கள் என் வீட்டாரின் நட்பு நாடிய சிரிப்புகளால் கவரப்பட்டு வழியில் நின்று பேசிக் கொள்வதுண்டு. கிறிஸ்மஸ் காலங்களில் கேக் செய்து கொண்டு வந்து தருவார்கள். இதில் ஒரு இளைஞர் பின்னுளில் இராணுவத்தில் சேர்ந்ததாகவும் அதன் பின்னரும் யாழ்ப்பாணம் வந்த போது எனது வீட்டுக்கு விஜயம் செய்திருந்தார். இதெல்லாம் அந்தக் காலம். இப்போதென்ருல் சிங்களவருடன் சதி செய்ததாக துரோகி பட்டியலில் கியூறியஸ் வீட்டாரும் அடங்கியிருப்பார்கள். வழியில் நின்று சிரிக்கின்ற குழந்தைகளுக்காக தினசரி பணிஸ் கொண்டு வந்து இலவசமாக கொடுப்பதை கடமையாக நினைத்த மாத்தயாவை தெரியும். தனது பிரிந்து வந்த குழந்தையை நினைப்பாரோ என்னவோ, தினசரி கொடுப்பார். இந்த மாத்தயாக்களில் இருந்த மனிதத் தன்மையும் எங்கள் வாழ்வில் அவர்கள் அடைந்து விட்டிருந்த நெருக்கமும் அவர்களை இனவாதிகளாக ஒருபோதும் காட்டியதில்லே.

பலர் தங்கள் வாழ்நாள் முழுவதையும் குடாநாட்டுக்குள்ளேயே கழித்திருந்தார்கள். பலருக்கு சொந்த ஊராக யாழ்ப்பாணம் தான் இருந்தது. மேசைக்கு கீழாக குனிந்து சுருட்டில் எச்சியைப் பிரட்டி கோடாப் போட்ட சுருட்டாக விற்ற விண்ணர்களை விட இவர்கள் ஒன்றும் மோசமாக எங்களைச்

**32ம் பக்கம் பார்க்க..**

**This newspaper is published by Georgicka communications.
A member of Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650.3216 @Compuserve.com**

**இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிருேம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லே.

## தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**

**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

## மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம், தோசை, அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

## SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

## P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்